www.padippakam.com

சட்டக்கல்லூரி கலவரம்:

# சாதியம் ஒழிப்போம்! தமிழகம் காப்போம்!

வினவு

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

சட்டக் கல்லூரி கலவரம்:

# சாதியம் ஒழிப்போம்! தமிழகம் காப்போம்!!

புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி
வெளியீடு

படிப்பகம்

www.padippakam.com

*நூல்:*

சட்டக் கல்லூரி கலவரம்:
சாதியம் ஒழிப்போம் ! தமிழகம் காப்போம் !!

*முதற்பதிப்பு:*

ஜனவரி 2009

*ஆசிரியர்:*

வினவு
http://vinavu.wordpress.com
vinavu@gmail.com

*வெளியிடுவோர்:*

ச. பரமானந்தம்,
புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி,
90, பாரதி தெரு, பாத்திமா நகர்,
நாஞ்சிக்கோட்டை நெடுஞ்சாலை,
தஞ்சாவூர் - 613 001.

*கிடைக்குமிடம்:*

இரா. சீனிவாசன்,
புதிய கலாச்சாரம்,
16, முல்லை நகர் வணிக வளாகம், 2ஆவது நிழற்சாலை,
(15-ஆவது தெரு அருகில்), அசோக் நகர்,
சென்னை - 600 083.
தொலைபேசி: 044 - 2371 8706 செல்பேசி : 99411 75876

கீழைக்காற்று வெளியீட்டகம்,
10, அவுலியா தெரு, எல்லீசு சாலை,
சென்னை - 600 002.
தொலைபேசி: 044 - 28412367

*விலை:* ரூ. **35.00**

படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | 4 |
| சட்டக் கல்லூரி கலவரம்:<br>சாதியம் எதிர்ப்போம்! தமிழகம் காப்போம்!! | 7 |
| வாசகர் விவாதம் | 13 |
| சட்டக் கல்லூரி:<br>பத்து பேர் சேர்ந்து ஒருவனை...<br>அடேயப்பா என்ன காட்டுமிராண்டித்தனம் | 37 |
| வாசகர் விவாதம் | 51 |
| சாதி மதவெறி அமைப்புகளைப் புறக்கணிப்போம்!<br>மாணவர்கள் ஒரு வர்க்கமாக ஒன்றிணைவோம்! | 81 |


படிப்பகம்

www.padippakam.com

## முன்னுரை

எமது தோழமை அமைப்பான மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் தோழர்கள் சிலர் இணையத்தில் **'வினவு'** எனும் வலைத் தளத்தை நடத்தி வருகிறார்கள். பொதுவில் பொழுது போக்கும், அரட்டையும் நிறைந்திருக்கும் இணைய உலகில் சமூக மாற்றத்திற்கான விசயங்களைப் பேசுவதும், எழுதுவதும், விவாதிப்பதும் சற்று சிரமமான விசயம்தான். இந்த முயற்சியில் வினவு தோழர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்றே சொல்ல வேண்டும்.

சட்டக்கல்லூரியில் நடந்த ஆதிக்கசாதி வன்முறை குறித்து அவர்கள் எழுதிய இரண்டு கட்டுரைகளையும். அந்தக் கட்டுரைகளுக்கு, வந்த பல தரப்பட்ட வாசகர் கடிதங்களையும் இங்கே வெளியிடுகிறோம். இந்த இரண்டு கட்டுரைகளில் முதல் கட்டுரை சம்பவம் நடந்த மறுநாள் வெளியானது. இரண்டாவது கட்டுரை அடுத்த ஒரு சில நாட்களுக்குள் எழுதப்பட்டது. இரண்டு கட்டுரைகளுக்கும் வாசகர்கள் பலர் தங்களது கருத்துக்களை எழுதியிருந்தனர். சாதியம் பற்றி மக்கள் என்ன கருதுகிறார்கள் என்பதோடு பரபரப்பான இந்த சம்பவத்தைத் தாண்டி ஆதிக்க சாதிவெறியை கண்டிப்பதை சமூகம் எப்படி எடுத்துக் கொள்கிறது என்பதையும் இந்த மறுமொழிகளின் மூலம் தெரிந்து கொள்ளலாம். கட்டுரையை விட மறுமொழிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. பக்கங்கள் அதிகம். இது புதிய முயற்சியாகும். இக்கட்டுரைகளையும், மறுமொழிகளையும் வெளியிட அனுமதி கொடுத்த 'வினவு' தோழர்களுக்கு நன்றி.



படிப்பகம்

www.padippakam.com

சட்டக்கல்லூரியில் வன்முறை வெடித்த அன்றே பு.மா.இ.மு தோழர்கள் அம்பேத்கர் சட்டக்கல்லூரிக்குச் சென்று, மேற்கொண்டு அசம்பாவிதம் நடக்காமல் இருப்பதற்குரிய வேலைகளைத் துவக்கினோம். தமிழகத்தின் பிற சட்டக்கல்லூரி மாணவர்கள் மத்தியில் சென்னையில் நடைபெற்ற சம்பவத்தை விளக்கி, ஆதிக்க சாதி வெறி சக்திகள் மாணவர்களிடையே தலையெடுக்காமல் தடுத்து நிறுத்தும் முயற்சியில் எமது தோழர்கள் ஈடுபட்டார்கள். எல்லா மாணவர் அமைப்புக்களும் அரசியல் கட்சிகளும் பொத்தம் பொதுவாக வன்முறையைக் கண்டிப்பதாக ஆபத்தில்லாத பிரச்சாரத்தில் ஈடுபட்ட போது எமது அமைப்பு மட்டும் தேவர் சாதிவெறியையும் அதற்கு துணை நின்ற ஆதிக்க சாதிவெறி இயக்கங்களையும் குறிவைத்து பிரச்சாரம் செய்தது. பிற்படுத்தப்பட்ட சாதி மாணவர்களிடம் கூட தலித் மாணவர்களின் தரப்பில் உள்ள நியாயத்தை கொண்டு சேர்த்தோம்.

தொலைக்காட்சிகளில் திரும்பத் திரும்பத் காண்பிக்கப்பட்ட காட்சியின் மூலம் கட்டியமைக்கப்பட்ட பொதுக்கருத்து தோற்றுவித்திருந்த உணர்ச்சிகரமான நிலையில், ஆதிக்க சாதிவெறியைக் கண்டிப்பதும், தாழ்த்தப்பட்ட மாணவர்களின் தரப்பில் உள்ள நியாயத்தை எடுத்துரைப்பதும் அவ்வளவு எளிமையானதாக இல்லை. ஆயினும் இந்த இடரை பு.மா.இ.மு சந்தித்து வெற்றி கண்டது. பல கல்லூரிகளில் இதைப் பற்றிய பிரச்சாரமும், விடுதிகளில் அறைக் கூட்டங்களும் ஏற்பாடு செய்து உண்மையை விளக்கினோம். இரு தரப்பு மாணவர்களும் இந்தக் கூட்டங்களுக்கு வந்தனர். இந்த பிரச்சார இயக்கத்தின் தொடர்ச்சியாக சென்னையில் அப்போது வெளியிடப்பட்ட பிரசுரத்தையும் இந்நூலில் வெளியிட்டிருக்கிறோம்.

பொதுவில் தலித் மாணவர்களுக்கெதிரான கருத்தே கோலேச்சிக் கொண்டிருந்த நிலையில் உயர்நீதிமன்றமும் அதற்கு இசைவாக அம்பேத்கர் சட்டக்கல்லூரி விடுதியைத் திறக்கக்கூடாது என்று தடை விதித்தது. இதற்கு எதிராக மாணவர்களிடையே பிரச்சாரம் செய்து விடுதியை செப்பனிட்டு விரைவில் திறக்கவேண்டும்



படிப்பகம்

www.padippakam.com

என கோரிக்கையை வைத்து போராடினோம். தற்போது விடுதியைத் திறப்பதற்கு உத்தரவிட்டு விடுதியை சீரமைக்கும் பணிகள் நடந்து வருகின்றன. மற்றொருபுறம் சட்டக்கல்லூரி பிரச்சினையை வைத்து 'மாணவர்களுக்கு அரசியல் கூடாது, சங்கங்கள் கூடாது, கல்லூரி தேர் தல்கள் கூடாது' என மொத்தமாக ஜனநாயக உரிமைகளைப் பறிக்கும் கோரிக்கைகளும் பலத்த குரலில் பேசப்பட்டன. மாணவர்களிடையே சாதிய ரீதியான பிளவை ஏற்படுத்தி இறுதியில் அவர்களது அடிப்படை உரிமைகள் பறிக்கப்படும் சதியை எதிர்த்தும் பிரச்சாரம் செய்தோம்.

காசு இருப்பவனுக்குத்தான் கல்வி என தனியார்மயம் கல்வி நிறு வனங்களை ஆக்கிரமித்திருக்கும் பாதகமான சூழ்நிலையில் மாண வர்கள் சாதி ரீதியாக பிரிந்து நிற்பதில் உள்ள இழப்பையும் மாணவர் களிடையே பிரச்சாரம் செய்தோம். வர்க்கமாக அணிதிரண்டு போராட வேண்டிய தேவை முன்னெப்போதையும் விட இப்போது அவசியமாக இருக்கிறது. அதற்குத் தடையாக உள்ள சாதிவெறியும், ஆதிக்க சாதி மனோபாவமும் களைந்து கொள்ளப்படவேண்டிய கழிவுகள் என் பதை மாணவர் உலகம் கற்றுக் கொள்ளவேண்டும். பார்ப்பனியம் விதித்திருக்கும் சாதியத் தடைகளை அகற்றுவதற்கான போரில் ஒரு பங்காற்றும் என்ற நம்பிக்கையுடன் இந்த நூல் உங்கள் பார்வைக்கு வருகிறது. ஆதரவு தருக.

தோழமையுடன்
புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி,
தமிழ்நாடு.



படிப்பகம்

www.padippakam.com

சட்டக் கல்லூரி கலவரம்:

# சாதியை ஒழிப்போம் ! தமிழகம் காப்போம் !!

மிகுந்த வேதனையுடன் இப்பதிவை எழுதுகிறோம். ''சென்னை அம்பேத்கர் சட்டக் கல்லூரியில் மாணவர்கள் மோதல்'' என்ற தலைப்பில் இன்றைய காலைத் தினசரிகள் முதல் பக்கத்தில் வெளியிட்டுள்ள புகைப்படங்கள் அதிர்ச்சியூட்டுகின்றன. தலித் மாணவர்களுக்கும் தலித் அல்லாத மாணவர்களுக்கும் இடையிலான மோதல் என்று டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளேடு தனது செய்தியில் இது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறது. தலித் அல்லாத மாணவர்களின் சாதி என்ன என்பது பற்றி மட்டும் வாசகரின் ஊகத்துக்கு விட்டு விட்டது.

''ஒரு மாணவன் பிணம் போலக் கிடக்க வேறு சில மாணவர்கள் அவனை ஆத்திரம் தீரக் கட்டையால் அடிக்கும் காட்சியை'' சன் செய்தி திரும்பத் திரும்ப ஒளிபரப்பிக் கொண்டே இருக்கிறது. காணும் எவரையும் பதைக்கச் செய்கிறது அந்தக் காட்சி. இந்தக் காட்சியின்படி ''ஈவிரக்கமில்லாமல் அடிக்கும் அந்த மாணவர்கள்தான் குற்றவாளிகள்'' என்ற முடிவுக்கே பார்வையாளர்கள் வரமுடியும். அடிக்கும் மாணவர்கள் எந்தச் சாதி, அடிபடும் மாணவர்கள் என்ன சாதி என்பது பற்றி பத்திரிகைகளோ தொலைக்காட்சியோ எதுவும் குறிப்பிடவில்லை என்றாலும், இந்நேரம் மாணவர் உலகத்துக்கும் சாதிச்சங்கத் தலைவர்களுக்கும் அரசியல் கட்சித்தலைவர்களுக்கும் மாணவர்களின் ''சாதி அடையாளம்'' பற்றிய தகவல் போய்ச் சேர்ந் திருக்கும். 'யார் நம்மாளு' என்பதைத் தெரிந்து கொண்டபின் மேற்



படிப்பகம்

www.padippakam.com

கூறிய புகைப்படங்களும் காட்சிகளும் புது வீரியம் பெற்றுத் தமிழ் நாட்டை எரிக்கத் தொடங்கும். ஏற்கெனவே சென்னை எருக்கஞ்சே ரியில் ஒரு அரசுப்பேருந்து எரிக்கப்பட்டு விட்டது. இப்படங் களினால் வர இருக்கும் நாட்களில் 1998-இல் தென் மாவட்டங்களில் நடந்தது போன்ற ஒரு சாதிக் கலவரம் தமிழகத்தில் நடைபெறாமல் இருந்தால் அது அதிசயம். அந்த அதிசயம் நடக்க வேண்டும் என்பதே எமது விருப்பம்.

இனி சம்பவத்திற்கு வருவோம்.

சமீபத்தில் பசும்பொன் தேவர் ஜெயந்தியைக் கொண்டாடிய, சென்னை அம்பேத்கர் சட்டக் கல்லூரியைச் சேர்ந்த தேவர் சாதி மாணவர்கள், அதற்காக வெளியிட்ட சுவரொட்டியில் சட்டக் கல் லூரியின் பெயரில் இருந்த ''அம்பேத்கர்'' என்ற சொல்லைக் கவன மாகத் தவிர்த்து விட்டு வெறுமனே 'சட்டக்கல்லூரி மாணவர்கள்' என்று வெளியிட்டதாகவும், இதனால் தலித் மாணவர்கள் கோபம் கொண்டதாகவும், அதனைத் தொடர்ந்து சிறு சிறு பூசல்களாக உரு வாகிப் புகைந்து கொண்டிருந்த முரண்பாடு நேற்றைய மோதலில் வெடித்திருப்பதாகவும் கூறுகிறார்கள். இந்த விவரம் பற்றிய முழு உண்மை அல்லது மேலும் பல புதிய தகவல்கள் இனி வெளிவ ரலாம்.

ஆனால் நடைபெற்றுள்ள இந்தத் துயரச் சம்பவத்தை விளங்கிக் கொள்ள இப்படிப்பட்ட ஆதாரங்கள் எதுவும் நமக்குத் தேவை யில்லை. தேவர் சாதியினர் தலித் மக்கள் மீது செலுத்தும் ஆதிக்கமும் தீண்டாமைக் கொடுமையும் தமிழகம் அறிந்ததுதான். அதன் வடி வங்கள் வேறாக இருக்கலாம், சம்பவங்கள் வேறாக இருக்கலாம். ஆனால் அதன் சாரம் இதுதான். தென்மாவட்டங்களில் நடைபெறும் பல கலவரங்களுக்கு சிலை உடைப்புகள்தான் துவக்கப் புள்ளிகளாக இருக்கின்றன என்பதை நாம் அறிவோம். அவை வெறும் கற்சி லைகள் பற்றிய பிரச்சினைகள் அல்ல.

அம்பேத்கரை சட்டமேதை என்று இந்தியா மேலுக்குக் கொண் டாடினாலும், அவருக்கு பாரத ரத்னா விருது கொடுத்து கவுரவித்தி ருந்தாலும், அவரது பிறந்த நாளில் சர்வ கட்சித் தலைவர்களும் சிலைக்கு மாலை மரியாதை செய்தாலும், அவை எல்லாம் தேர்த லுக்காக பாரதிய ஜனதா தலைவர்கள் ''ரம்ஜான் கஞ்சி'' குடிப்பதைப் போன்ற நிகழ்வுகள்தான்.



படிப்பகம்

www.padippakam.com

மராத்வாடாவின் மராத்தா சாதியினரிலிருந்து தமிழகத்தின் தேவர் சாதியினர் வரை எல்லா ஆதிக்கசாதி வெறியர்களுக்கும் அம்பேத்காரின் பெயர் வேப்பங்காயாக கசக்கிறது என்பதே உண்மை. எனவே தேவர் ஜெயந்திக்கு போடும் சுவரொட்டியில் ''அம்பேத்கர் பெயர் இடம்பெறக் கூடாது'' என்ற சாதி கௌரவம் அந்த மாணவர்களைத் தடுத்திருக்கும். இதனைப் புலனாய்வு செய்தெல்லாம் கண்டு பிடிக்கத் தேவையில்லை. இது உள்ளங்கை நெல்லிக்கனி.

தங்களைத் தீண்டத்தகாதவனாக நடத்தும் ஆதிக்க சாதியினர் தங்கள் தலைவரையும் அவ்வாறே நடத்துவதை தலித் மாணவர்கள் சகித்துக் கொள்ளத் தயாரில்லை. தட்டிக் கேட்டிருக்கிறார்கள். இதனால் கடந்த சில நாட்களாக இரு பிரிவு மாணவர்களுக்கும் உரசலும், மோதலும் நடந்திருக்கிறது. இந்த உரசல் அடுத்தடுத்து சிறு சிறு சம்பவங்களால் தீப்பிடித்திருக்கலாம். அத்தகைய ஒவ்வொரு சம்பவத்திலும் தேவர் சாதி மாணவர்கள்தான் தவறு செய்திருப்பார்கள், தலித் மாணவர்கள் தவறே செய்திருக்க மாட்டார்கள் என்று நாம் ஊகிக்க வேண்டியதில்லை. தலித் மாணவர்களும் தவறிழைத்திருக்கலாம். ஆனால் இந்த மோதலின் அடிப்படை அத்தகைய சிறு சம்பவங்களிலிருந்து வரவில்லை என்பதே முக்கியம். சொல்லப்போனால், ''சுவரொட்டியில் அம்பேத்கர் பெயர் இல்லை'' என்ற காரணம் கூட இந்த மோதலுக்கு அடிப்படையாக அமைந்த காரணம் அல்ல. மோதலின் அடிப்படை என்பது தம் அன்றாட வாழ்க்கையில் தலித் மக்களும் தலித் மாணவர்களும் அனுபவிக்கும் சாதிக் கொடுமையில் இருக்கிறது; புதிய தலைமுறை தலித் இளைஞர்கள் அதை எதிர்ப்பதால், ஆதிக்க சாதியினருக்கு வரும் கோபத்தில் இருக்கிறது இந்த மோதலின் அடிப்படை.

புகைப்படங்களின் பிந்தைய பிரேம்களில் கட்டையால் அடி வாங்கும் மாணவன், சற்று நேரத்துக்கு முன் கையில் ஒரு அடி நீளக் கத்தியுடன் பாய்ந்து வருவதையும் பார்க்கிறோம். இந்தக் கத்தி ஒரு தலித் மாணவனைப் பதம் பார்த்திருக்கிறது. விளைவு நாம் தொலைக்காட்சிகளில் கண்ட அந்தக் காட்சி.

சென்னை சட்டக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்களில் விடுதியில் தங்கிப் படிக்கும் பெரும்பாலானோர் தலித் சமூகத்தைச சேர்ந்தவர்கள். டே ஸ்காலர்ஸ் மாணவர்களில் சாதி இந்துக்கள் அதிகம். மற்ற கல்லூரிப் பட்டங்களைப் படிப்பதற்கும் வழக்கறிஞர் கல்விப் படிப்புக்கும் வேறுபாடுகள் உண்டு. பொறியியல், மருத்துவம்



படிப்பகம்

www.padippakam.com

போன்ற வசதியான படிப்புகளைப் படிக்கவைக்க வாய்ப்பில்லாத ஏழை நடுத்தர வர்க்கத்தினர்தான் தம் பிள்ளைகளை சட்டக் கல்லூரியில் சேர்க்கிறார்கள். பி.ஏ, பி.எஸ்.ஸி படிப்பதை விட இது பரவாயில்லை என்று வருபவர்களும் அதிகம். நிச்சயமற்ற வருவாய், நிச்சயமற்ற வாழ்க்கை என்பதை மட்டுமே வழங்கும் வழக்குரைஞர் தொழிலை கொஞ்சம் வசதி படைத்தோர் யாரும் தேர்ந்தெடுப்பதில்லை. அந்த வகையில் சென்னை கல்லூரியில் மோதிக்கொள்ளும் இரு தரப்பு மாணவர்களும் சாதாரண வர்க்கங்களைச் சேர்ந்தவர்களாகவே இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

வசதி இல்லை என்பதால் சாதி உணர்வு குறைந்து விடுவதில்லையே. ஆதிக்க சாதி மாணவர்கள் என்னென்ன சாதியைச் சேர்ந்தவர்கள் என்று நமக்குத் துல்லியமாகத் தெரியாது. இந்தப் பிரச்சினையில் தேவர் ஜெயந்தி சம்பந்தப்பட்டிருப்பதால் தேவர் சாதி மாணவர்களின் பாத்திரம் முக்கியமானது என்று ஊகிக்க முடிகிறது. தேவர் சாதியினர், சாதிய ரீதியிலும், அரசியல் ரீதியிலும் முன்னிலை வகிப்பதால் பிறரைக் காட்டிலும் இவர்களிடம் ஆதிக்க மனோபாவம் தூக்கலாகவே இருப்பதைக் காண்கிறோம்.

தலித் மாணவர்களோ மற்ற படிப்பு படிப்பதற்கு வசதியில்லாதவர்கள். இதையாவது படித்து முன்னுக்கு வரவேண்டுமென ஆர்வம் கொண்டவர்கள். சென்னை விமான நிலையத்திற்கு எதிரே இருக்கும் திரிசூலம் மலையில் கல்லுடைக்கும் தென்மாவட்டத்தைச் சேர்ந்த தலித் தொழிலாளிகளின் குடும்பங்கள் வசிக்கின்றனர். எந்த வசதியுமில்லாமல் படிக்க வரும் பல மாணவர்களை இக்குடும்பங்கள் ஆதரிப்பது வழக்கம். ஏழ்மை விதிக்கப்பட்டிருக்கும் தம் சமூகத்தில் இந்தப் பையன்களாவது படித்து முன்னுக்கு வரட்டுமே என்று அம்மக்கள் இவர்களை ஒரு லட்சியத்துடன் பராமரிப்பதை இன்றும் பார்க்கலாம்.

தென்மாவட்டங்களில் இருக்கும் எல்லாப் பள்ளிகளும், கல்லூரிகளும் சாதி இந்துக்களுக்குச் சொந்தமானவை என்பதால் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் அங்கே நவீன அடிமைகளாகத்தான் நடத்தப்படுகிறார்கள். ''கோட்டா மாணவர்கள், சத்துணவு கோஷ்டி'', என்று பலவிதங்களில் அங்கே தலித் மாணவர்கள் கேலி செய்யப்படுவது வழக்கம். வகுப்பறைக்குள் தலித் மாணவர்களுக்கான ஸ்காலர்ஷிப் சுற்றறிக்கை வந்தாலே மேல்சாதி மாணவர்கள் ஏளனப்பார்வையுடன் சிரிப்பது வழக்கம். இப்படிப் பல்வேறு வகைகளில் தலித்



படிப்பகம்

www.padippakam.com

மாணவர்கள் அநீதியாக நடத்தப்படுவதால் மாணவர்கூட்டம் தெளிவாக சாதிய ரீதியாகப் பிரிந்திருப்பதும் அவர்களுக்குள் பல சர்ச்சைகள், சண்டைகள் வருவதும் வழக்கம். தென் மாவட்டங்களைப் போல வெளிப்படையாக இல்லையென்றாலும், சென்னைக் கல்லூரியிலும் சாதி உணர்வு நீரு பூத்த நெருப்பாகவே இருந்திருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

90களின் இறுதியில் நடந்த தென்மாவட்டக் கலவரத்தில் வாழ்க்கை இழந்த ஒரு தலித் மாணவனின் கதை இது. பதினெட்டு வயது கூட நிரம்பாத அந்த தலித் மாணவன் ஒரு கொலை வழக்கில் கைது செய்யப்பட்டான். பிறகு குண்டர் சட்டத்தில் சிறைவாசம் தொடர்ந்தது. பாளையங்கோட்டை சிறையில் தேவர்சாதி கைதிகள் அவனைப் பழி வாங்குவதற்குத் திட்டம் தீட்டியிருக்கின்றனர். இதை அறிந்த அந்த மாணவன் முந்திக் கொண்டான், சாப்பிடும் அலுமினியத் தட்டை உடைத்துக் கத்தியாக்கி தேவர் சாதிக் கைதி ஒருவரைக் குத்தி விட்டான். இப்போது அந்த மாணவனின் நிலை என்னவாக இருக்கும்? அவனைப் படிக்கவைக்க விரும்பிய பெற்றோரின் கனவு என்னவாக இருக்கும்?

கொடியன்குளம் கலவரத்தை ஒட்டி பல தலித் மாணவர்கள் பள்ளி, கல்லூரிகளை விட்டு நீக்கம் செய்யப்பட்டார்கள். இதனாலேயே பல நூற்றுக்கணக்கான மாணவர்களுக்குக் கல்வி பறிபோனது. இன்றைக்கும் அவர்கள் கலவர வாய்தாவுக்காக நீதிமன்றத்திற்கு அலைந்தவாறு வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு நிற்கிறார்கள். சாதி இந்துக்களுக்கு சொந்தமான தனியார் கல்லூரிகள் மட்டும்தான் இப்படி அவர்களை நடத்துகின்றன என்பதில்லை. சென்னையில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதிகள் அனைத்திற்கும் நீங்கள் சென்று பார்த்தால் இந்த அரசு தலித் மாணவர்களை எப்படி தொழுவத்தில் இருக்கும் மாடுகளைவிடக் கேவலமாக நடத்தி வருகிறது என்பதைப் பார்க்கலாம். இப்படிச் சமூக ரீதியிலும், அரசாங்க ரீதியிலும் பல்வேறு தடைகளைத் தாண்டித்தான் தலித் மாணவர்கள் தலையெடுக்கப் போராடி வருகிறார்கள்.

இப்போது மீண்டும் சட்டக் கல்லூரிக்குத் திரும்புவோம்.

ஒரு விபரீதத்தை விதைக்கிறோம் என்று தெரிந்தே ஊடகங்கள் சட்டக் கல்லூரிக் காட்சிகளை விலாவாரியாகப் பதிவு செய்திருக்கின்றன. ''போலீசு கைகட்டி வேடிக்கை பார்த்தது'', ''கருணாநிதி



படிப்பகம்

www.padippakam.com

ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து விட்டது'' என்று ஏதேனும் ஒன்றை நிரூபிப்பதே தங்கள் நோக்கம் என்று அவர்கள் கூறிக் கொள்ளலாம். சில போலீசார் பணிநீக்கம், மாற்றல், ஒரு சட்டசபை வெளிநடப்பு என்பதற்கு மேல் இவர்கள் யாருக்கும் எதுவும் நடக்கப் போவதில்லை.

ஆனால் தமிழகத்துக்கு என்ன நடக்கப் போகிறது? மீண்டும் பல கொடியன்குளங்கள் துவங்கலாம். தமிழகமெங்கும் அடுத்த சுற்றுக் கலவரத்தை இச்சம்பவம் ஆரம்பித்து வைக்கலாம். மீண்டும் பல தலித் மாணவர்கள் தங்கள் வாழ்க்கையினை இழந்து ஆயுள் கைதியாக சிறைக்குள் செல்லலாம். கஞ்சிக்கு வழியில்லை என்றாலும் சாதிக் கௌரவத்தை விட முடியாத ஆதிக்கசாதி மாணவர்களும் தங்கள் வாழ்க்கையினைச் சிறைக்குள் தொலைக்க நேரிடலாம். பிறகு அவர்கள் தாதாக்களாகவோ, சாதிச் சங்கத் தலைவர்களாகவோ பதவி உயர்வு பெற்று தமிழக்கைத் தொடர்ந்து சாதிவெறியின் பிடியில் இருத்தி வைக்கலாம்.

உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்று சாதி ரீதியாகப் பிரித்து பயிற்றுவித்திருக்கும் பார்ப்பனியத்தின் விளைவாக நடக்கும் இந்தக் கொடுமைகளுக்கு இதுவரை விடிவில்லை என்பதை ஏற்றுக்கொண்டு அடுத்து வர இருக்கும் கலவரச் செய்திகளுக்காக அச்சத்துடன் காத்திருக்க வேண்டும். அல்லது இந்த வெறித்தனத்தைத் தடுத்து நிறுத்த களத்தில் இறங்கி நம்மால் இயன்றதனைத்தையும் செய்ய வேண்டும்.

களத்தில் இறங்கிச் செய்வது என்றால் அதற்கு கையில் தடியை எடுக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆதிக்க சாதியில் பிறந்த ஒவ்வொருவரும் இந்த சந்தர்ப்பத்தில் தீண்டாமை என்னும் அநீதிக்கு எதிராக உரத்துப் பேசவேண்டும். செயல்படவேண்டும். சாதி எதிர்ப்புப் பதிவுகளால் பதிவுலகம் நிறைய வேண்டும். பதிவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

●●●



படிப்பகம்

www.padippakam.com

## வாசகர் விவாதம்

**பிராக்னாஸ்டிக் ஸேஜ்:** *சரியாய் சொன்னீர்கள் வினவு. வலையுலக நண்பர்களே தயவு செய்து வன்முறையின் விளைநிலமான சாதி ஒடுக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுங்கள்!*

**பாலன்:** *''அந்த அதிசயம் நடக்கவேண்டும் என்பதே எமது விருப்பம்'' என்கிறீர்கள். ஆனால் நீங்கள் எழுதி உள்ள பதிவு சாதிக் கலவரத்தை தூண்டுவது போல அல்லவா உள்ளது!*

**பிராக்னாஸ்டிக் ஸேஜ்:** *ஜாதி மோதல்களைத் தீர்த்து இந்து ஒற்றுமையை நிலைநாட்டுவதில் பங்களிக்க வக்கில்லாமல் இந்துக்களின் ஒற்றுமையைப் பற்றி வாய்ப்பந்தல் போடும் ஆர்.எஸ்.எஸ் எங்கே?*

**முருகேசன்:** *இப்பொழுது தெளிவாக புரிகிறது. இந்த கடமை தவறாத காக்கிச்சட்டை கார்மேகங்கள், ஜாதி வெறி பிடித்த மாணவர்களை என்ன செய்வது? இவர்களைப் பெற்ற பெற்றோரினை என்ன செய்வது?*

*''ஆதிக்கசாதியில் பிறந்த ஒவ்வொருவரும் இந்த சந்தர்ப்பத்தில் தீண்டாமை என்னும் அநீதிக்கு எதிராக உரத்துப் பேசவேண்டும். செயல்பட வேண்டும்.''*

*— இதை நான் வழிமொழிந்து, தேவர் ஜாதியில் பிறந்த நான், தீண்டாமை எனும் அரக்கனுக்கு எதிராகக் குரல் கொடுக்கிறேன். ஜாதிக்காக சண்டை போடுபவர்களை எதிர்க்கும் குரலில் என் குரல் முதல் குரலாக இருக்கும்.*



படிப்பகம்

www.padippakam.com

அறிவுடை நம்பி: ''ஜாதி என்ற வார்த்தையே தமிழ் கிடையாது'' என்றார் பெரியார். எத்தனை நூற்றாண்டுகள் ஆனாலும், உழைக்கும் வர்க்கத்தைப் பிரித்து வைத்து, வயிறு வளர்க்கும் பார்ப்பனிய கும்பல், அதற்கு அடுத்தபடியான (சுரண்டல்) சமூகமான மற்ற மேல் ஜாதிகள் ஆகியோரே இந்த மாதிரியான இழிநிலைகளுக்குக் காரணம். பார்ப்பனியத்திற்கு அடுத்தபடியாக தாம் இருப்பதாக நினைத்துக் கொள்ளும் மற்ற சுரண்டல் சமூகங்கள், தாங்கள் காலம் காலமாக மிகக் கேவலமான முறையில், தந்திரமான மறைமுகக் கருவிகளாக பார்ப்பனியத்திற்குப் பயன்படுகிறோம் என்பதை உணர வேண்டும்.

தாங்கள் தற்போது அனுபவித்து வரும் (அழுகி வரும்) நிலபிரபுத்துவ நலன்களும், சிறு மற்றும் குறுந்தொழில்கள், மற்ற தொழில்கள், நிதி மூலதனம் தங்கள் கட்டுப்பாட்டில் இருந்து போய் விடுமே என்ற பயமுமே, இந்தச் சுரண்டல் முதலாளிகளையும், அவர்களால் மூளைச்சலவை செய்யப்படுகின்ற, இந்த ஜாதியைச் சார்ந்த மக்களும், இவ்வாறு வன்முறை செய்யத் தூண்டுகிறது. இந்த பயத்தின் காரணமாக அவர்கள் எடுக்கின்ற ஒரு பாதுகாப்பு வேலியே, தாழ்த்தப்பட்டோரின் மீதான அவர்கள் அடக்குமுறை வடிவம் என்பதை அவர்கள் உணர வேணடும். தற்போது உள்ள தாராளமயத்திற்கு எதிராகப் போராட, உழைக்கும் வர்க்கம் ஒன்றுபட்டுப் போராட வேண்டும். இல்லாவிட்டால், இந்த வேற்றுமைகளை தாராளமயம் மிக நன்றாகப் பயன்படுத்திக் கொள்ளும். உதாரணமாக, தனியார் நிறுவனங்களில் மிக உயர்பதவிகளில், பார்ப்பனியர்களே அமர்த்தப்படுகிறார்கள். தமிழர்கள், ஜாதியத்தால் பிரிந்து போய் கிடக்கிறார்கள். சில பார்ப்பனியர் அல்லாத சுரண்டல் சமூகங்களுக்கும் இந்த மாதிரியான பணி கிடைக்கிறது என்பதும் உண்மையே. ஆனால், அது அந்த சமூக மக்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடும்போது மிகக் குறைவு என்பதை உணர வேண்டும். ''திருந்துங்கள் !! இல்லாவிட்டால், அழிந்து போவீர்கள்''

கே. செல்வபெருமாள்: வினவு நீங்கள் நன்றாக எழுதியுள்ளீர்கள் என்று சொல்லி பாராட்டுவதை விட, நன்றாகவும் - ஆழமாகவும் இதனை அலசியுள்ளீர்கள். சாதிய மற்றும் தீண்டாமைக் கொடுமைக்கு எதிராகப் போராடுவது என்ற களத்தை இன்றைக்கு இழந்து நிற்கிறது தமிழகம். குறிப்பாக பெரியார் இந்துத்துவ பார்ப்பனீயத்



படிப்பகம்

www.padippakam.com

திற்கு எதிராகப் போராடியதை அவர் வெறும் பார்ப்பனர்களுக்கு எதிராகத்தான் போராடினார் என்பது போல திராவிட இயக்கங்களே திரித்து விட்டதும், அதனை சுருக்கி விட்டதும், வாக்குவங்கி அரசியலுக்காக பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களை தாஜா செய்து தனது அடையாளத்தை இழந்து நிற்கிறது. மேலும் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலரின் சிந்தனைகளும் தமிழகத்தில் முன்னெடுத்துச் செல்லப்படவில்லை. பெரியாரின் சிந்தனை வளர்ச்சிக்கு தூண்டுகோலாக இருந்தவர் சிங்காரவேலர். அந்த அடிப்படையில் சிங்காரவேலரின் ஜாதியம் குறித்த சிந்தனைகள் அறிவியல் பூர்வமானது. அத்துடன் இன்றைய இந்துத்துவவாதிகள் இந்த ஜாதியத்தை இறுகிப்பிடிக்கும் பார்ப்பனீயத்தை கடை விரித்து வருவது இன்னொரு புதிய ஆபத்து. எனவே இந்த பிற்போக்குசக்திகளுக்கு எதிராக ஒரு விரிவான பண்பாட்டுத் தளத்தில் போராட வேண்டியுள்ளது.

இறுதியாக நண்பர் பாலன் தனது பார்வையை விசலாப்படுத்த வேண்டியிருக்கிறது. இடஒதுக்கீட்டுச் சிந்தனை அவரை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்குமோ என்று தோன்றுகிறது. இங்கே அனைவருக்குமான இடத்திற்கான போராட்டத்துடன் - சாதிக் கொடுமைக்கு எதிரான போராட்டத்தையும் மிக வலுவாகக் கொண்டு செல்ல வேண்டும்.

கோட்ஸிலா: இந்த வன்முறையில் தலித், தலித் அல்லாத என்று பிரித்துப் பார்ப்பதில் அர்த்தமில்லை. மாணவர்களிடையே சாதி அரசியலை எந்த விதத்தில் புகுத்தினாலும் அது இறுதியில் வன்முறையில் முடியும்.

'தென்மாவட்டங்களில் இருக்கும் எல்லாப் பள்ளிகளும், கல்லூரிகளும் சாதி இந்துக்களுக்குச் சொந்தமானவை என்பதால் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் இங்கே நவீன அடிமைகளாகத்தான் நடத்தப்படுகிறார்கள்.'

சந்தடி சாக்கில் பொய்களை வீசும் வினவே, அரசு, மைனாரிட்டி பள்ளிகள், கல்லூரிகள் யாருக்கு சொந்தம்?

'புகைப்படங்களின் பிந்தைய பிரேம்களில் கட்டையால் அடி வாங்கும் மாணவன், சற்று நேரத்துக்கு முன் கையில் ஒரு அடி நீளக் கத்தியுடன் பாய்ந்து வருவதையும் பார்க்கிறோம். இந்தக் கத்தி ஒரு தலித் மாணவனைப் பதம் பார்த்திருக்கிறது. விளைவு நாம் தொலைக்காட்சிகளில் கண்ட அந்தக் காட்சி.'



படிப்பகம்

www.padippakam.com

அடுத்து இண்டர்வெல்லுக்குப் பின் சண்டைக் காட்சி தொடரும் என்பது போல் எழுதுகிறீர்கள் ...

குமரன்: நான் இன்று முதல் ஜாதி வெறி கொண்டவனாய் மாறி விட்டேன்.தேவர்கள் தாக்கப்படும்போது நீதி சொல்ல யாருமில்லை.. பாவப்பட்ட தேவர்கள் ஒன்றுபடுவோம்.

அறிவுடைநம்பி: முழுக்க முழுக்க வழிமொழிகிறேன். பொறுப்புணர்வுடன் எழுதப்பட்ட பதிவு. தொடர் விளைவுகளை அரசாங்கமும் முன்னுணர்ந்து அணைபோட வேண்டும்.

சுப்பிரமணியன்: ஒழிக சாதி வெறி.

திருமாறன்: நான் இன்று முதல் ஜாதி வெறி கொண்டவனாய் மாறி விட்டேன்.தேவர்கள் தாக்கப்படும்போது நீதி சொல்ல. யாருமில்லை. பாவப்பட்ட தேவர்கள் ஒன்றுபடுவோம். நானும் தயார். இனிமேல் செய் அல்லது செத்து மடி என்பதுதான்! தேவர் குலத்தோரே உங்களை முட்டாளாக்கிக் கொள்ளாதீர்கள். இந்த எழுத்தாளரைப் பாருங்கள், எப்படி மனிதநேயமற்று போயிருக்கிறார் என்று. ஆம், அவர்களுக்கு கூலி கிடைக்கும் நாள் நெருங்குகிறது

அனாமதேயம்: நல்லவேளை, இந்த ஜாதிவெறித் தாக்குதல்களுக்கும் காரணம் பார்ப்பனர்கள்தான் என்று திராவிட குஞ்சுகள் வழக்கம் போல பிதற்றவில்லை.

சேநெட்: தடி எடுப்பதிலும் தலித்துக்கு சலுகை, தாக்கப்பட்ட தேவர் இனத்தவனுக்கு காப்பாற்ற யாரும் இல்லை - எம் பலம் தவிர. வேடிக்கை பார்க்கும் காவலர் கருணாநிதியிடமும் திருமாவளவனிடமும் போன் கால் எதிர்பார்த்து அழைக்கும் காட்சிகளையும் நாங்கள் தொலைக்காட்சிகளில் கண்டோம். தென்மாவட்ட ஜாதிக் கலவரம் எம்முள் தைத்த வலி யாருக்கு தெரியும். இழந்த உறவுகள் அடைந்த வேதனை யாருக்கு புரியும். சலுகை காட்ட நாங்கள் தலித்தாக பிறக்காததுதான் காரணமா?

சொ. சங்கரபாண்டி: தலித்துகளின் மேல் வன்கொடுமைகளை நிகழ்த்திவரும் தேவர் மற்றும் அனைத்து சாதியினரையும் வன்மையாகக் கண்டிக்கிறேன்.



படிப்பகம்

www.padippakam.com

காவல் நிலையங்களும், காவல் அதிகாரிகளும் தலித்துகளுக்கு எதிராகவே பெரும்பாலும் நடக்கின்றனர். இதற்கு அரசு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். காவல் நிலையங்களில் அந்தந்த வட்டாரங்களில் பெரும்பான்மையாக இருக்கும் சாதியினரை நியமிப்பதைத் தடுக்க வேண்டும். காவலர்களைப் பிற பகுதிகளிலிருந்து தேர்ந்தெடுத்து நியமிக்க வேண்டும். தலித்துகள் கணிசமான பங்கு இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும் காவல் அதிகாரி பதவிக்கு திறமையாகவும், நேர்மையாகவும் செயல்படும் வேற்று மாநிலத்து அதிகாரிகளைச் சுழற்சி முறையில் பயன்படுத்தலாம்.

கல்வி நிலையங்களில் தலித் மாணவர்களை இழிவாகப் பேசுவதும் கிண்டல் செய்வதுமே கல்வி நிலையங்களில் நிகழும் அனைத்து சாதிக் கலவரங்களுக்கும் மூலகாரணம். இதில் தேவர்கள் மட்டுமல்லாமல் அனைத்துச் சாதியினரும் ஈடுபடுகின்றனர். ஆசிரியர்களும் இவ்வாறு நடந்து கொள்வதுண்டு. இதற்கு தகுந்த தண்டனைகள் அளிக்க வேண்டும்.

கல்வியிலும் அடிப்படையில் மாற்றம் ஏற்பட வேண்டும். ஆரம்பப் பள்ளியிலிருந்தே சாதியைப் பற்றியும், சாதிப்பிளவுகளைப் பற்றியும், கொடுமைகளைப் பற்றியும் மூடிமறைக்காமல் வரலாற்றைச் சொல்லிக் கொடுத்து, சாதியமைப்பை எதிர்க்கும் குணம் உருவாக்கப்பட வேண்டும். பெரும்பாலான வீடுகளில் சாதியமைப்பு நேரடியாகவோ, மறைமுகமாகவோ கற்பிக்கப் படுகின்றது. கட்டியமைக்கப் படுகின்றது. பெற்றோர்களை வைத்தே பள்ளிகளில் சாதிக்கெதிரான பாடங்களை நடத்தச் சொல்ல வேண்டும். அப்பொழுதுதான் குழந்தைகளுக்கு பெற்றோர்களின் இரட்டை வேடமும் புரியவரும்.

தமிழன்: கலங்கிய குட்டையில் மீன் பிடிப்பதுதான் இந்தப் பதிவின் நோக்கமென்றால் அதை இது செவ்வனே நிறைவேற்றியுள்ளது. வெறுப்புடன் இடப்பட்டிருக்கும் இதன் பின்னூட்டங்களே அதற்கு சாட்சி. இந்தச் சூழலில் மோதிய மாணவர்களின் சாதிய அடையாளங்களை சொல்வதற்கு என்ன அவசியம். புரட்சிகர அரசியல் என்ன பெயரால் எரிகிற தீயில் எண்ணெயை ஊற்றாதீர்கள்.

பிரச்சினை தலித் மற்றும் தலித்தல்லாத மாணவர்களுடையது என்றால் அதற்காக வலைப்பதிவர்கள் என்ன செய்ய முடியும்?



படிப்பகம்

www.padippakam.com

தவறாக வழிநடத்தப்பட்டுள்ள மாணவர்கள் முதலில் தங்களின் தவறுகளுக்காக வருத்தப்பட வைக்க வேண்டும். அதற்கு அமைதி தேவை. பிறகு இரண்டு தரப்பினரும் பேசிக் கொள்ளலாம்.

கட்டுரை சரியான திசையை நோக்கி அமைக்கப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியது. சாதிகளை நாம் விட்டொழிக்க முடியாது. அது நம் இரத்தத்தின் சிவப்பணுக்களாய் மாறி விட்டன. எனினும் சாதி வெறியை ஏற்காது இருப்போம்.

**விஜய், திருப்பூர்:** அருமை, அன்று (1968-69) மதுரையில் பெரியாரைக் கற்களால் தாக்கிய சாதி வெறி இன்றும்....

**கலகம்:** தேவையான பதிவு. முடிந்தால் கலகத்தினுள் வந்து எங்கள் கட்டுரையை விமர்சிக்கவும்.

**தமிழ் முகிலன்:** தமிழன் என்ற உணர்வு எப்பொழுதெல்லாம் தலை தூக்குகின்றதோ அப்போதெல்லாம் சாதிக் கலவரங்களைத் தூண்டி விட்டு வேடிக்கை பார்ப்பது அரசுகளின் தந்திரம். வ.உ.சி. சிறைப் பட்ட பின் ஏற்பட்ட திருநெல்வேலி கலவரத்திற்கு பின்னர் அங்கு சாதிக் கலவரங்களை ஆங்கிலேய அரசு தூண்டி விட்டதும், தமிழ்நாடு விடுதலைப் படையின் எழுச்சியைத் தணிக்க தென்னார்க்காடு பெரம்பலூர் மாவட்டங்களில் சாதிக்கலவரங்களைத் தூண்டி விட்டதும் கடந்த கால வரலாறுகள். இதோ ஈழத்தமிழரின் இன்னல் துடைக்க தமிழகம் கொந்தளித்துக் கொண்டிருக்கும் நேரத்தில் இந்த மோதல். தேவர் செயந்தி முடிந்து பதினைந்து நாளுக்குப் பின்னர்...?

**ராகவன், நைஜீரியா:** மனதில் மிக வேதனையோடு ஓட்டு போட்டேன். இன்று மதியம், என்.டி.டிவியில் பார்த்து உறைந்து போய்விட்டேன். மாணவர்கள் மனதிற்குள் இவ்வளவு வன்மமா? யார் இதை இவர்களிடம் விதைத்தது. ஜாதி இவ்வளவு தீவிரவாதம் காட்டுமா? இவர்கள் படித்து, சமுதாயத்திற்கு என்ன நன்மை செய்வார்கள். வேதனைதான் மிஞ்சுகின்றது.

**ஈஸ்வர்:** கட்டுரை முடிவில் நன்றாக இருந்தாலும்.. கட்டுரையாளர் ஆரம்பித்த தொனி நடுநிலைமையோடு இருப்பதாகத் தெரியவில்லை. இம்மாதிரிக் கட்டுரைகள் மேலும் பிரச்சினைகளை



படிப்பகம்

www.padippakam.com

உருவாக்குமேயன்றி பிரச்சினையின் தீர்வுக்கு வழிவகுக்காது. இடையில் கலகம் என்பவர் வேறு கலகத்தை உண்டு பண்ணும் சுட்டியை இட்டிருக்கிறார்.. யாரை யார் அடித்தாலும் வலிக்கும் நண்பரே.. அவரவர் திருந்தினாலன்றி எந்த முன்னேற்றமும் வரப் போவதில்லை சோற்றுக்கு வழியில்லாத நிலைமை வந்தால் மட்டுமே, சாதியும் மதமும் எந்த மூலைக்குப் போகும் எனத் தெரியும்..

அரசு: வினவு எழுதியதைப் படித்தபின் நடந்த நிகழ்வைப் பற்றி ஓரளவு புரிந்து கொள்ள முடிகிறது. மிகப்பெரும் பிரச்சினையை இந்த சம்பவம் மூலம் எல்லோரும் மீண்டும் பேச ஆரம்பத்திருக்கி றார்கள். அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் சட்டம் விரைவில் முழுமையாக அமுல்படுத்த வேண்டும்.

வன்முறைக் காட்சிகளை 100% இனி திரைக்குவரும் தமிழ்ப்ப டங்களில் இருந்து தணிக்கைக்குழு வெட்ட வேண்டும்.

சாதி ஒழியாமல் தமிழ் வளர முடியாது என்பதைத் தமிழ் உணர் வாளர்கள் அனைவரும் புரிந்து கொண்டு முழு வீச்சாகப் பாடுபட வேண்டும்.

தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் சாதி ஒழிப்புக்கு எப் படிப் பாடுபட்டார்கள் என்பதைத் தொடர்ந்து கருத்தரங்குகள், புத்தக வெளியீடுகள், ஒலி, ஒளி தட்டுகள் மூலம் பரப்ப வேண்டும்.

சாதி மறுப்புத் திருமணங்களை மிகவும் அதிகமாக நடக்கச் செய்ய வேண்டியவற்றை செய்ய வேண்டும்.

சாதிக் கலவரமானாலோ, சேது திட்டம், முல்லைப்பெரியாறு, காவிரி, கிருஷ்ணா நதி திட்டமானாலோ - எவ்வளவுதான் தமிழ்ச் சமுதாயத்திற்கு சீரழிவு ஏற்பட்டாலும் - சோ, சுப்பிரமணியசாமி, ஆர்.எஸ்.எஸ், இந்து முன்னணி வாயே திறப்பதில்லையே ஏன் என் பதையும் தமிழர்கள் அனைவரும் உணரச்செய்ய வேண்டும்.

சாதி ஒழியும் நாளே - தமிழர் உயரும் நாள்.

குடுகுடுப்பை: இந்த வன்முறையில் தலித், தலித் அல்லாத என்று பிரித்துப் பார்ப்பதில் அர்த்தமில்லை. மாணவர்களிடையே சாதி



படிப்பகம்

www.padippakam.com

அரசியலை எந்த விதத்தில் புகுத்தினாலும் அது இறுதியில் வன்முறையில் முடியும்.

**ரோஸாவசந்த்:** இப்படி ஒரு பதிவைத்தான் தேடிக் கொண்டிருந்தேன். இந்த முக்கியமான பதிவுக்கு மிகவும் நன்றி.

**சிவா:** இது போன்ற சம்பவங்கள் நடக்காமலிருக்க சமத்துவத்தை ஏற்க வேண்டும். சமத்துவம் விரைவில் மலர இது போன்ற சம்பவங்கள் நடக்க வேண்டும்.

**மாயோன்:** நேற்று நடந்த சம்பவம் வெறுமென சம்பவம் அல்ல. தமிழ் நாட்டின் ஒரு கோரமுகம். யாராவது எதாவது சாதித்தால்.. தமிழுக்கே.. தமிழருக்கே பெருமை என்று சொல்லிக் கொள்கின்றோமே. இந்தக் கேவலத்தை என்ன என்று சொல்வது. மேம்போக்காகப் பார்த்தால், எதோ மாணவர்கள் வெறிபிடித்து சண்டை போட்டதாகத் தோன்றுகின்றது.. இதற்கு யார் காரணம்?

ஜாதியா? தமிழ்நாட்டில் யாரும் ஜாதிப் பெயரை சொந்த பெயருக்கு பின்னால் போட்டுக்கொள்வதில்லை என்று பெருமையாக மற்ற மாநில நண்பர்களிடம் சொல்வதுண்டு.. பெயரில் இல்லை ஆனால்.. ஜாதி தமிழனின் குருதியில் கலந்து விட்டது - வோட்டுப் பொறுக்கும் அரசியல்வாதிகளால்..

வேறு எந்த மாநிலத்தையும் விட நம்மிடம்தான் ஜாதி வெறி அதிகம்.

என்ன செய்வது?

1) ஜாதி, மதம் வைத்து அரசியல் செய்வது முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும்.

2) ஆள் பலம் காட்ட ஊர்வலம், பேரணி நடத்துவது தடுக்கப்பட வேண்டும்.

3) ஜாதிக் கர்வம் பொதுவில் தெரியும் வண்ணம் செய்யப்படும் எதுவும் தவறு என்று உறுதியாகச் சொல்லப்பட வேண்டும்.

4) வெகுஜன ஊடகங்களில் ஜாதிய சார்பு முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

5) அவர் பிறந்த நாள், இவர் இறந்த நாள் என்று கூட்டம் சேர்த்து விஷ விதை விதைப்பது, ''ஆண்ட சமுகமே அடங்கிக் கிடப்பது ஏன்?'' ''அடங்க மறு'' என்று எவனும் உளர இடம் கொடுக்க கூடாது.

6) கலவரம் ஏற்படுத்தப் பயன்படும் என்ற காரணத்திற்காகவே முச்சந்திக்கு முச்சந்தி வைக்கப்படும் எல்லாச் சிலைகளையும் பிடுங்கி (காந்தி சிலையையும் கூட) ஒரே இடத்தில் பாதுகாப்புடன் வைக்க வேண்டும்.

இதெல்லாம் சீக்கிரம் நடக்க வேண்டும்.

ஆனால் கண்டிப்பாக இவை எதுவும் நடக்கப் போவதில்லை.

மூன்று வருடங்களுக்கு முன், ஒரு சமூகத்தின் தலைவரின் ஜெயந்தி விழாவை ஒட்டி, என் கல்லூரி மாணவர்கள் திடீர் என்று இரண்டு பட்டதை என் கண்களால் பார்த்தேன். பொறியியல் படிக்கும் வசதி படைத்த நகரத்து மாணவர்களே உருட்டுக் கட்டைகளுடன் திரிந்தனர். அன்று நடந்தது பெரிதாகவில்லை / பெரிதாக வெளியில் தெரியவில்லை. இன்று ஊடகங்களின் கண் முன்னே நடந்து விட்டது. நேற்று நடந்த சம்பவம் வெறுமென சம்பவம் அல்ல, தமிழ் நாட்டின் ஒரு கோரமுகம்.

தமிழன்: உலகிலேயே மிகவும் மோசமான நிறவெறி ஆப்பிரிக்காவிலும், அமெரிக்காவிலும் அடங்கிவிட்ட போதும் தமிழன் மனிதனாக வாழ மாட்டேன் என்பது வெட்கமும் வேதனையும் பட வைக்கின்றது. ஆரம்பப்பள்ளி முதலே அனைத்து ஆண், பெண் பிள்ளைகள் கலந்து அமர்ந்து, விளையாடி, பாடி, பேசி ஒன்றாக வளர்க்கப்பட வேண்டும். சாதிக் கொடுமைகள் அலசப்பட வேண்டும். பிஞ்சு உள்ளங்களிலே மனிதநேயம் வளர்க்கப்பட வேண்டும். ஒவ்வொரு பள்ளியிலும் அனைவரும் பங்கு பெறும் கலை நிகழ்ச்சிகள், விளையாட்டு நிகழ்ச்சிகள் பாடத்திட்டத்துடன் இணைந்து இருக்க வேண்டும். திருச்சி, தஞ்சை பெரியார் கல்வி நிறுவனங்களைப் பாருங்கள். மாணவர்கள் கலந்து பங்கேற்கும் நிகழ்ச்சிகள் அவர்களின் திறமையை வெளிப்படுத்தி ஒற்றுமையை வளர்க்கும். மிகவும் நன்றாகப் பாடும், நடிக்கும், விளையாடும் யாரையும் மற்ற சாதியினரும் நட்புடனும், அன்புடனும்தான் பழக முயல்வார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

அங்கங்கே கலவர ஆர்வமுள்ளவர்களுக்கும் மற்றவர்களுக்கும் கவுன்சலிங் எனும் அறிவணைப்புக் குழுக்கள் மாணவர்களாலேயே நடத்தப்பட வேண்டும்.

இந்தியா கொண்டு வர இருக்கும் அடையாள எண்ணைச் சரியாக உண்டாக்கினால், அதில் படிப்பு, வேலைவாய்ப்பு போன்றவற்றிற்கு மட்டும் பயன்படும்படி சாதியைப் பயன்படுத்தி மற்ற சாதிக் குறிப்புகள், சான்றிதழ்கள் தேவையில்லாமல் செய்து விடலாம். அதை முதலில் தமிழ்நாட்டிலே படைத்துக் காட்டலாம். மெல்ல இனிச் சாதி சாகட்டும், வேகமாகச் செத்தால் மிகவும் மகிழ்வோம்.

**ராகுல்:** 'நான் இன்று முதல் ஜாதி வெறி கொண்டவனாய் மாறி விட்டேன். தேவர்கள் தாக்கப்படும்போது நீதி சொல்ல யாருமில்லை.. பாவப்பட்ட தேவர்கள் ஒன்றுபடுவோம்..'

ஆமாம் அண்ணே! நாமெல்லாம் மனிதர்கள் இல்லையா? அவர்கள் மட்டும் தானா? இடத்தைக் கொடுத்தால் மடத்தை பிடிப்பார்கள் என்று சொல்லுவார்கள்.... நீங்கள் யார் உரிமை தருவதற்கு? என இங்கு சிலர் கேட்டால் 'இடம்' என்பது சம உரிமையே.... சம உரிமை கொடுத்தால் நம் சந்ததியைப் புல் பூண்டு கூட இல்லாமல் அழித்து விடுவார்கள் போல..

**மஸ்தூக்கா:** மனிதர்களே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண், ஒரு பெண்ணிலிருந்தே படைத்தோம்; நீங்கள் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளும் பொருட்டு. பின்னர், உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்; (ஆகவே) உங்களில் எவர் மிகவும் பயபக்தியுடையவராக இருக்கின்றாரோ, அவர்தாம் இறைவனிடத்தில், நிச்சயமாக மிக்க கண்ணியமானவர். நிச்சயமாக இறைவன் நன்கறிபவன், தெரிந்தவன்.

— திருக்குர்ஆன் 49-13

**தேசநேசன்:** இதைப்பற்றி பேசுவதை விடுத்து உங்கள் வளர்ச்சி மற்றும் நாட்டின் வளர்ச்சி ஆகியவை பற்றி சிந்தியுங்கள். அவை உங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி வேற்றுமைகளையும் ஒழிக்கும். இது நமது மாநிலத்தின் அவமானம். இப்படி ஒரு இழிநிலையில் நிற்கிறீர்கள் பாருங்கள். முதலில் உங்கள் பெற்றோருக்கும் நாட்டுக்கும் ஏதாவது பயனுள்ளதைச் செய்யுங்கள். இந்நிலையில் எதுவும் மாறாது. மாற்றக் கூடிய ஒரே வழியும் கல்விதான்.



படிப்பகம்

www.padippakam.com

அதிலும் கூட அடித்துக் கொள்கிறீர்களே. இதில் மனிதமே இல்லையே. இதைப் பார்த்த பின்பு மற்ற மாநிலத்துக்காரன் நம்மைக் காட்டுமிராண்டி என்றல்லவா அழைப்பான். ஜாதியைப் பற்றி பேசுவதை விட அதை மாற்றுவதைப் பற்றி யோசிக்க வேண்டும்.

இந்த மோதலில் ஈடுபட்ட மாணவர்களை இரக்கமில்லாமல் தண்டிக்க வேண்டும். நான் என் நாட்டை நேசிக்கிறேன். அடுத்தவர் களைப் பற்றி எனக்கு கவலையில்லை. இந்த நாட்டின் வளத்திற்காக நான் உழைப்பேன். ஜெய் ஹிந்த்!

**ஏன் என கேள்:** இந்த கட்டுரையைப் படிக்கும் வரை தாக்கப்பட்ட நபர் என்ன ஜாதி, தாக்கியவர்கள் என்ன ஜாதி என்று தெரியாது. ஆனால் இப்போது ஓரளவுக்கு தெரிகிறது. பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காய் முடிந்த கதை இதுதான்.

இதைப் புரட்சி என்று நிறுவும் விதத்தில் உங்கள் கட்டுரையின் தொனி அமைந்திருக்கிறது. புரட்சியின் நோக்கம் ஜாதியம் இல்லாத நிலையை உருவாக்குவது.

அதை விடுத்து உன் ஜாதிக்கு என் ஜாதி சமம் என்பதை நிறுவுவது அல்ல. ம.க.இ.க எங்கோ தடுமாறுகிறது. தோழர்கள் சிந்திப்பது நல்லது.

**அது சரி:** தேவர் ஜாதியினரின் ஆதிக்கவெறி குறித்து நீங்கள் சொல் லியிருப்பது முற்றிலும் உண்மை. அப்படியே நாடார், முதலியார், செட்டியார், வன்னியர், அருந்ததியர், பறையர், பள்ளர் என்று இன்னும் பல நூறு ஜாதிகளையும் சேர்த்துக் கொள்ளுங்கள். ஜாதி வெறி என்பது இந்தியர்களின் தனிப்பட்ட சொத்து. அது எந்த ஜாதியாக இருந்தாலும்!

மற்றபடி, சட்டக் கல்லூரி மாணவர்களின் (?) கொலைவெறி பற்றி ஆச்சரியப்பட எதுவுமில்லை. பொதுவாக எல்லாப் பள்ளிக ளிலும் உருப்படாத கோஷ்டி என்று உண்டு. இதில் ஜாதி பேத மில்லை. பெரும்பாலும் இந்த உருப்படாத கோஷ்டிதான் சட்டக் கல் லூரியில் சேருகிறது.. பி.எஸ்.ஸி எல்லாம் இவர்கள் படிக்க முடியாது. ஏனெனில் இவர்கள் +2வில் படிப்பது ஹிஸ்டரியாக இருக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

இப்படிப்பட்ட ஒரு கோஷ்டி கல்லூரியில் கொலைவெறியில் ஈடுபடுவதில் என்ன ஆச்சரியம்? இரண்டு பொறுக்கிக்கும்பல்கள் மோதிக் கொள்வதற்கு இத்தனை மீடியா கவரேஜா? இதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது!

**ராமச்சந்திரன்:** இதில் பிராமணர்கள் எங்கே வந்தனர்?

தயவுசெய்து இந்தக் கலவரத்தில் ஈடுபட்டவர்களுள் யார் பிரா மணர் எனச் சொல்லுவீர்களா? தடி எடுத்த தாதாக்களில் பிராம ணர்கள் உண்டா என்ன? ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் பிராம ணர்கள் தீண்டாமையை உபதேசித்தனர் என்றால் ஏன் தமிழக மக்கள் அதைப் பின்பற்ற வேண்டும்? அவர்களுக்கு மூளையே இல்லையா? தமிழகத்தில் பிராமணர்களின் எண்ணிக்கை வெறும் 2.5% தான். உயர் சாதியர்கள் தலித்துகளைத் தாக்க பிராமணர்கள் காரணம் என நிறு வுவது நகைப்புக்குரியது. பிராமணர்கள் சொல்வதைக் கேட்க கூடவா ஆள் இருக்கிறது?

நண்பர்களே, இந்தக் கலவரத்தில் பிராமணர்கள் சம்பந்தப்பட வேயில்லை. எந்த ஒரு சாதியைப் பற்றி எழுதும் முன் தயவுசெய்து யோசியுங்கள். நீங்கள் இப்பின்னூட்டத்தை அழித்து விடலாம். ஆனால் உண்மையை அழிக்க முடியாது.

**கோட்ஸிலா:** கல்வி நிறுவனங்கள் கல்வி நிறுவனங்களாகச் செயல்பட வேண்டும். அங்கு சாதி, மத, கட்சி அரசியலை யாரும் எக்காரணம் கொண்டும் நுழைக்கக் கூடாது என்பதை வினவு போன் றவர்கள் ஏற்கிறார்களா? வன்முறை என்பதை யார் செய்தாலும், அதற்கு பதில் இது என்று நியாயப்படுத்த வேண்டாம். 'கத்தியால் குத்தினான் இவன் அதற்கு பதிலைத்தான் நீங்கள் பார்த்தீர்கள்' என்று எழுதுவதைத் தவிர்க்கலாமே.

**நொந்த குமார்:** சட்டக் கல்லூரி விவகாரம் பொறுத்தவரை, ஆதிக்க சாதிகள் தலித் மாணவர்களை எப்பொழுதும் சீண்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள். பலமாய் எங்கிருக்கிறார்களோ, சேர்த்து சேர்த்து வைத்த கோபம் ஒரு நாளில் வெடிக்கிறார்கள். இந்த பிரச்சனையில் யார் யார் என்னென்ன செய்தார்கள் என்பது விசாரணையில்தான் தெரிய வரும். சாதிவெறி, சாதி ஒழிந்தால்தான், இதற்கு நிரந்தர தீர்வு. உங்கள் கட்டுரை கோருவது சமூகப்பொறுப்பு. விபரீதம் உணர்ந்து சகலரும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

பாலா : இராமசாமி நாயக்கர், கருணாநிதி, வீரமணி, திருமாவளவன் போன்றவர்களின் பங்களிப்பால் தமிழக அரசியலிலிருந்து சாதிய மோதல்கள் பிரிக்க முடியாதவையாகப் போயின. வாழ்க தமிழகம்.

சந்துரு : குறிப்பிட்ட ஜாதியினரை மட்டும் பேசுவதில் எனக்கு உடன்பாடில்லை. எல்லோரிடம் தவறு உள்ளது. ரத்தம் சதை எல்லோருக்கும் ஒன்றுதான்.

ரத்தவெறி கொண்டு விளையாடிய வெறிநாய்களிடம் தனியாகச் சிக்கிக்கொண்டு தவித்த, இந்த பாழாய்ப் போன மானிட ஜென்மம் தன்னைக் காப்பாற்றி கொள்ளவும், தன் நண்பனை விடுவிப்பதற்கும் கத்தி எடுத்ததில் எந்தத் தவறும் இல்லை என்பது என் கூற்று.

இந்த அதிகாரமும் பலமும் கொண்ட போலீஸ் (உங்கள் நண்பன்) என்று சொல்லிக்கொள்ளும் கேடுகெட்ட ஜென்மங்களை நினைக்கும்போது மனம் வருந்துவதை தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாது.

நானும் தேவர் இனத்தைச் சேர்ந்தவன்தான். சாதியின் பெயரால் என்னை என் பெற்றோர்கள் வளர்க்கவில்லை. ஒரு தலித் நண்பனுடைய திருமண விழாவில் கலந்து கொண்டு உதவி செய்திருக்கிறேன் / சாப்பிட்டு இருக்கின்றேன். எனது முக்கால்வாசி நண்பர்கள் தலித் நண்பர்கள்தான்.

இதில் உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி என்ற வேற்றுமை எள்ளளவும் நுழைந்ததில்லை. என்னையும் தலித் இன நண்பர்கள் சீண்டியிருக்கின்றனர். அவர்களையும் எனது இன சொந்தங்களும் தாக்கி இருக்கின்றனர். எல்லோரிடமும் தவறு உள்ளது. ஒரு இன மனிதர்களை மட்டும் கண்டிப்பது மிகப்பெரிய தவறு.

ரத்தவெறி கொண்டு விளையாடிய வெறிநாய்களைப் பெற்றார்களே பெற்றோர்கள் .. சா(தீ) என்னும் தீயில் குளிர்காயும் அரசியல்வாதிகள், காவல் துறையினர் மற்றும் வெறிகொண்டு திரியும் நாய்களைக் கல் கொண்டு எறிய வேண்டாம். தடுக்க முயற்சி கூட செய்யாத பொது ஜனம்... இவர்களை விடப் பாவம் செய்தவர்கள் எவரும் இருக்க முடியாது.



படிப்பகம்

**அஜீவன்:** நாட்டின் நீதித்துறைக்கு வர இருக்கும் இளைஞர்களே இப்படி என்றால், பாமர மக்களின் நிலை என்ன? அதிர்ச்சியாக இருக் கிறது.

**சுரேஷ்:** சட்டக் கல்லூரி மாணவர்கள் தெருநாய்களைப் போல நடந்து கொண்டார்கள்.....இவர்களெல்லாம் படித்தவர்களா? எந்த சாதியாய் இருந்தால் என்ன? யாருக்கும் யாரையும் அடிக்கும் உரிமை கிடையாது.

**வண்ணத்துப்பூச்சி சூர்யா:** காந்தியும் புத்தரும் பிறந்த நாட்டில் இது போன்ற காட்டு மிராண்டிகளும் பிறந்துள்ளர்கள் என்பதை உலகிற்கு பறைசாற்றும் விதமாக இந்த சம்பவம் அமைந்துள்ளது. அமெரிக் காவில் கூட வெள்ளை - கறுப்பின சண்டைகள் முடிவின் அடை யாளமாக அந்நாட்டு மக்கள் ஒபாமாவை அதிபராக தேர்ந்து எடுத்து உள்ளனர். இது உலகே வியக்கும் விஷயம். ஆனால் நம் நாட்டில் சாதிவெறி இன்னும் சாகவில்லை என்பதை சட்டக் கல்லூரி (காட்டு மிராண்டி) மாணவர்கள் உலகிற்கு வெளிச்சம் போட்டு காண்பித் துள்ளனர்.

அகிம்சை மண்ணிலா இது போன்ற கொடூரச் செயல்கள்? அரசு கல்லூரிகள் மட்டும் அல்லாமல் அனைத்து துறைகளிலும் சில கட்டுப்பாடுகளைக் கொண்டுவர வேண்டும்.

குடிநீருக்கும், நல்ல சாலைகளுக்கும் போராட்டம் நடத் தும்போது பொதுமக்களை அடித்து விரட்டும் காவல் துறை, நேற்று கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தது.

இந்த உருட்டுக்கட்டை அடி, என் மேல் விழுந்தது போல உணர் கிறேன்! இந்த தாக்குதல் நம் மீது நடத்தப்பட்ட தாக்குதல்! இந்த தாக் குதல் நாகரீக சமுதாயத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல்.

நம் மனச்சாட்சி மீது நடத்தப்பட்ட தாக்குதல். இந்த நிலைமை யாருக்கு வேண்டுமானாலும் வரலாம். நாம் அனைவரும் வெட் கப்பட வேண்டிய நிகழ்வு.

**லைட் இங்க்:** உங்கள் மூலம் உண்மை நிலையை அறிந்தேன். முதல்வர் அவர்களும் அவருடன் கூட்டணி வைத்துக் கொண்டு தலித் துக்கான கடவுள் என்று தன்னைப் பறைசாற்றிக் கொள்ளும் திருமா

www.padippakam.com

வளவன் என்ன அறிக்கை விடுவார்? கூட்டணியில் உள்ள ராமதாஸ் இதைப்பற்றி என்ன சொல்லுவார்? மார்க்ஸ் சொன்னது போல ஒவ்வொரு நிகழ்ச்சியின் பின்னாலும் ஒரு வர்க்கத்தின் பலன் உள்ளது என்பது மீண்டும் உண்மையாகிறது. பாவம் இதில் அப்பாவி மக்கள் மாட்டிக்கொள்வது வேதனை அளிக்கிறது.

**சேநெட்:** தாக்கப்படுபவன் தலித் என்றால் இந்நேரம் அனைத்து ஊடகங்களும் வரிந்துகட்டி எழுதும். இந்தியாவே பற்றி எரிந்திருக்கும். தேவர் என்பதால் வாய்மூடி அனைத்தும் பொத்தி அமைதி காப்பதன் மர்மம் என்ன? ஆயுதம் ஏந்திய கும்பல்களை தொலைக் காட்சிகளில் பார்த்தோம். இங்கு வினவு கூட கடைசியாக அடிபடுபவன் கைகளில் கத்தியோடு காட்டி தலித் தாக்கப்பட்டதால் நடந்ததாக நிறுவ முயற்சிப்பதென்ன? வன்முறைக்கு காரணம் தேவர் மட்டுமே என்று நிறுவ முயற்சிக்கும் உங்களின் முகத்திரையைக் கிழிப்பது யார்? தலித் வன்முறையாளர்களை எவரும் கண்டிக்க மறுப்பதேன்? முடிந்தால் அரசு அடக்கட்டும். இல்லையேல் அகன்று இருக்கட்டும். கருணாநிதி ஆட்சியில் மட்டுமே இத்தகைய கூத்து இன்று ஆதிக்கசாதி தேவரினம் அல்ல. வன்முறைக்கும் காரணம் சாதிச் சலுகை பெறும் அனைவரும்தான். வன்முறையை வளர்க்கும் தலித்துகளுக்கு இல்லையா சாதிவெறி?

**வீர வினோத்:** இங்கு எல்லோரும் நடந்ததை நியாயப்படுத்துகின்றனர். உள்ளூர உங்களுக்கெல்லாம் மகிழ்ச்சியாக இருக்கின்றது. 'நம்ம பசங்க சரியா அடிச்சாங்கல்ல' என நீங்கள் நினைக்கலாம். எல்லோருக்கும் பொதுவாக இருக்க வேண்டுமே தவிர இது போல ஒரு சார்பாக நியாயப்படுத்தி எழுதுவது தவறு. அது பல செயல்களுக்கு காரணியாக அமையும். அது இந்தியாவுக்கு நல்லதல்ல.

சுக்தேவ்: வன்முறைக்கு பின்னாலுள்ள சாதியக் கொடுங்கோன்மையை இந்தக் கட்டுரை அம்பலப்படுத்தியிருந்தாலும் வன்முறையை வன்மையாகக் கண்டிக்கத் தவறியுள்ளது

**சிவன்:** இந்த கட்டுரை எதற்கு பார்ப்பானைக் குற்றஞ்சாட்டுகிறது?

நான் இருபது ஆண்டுகளுக்கு மேல் அந்தப் பகுதியின் அருகில் வசித்துள்ளேன். என்னைப் பொறுத்தவரை அங்கே ஒரு பார்ப்பான் கூட வர மாட்டான். இருப்பது எல்லாம் தலித் மற்றும் புதிதாக மதம்



படிப்பகம்

www.padippakam.com

மாறிய கிறிஸ்துவர்கள்தான். வெறிநாய்கள் அடித்துக்கொண்டு செத்தால், நாட்டுக்கு நல்லது. போலீஸ் அதைத்தான் செய்தது. கலவரம் வெளியே பரவாமல் வாசலில் காவல் நின்றது. இது மிகவும் பாராட்டப்பட வேண்டியது.

**குமரன்:** ''அம்பேத்கர்'' பெயர் விடுபட்டுப் போனதால் தலித் மாணவர்கள் தாக்குதல் நடத்தினார்கள் என்பது தலித்துகளுக்கு இட ஒதுக்கீடு தேவையா? என்ற விவாதங்களை எழுப்பி இருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் பிற்படுத்தப்பட்ட மக்கள் ஒன்றுபடத் துவங்கி இருக்கிறார்கள்.. நான் தற்போது தலித் நண்பர்களை விட்டு விலகத் துவங்கி இருக்கிறேன். இன்றைய எல்லா ஊடகங்களும், எல்லாக் கணிணி குழுக்களும் தலித்துகளுக்கு ஆதரவாக செயல்படும்போது உங்களைப் போன்றவர்கள் தனியே கணிணி குழுக்கள் ஆரம்பித்து இவர்களின் (தலித்) வன்முறையை ஆதரிப்பதை உலகுக்கு தெரிவிப்போம். இன்றே இடஒதுக்கீடு, வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் போன்றவற்றை எதிர்த்து பிரச்சாரம் துவக்குவோம்.

**கலகம்:** சட்டக் கல்லூரி பிரச்சினை குறித்து உண்மை நிலையை உடனே வெளியிட்டதற்கு வினவு அவர்களுக்கு மிக்க நன்றி. உங்கள் பணி சிறக்க வாழ்த்துக்கள். சட்டக் கல்லூரி பிரச்சினை குறித்து மேலும் இன்று எழுதுவீர்கள் என எதிர்பார்த்தோம்.

**சக்தி:** சாத்தான் வேதம் ஓதுகிறது!

**விஜயகோபால்சாமி:** தேவர், தலித் என்பதைப் போல மாணவர்கள் என்பதும் ஒரு கேடுகெட்ட குழு மனப்பான்மையாக வளர்ந்துள்ளது. ஒருவன் செய்தால் குற்றம், நூறு பேர் செய்தால் கலவரம் என்பதையே தாரக மந்திரமாகக் கொண்டு இயங்கியிருக்கின்றன இந்தக் கேடுகெட்ட மாணவர் குழுக்கள்.

இன்று ஜெயா டி.வி.யின் செய்திகளில், தாக்கப்பட்ட (வெள்ளைச் சட்டை) மாணவனின் பெற்றோரும், தேவர் சாதி அமைப்பைச் சேர்ந்த ஒருவரும் பேட்டி கொடுக்கின்றனர். ''இனி பிழைத்து வந்தாலும் அவர்கள் நடைபிணமாகத்தான் வாழ வேண்டும்'' என்று. அதே மாணவன் கத்தி எடுத்துக் கொண்டு வெறிபிடித்து மற்றவர்களைத் தாக்கியபோது அவர்கள் நிஜப் பிணமாகவே ஆகியிருப்பார்களே. அதைப் பற்றி ஏன் இந்த ''ஜாதி இந்துக்கள்'' வாயைத் திறப்பதில்லை.



படிப்பகம்

www.padippakam.com

**ஆர். ராமகிருஷ்ணன்:** வன்முறையாளர்களைக் கண்டிக்கும் அதே நேரத்தில் இதற்கு பார்ப்பனியம்தான் காரணம் என்பது தவறு எனக் கருதுகிறேன். நானும் பிராமணன்தான். ஆனால் மற்ற சாதிகளைச் சேர்ந்த நண்பர்களைப் பெற நான் தயங்கியதே இல்லை. நான் ஒரு நல்வாழ்வு மையத்தின் தலைவராக இருக்கிறேன். எனது பிள்ளைகள் எங்களின் 'தலித்' துப்புரவுப் பணியாளரை 'அங்கிள்' என்றுதான் மரியாதையோடு அழைப்பார்கள். 'எல்லோருக்கும் மரியாதை கொடுங்கள்' என்று சொல்லியே எனது பிள்ளைகளை வளர்த்துள்ளேன். சொல்லப் போனால் எல்லா முதியோர்களையும் அங்கிள் அல்லது சார் என அழைக்க நாம் இளைய தலைமுறையினரைப் பயிற்றுவிக்க வேண்டும். இது மக்களின் மத்தியில் சாதியை ஒழித்து விடும். இப்படி நாம் மழலைப் பருவத்திலிருந்தே மரியாதையைச் சொல்லிக்கொடுத்து வளர்க்கத் தவறினால் எதிர்காலம் நம்மை மன்னிக்காது.

முதலில் விண்ணப்பப் படிவங்களிலிருந்து சாதியை ஒழிக்க வேண்டும். பொருளாதாரத்தில் முற்பட்டவர்கள் அல்லது பிற்பட்டவர்கள் என இரண்டு பிரிவுகளும் அதற்கான அளவுகோல்களும்தான் தேவை. இந்துவா, முஸ்லிமா, கிருத்துவனா, தலித்தா என்பதைத் தாண்டி மனிதனாகவே ஒருவன் மதிக்கப்பட வேண்டும்.. பொருளாதாரத்தில் பிற்படுத்தப்பட்டவருக்கு மட்டுமேயன்றி சாதியின் அடிப்படையில் இடஒதுக்கீடு கூடாது. ஆனால் ஓட்டுக்காக நமது அரசியல்வாதிகள் இதைச் செய்ய மறுக்கிறார்கள்

முன்காலத்தில் பிராமணர்களோ மற்ற முற்படுத்தபட்டவர்களோ கீழ்சாதி மக்களுக்கு எதையோ செய்துள்ளனர். ஆனால் நான் பிராமணனானாலும், புரோகிதரின் மகனாக ஆச்சாரமான குடும்பத்தில் பிறந்தாலும் எனக்கு பல சாதிகளில் நண்பர்கள் உள்ளனர். இதுவே நான் சாதிக்காக இல்லை என்பதன் சாட்சி.

சாதிக்கெதிராக நாம் இனைந்து போராடுவோம். இந்தியாவைப் பொருளாதாரம், சகோதரத்துவம், சமூக நலம் ஆகியவற்றில் முதல் நிலைக்குக் கொண்டு வருவோம்.

**ஞாநி:** மிக நேர்மையான பதிவு. பாராட்டுகள். ஒடுக்கப்பட்ட சாதியினர் விழிப்புணர்வு பெறத் தொடங்கும் வேளையில் சுயநல



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் தலைமைகள் அவர்களின் சக்தியை திசை திருப்புவதே இப்படிப்பட்ட வன்முறை நிகழ்ச்சிகளுக்கு வேர். வீட்டிலும் வெளியிலும் சாதி மறுப்பு, அகமண முறை நிராகரிப்பு ஆகியவையே நம்மை சாதியற்ற சமுதாயத்தை நோக்கி இட்டுச்செல்ல முடியும்.

**ஹரி ஹர கிருஷ்ணன்:** அய்யா வினவு, இங்கு உங்கள் பதிவு பார்ப்பதற்கு ஜாதியை எதிர்ப்பது போல இருந்தாலும் கத்தி எடுத்துக் கொண்டு ஒருவன் வந்ததால் மற்றவர்கள் தங்களைக் காத்துக் கொள்வதற்காக அவனை அடித்ததாக எழுதி இருந்தீர்கள். அதற்கு முன்னர் ஒரு மாணவனை அவர்கள் அடிப்பதைத் தடுத்து நிறுத்தவே அவர்கள் கத்தி ஏந்திய மாணவனால் விரட்டப்பட்டார்கள். அதைத் தாங்கள் சொல்லவே இல்லை. ஏன்?

தலித், தேவர், நாடார், கவுண்டர், செட்டியார், முதலியார், பார்ப்பனியர், வேறு யாராக இருந்தாலும் அன்று நடந்தது தவறு.

போலீஸ், டீ.வி. சேனல் எல்லாம் வந்து பார்த்து ரெடியாகி, ஸ்டார்ட் கேமரா என்பது போல வருமளவுக்கு இருந்தது நம் அரசின் கையாலாகாத்தனம் அல்ல.

நடவடிக்கை எடுத்தால் இவன் வோட்டு போய் விடும், எடுக்கா விட்டால் அவன் வோட்டு போய் விடும் என்று சும்மா இருக்கச் சொல்லி அரசாங்கம் இருந்தது மிகப் பெரிய தவறு. அதற்கு மக்கள் தகுந்த தண்டனையை வரும் தேர்தலில் வழங்குவார்கள்.

எந்த ஜாதிக்காரன் மோதினாலும் பார்ப்பான்தான் வந்து சண்டையைத் துவக்கி வைத்த மாதிரி பேசுகிறீர்கள். என்றைக்காவது பார்ப்பான் யாராவது ரோட்டில் இப்படி வன்முறையாக நடந்ததாக ஒரு செய்தி (ஜாதி ரீதியாக) இருந்தால் காட்டுங்கள். தங்கள் பதிவு மூலம், ஒரு ஐந்தாறு பேராவது ஜாதி வெறி பிடித்ததைத்தான் பார்க்க முடிந்தது. தாங்கள் வன்முறைக்கு எதிராக எழுதியதைவிட மேல்ஜாதியினர்தான் தவறு செய்கிறார்கள் என்பது போல ஒரு தோற்றதை உண்டு பண்ணுகிறீர்கள். நம் நாட்டில் சட்டம் கடுமையாக நடந்து கொள்ளாததால் வந்த வினை.

போலீஸ் சட்டக் கல்லூரிக்குள் நுழைவதற்கு ஏன் இவ்வளவு யோசிக்க வேண்டும்? மந்திரிகளோ (முதல்) அல்லது வேறு



படிப்பகம்

www.padippakam.com

யாருமோ சொல்லாமல் அவர்கள் அங்கு நடவடிக்கை எடுக்காமல் இருக்க மாட்டார்கள். அதிகாரம் கையில் இல்லாதவர்கள் சொன்னால் போலீஸ் கேட்காது என்பது குழந்தைக்கு கூடத் தெரியும். தங்கள் பதிவில் உள்ள பல செய்திகளில் ஒரு பகுதி மக்களுக்கு உதவுவது போல நடை உள்ளது. நடுநிலையாக இல்லை. இது என் கருத்து.

**ரவி ஸ்ரீநிவாஸ்:** இந்த இடுகை அரசியல் ரீதியாக சரியாக இருப்பினும் அபத்தமானதே. இது மறைமுகமாக வன்முறையை நியாயப் படுத்துகிறது.

'வீட்டிலும் வெளியிலும் சாதி மறுப்பு, அகமண முறை நிராகரிப்பு ஆகியவையே நம்மை சாதியற்ற சமுதாயத்தை நோக்கி இட்டுச் செல்ல முடியும். - ஞானி'

அப்போ ஜாதி ரீதியான இட ஒதுக்கீடு...?

**ரமேஷ் பாபு:** சட்டக் கல்லூரியின் தரம் தாழ்ந்து கொண்டே போகின்றது. ஒரு காலத்தில் நல்ல சட்டம் இயற்றும் ஆசை உள்ளவர்கள் இதில் படித்தனர். இன்றோ சட்டத்தை உடைக்கும் கூட்டத்தின் கையில் கல்லூரி. பணத்துக்காகக் கிரிமினல்களை விடுவிக்கவோ, இல்லை தானே ஒரு கிரிமினலாவதற்காகவோதான் இவர்கள் சட்டம் படிக்கிறார்கள். படிப்பவர்களின் அரசியல் பின்னணியைக் கொண்டு மிரட்டியே பல அறிவார்ந்த சீனியர்களிடம் இவர்கள் சுலபமாகச் சேர்ந்து கொள்ளலாம். விடுதிகள்தான் வன்முறையை வளர்க்கிறதென்றால் விடுதிகள் எதற்கு?

**ராம் பிரசாத்:** மோதலின் அடிப்படை என்பது தம் அன்றாட வாழ்க்கையில் தலித் மக்களும் தலித் மாணவர்களும் அனுபவிக்கும் சாதிக் கொடுமையில் இருக்கிறது; புதிய தலைமுறை தலித் இளைஞர்கள் அதை எதிர்ப்பதால், ஆதிக்க சாதியினருக்கு வரும் கோபத்தில் இருக்கிறது இந்த மோதலின் அடிப்படை

அருமையான ஆய்வு. உங்கள் கருத்தை வழிமொழிகிறேன் வினவு.

**தமிழ்:** மிகுந்த வேதனையுடன் இப்பதிவை எழுதுகிறேன். இங்கு தங்களின் பதிவுகளைப் பதிவு செய்யும் பெரும்பாலானோர் சட்டக்



படிப்பகம்

www.padippakam.com

கல்லூரியில் தலித் மாணவர்கள் ஒரு உயர்சாதி இந்துவைத் தாக்கியது தவறு என்ற கண்ணோட்டத்திலேயே பதிந்திருக்கிறார்கள்.

எனக்கென்னவோ இதில் பல நபர்களுடைய சுயசாதி (திமிர் - தாழ்த்தப்பட்டவன் எப்படிடா அடிக்கலாம்) உணர்வால்தான் இவ்வாறு எழுதுகிறார்கள் என்ற எண்ணம் தோன்றுகிறது.

மேலும் சிலர் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட அந்தக் காட்சிகளைப் பார்த்து மிகவும் கொதிக்கிறார்கள்.

இதற்கு எதிராகப் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் நேற்றைய தினம் உசிலம்பட்டியில் நான்கு பேருந்துகளை அடித்து நாசம் பண்ணி இருக்காங்க.

படிக்கிற காலத்துலயே இப்படி வீரமா நடந்துகிட்ட அந்த மாண வர்களை பற்றி இங்கு பெரியார் முகமூடி போட்டுத் திரியும் நண் பர்கள் பேச மறுக்குறாங்க. (தன் சாதி வீரம் வெளியில வெளுக்கு மேன்னு பயப்படறாங்க போல)

உத்தபுரத்துல சாதிக்கலவரம் தலித்துகளுக்கும் பிள்ளைமார்க ளுக்கும் (பிள்ளைமார்களுக்கு ஆதரவாக தேவர் சாதியினர்) நடந்து கொண்டிருக்கு. போன வாரம் துப்பாக்கிச் சூட்டில் 25 வயதே உள்ள தலித் இளைஞன் போலீசால் சுட்டுக் கொல்லப்படுகிறான். அதைக் கூட டி.விக்களில் போட்டுக் காட்டினான். பேப்பர்ல வந்தது. அதைப் பார்த்த ஒருத்தருக்குக் கூட மனசு வலிக்கல. பாவம் அந்த சின்னப் பையன எப்படிச் சுட்டாங்க. அவன் குடும்பம் என்ன ஆகும். எப்படி அவ்வளவு கூட்டதுலயும் ஒரு தலித் இளைஞனத்தான் சுட ணும்னு அந்தத் தோட்டா குறிபார்க்க விரும்பினதுன்னு யாரும் கவ லப்படல. ஏன்னா குண்டுபட்டு செத்தவன் ஒரு தலித்.

அரும்பு: வணக்கம். நடந்த அதிர்ச்சியளிக்கும் வன்முறை தென்தமி ழகத்தின் நிலையைக் காட்டுகிறது. எந்த ஒரு தலைவரும் அதைக் கண்டிக்கவில்லை. பிற்படுத்தப்பட்டோர் எல்லா இடங்களிலும் வன்முறையில் ஈடுபடுகிறார்கள். அனைத்து சாதியினரும் வன் முறையை ஆதிக்கத்திற்காகப் பயன்படுத்தினாலும் ஒடுக்கப்பட்ட சாதியினர்தான் அதன் சுமையை உணருகிறார்கள். ராஜஸ்தான், அரியானா, தமிழகம் எங்கும் இப்படித்தான்.



படிப்பகம்

www.padippakam.com

வீரமானவர்கள் என்பதால் நாம் திருடர்களைக் கொண்டாட முடியுமா என்ன? ஜெயலலிதா கூட இவர்களின் கைப்பாவையாகிப் போய் விட்டார்.

நான் தமிழனாகப் பிறந்ததற்காக வெட்கப்படுகிறேன். இன்னும் சிறிது காலத்தில் தமிழர்கள் தங்களுக்குள்ளேயே அடித்துக்கொண்டு சாவது உறுதி. செத்த பாம்பை அடித்தது போல ஒரு அடிபட்ட மாணவனை அடித்தவர்களின் வீரம் வாழ்க. அவர்களின் சாதியின் வீரத்திற்கு பெருமை சேர்த்து விட்டனர்.

**பாண்டியன்:** தெளிவான ஒரு பதிவு தோழர். நன்றி உண்மையை வெளிக்கொண்டு வந்தமைக்கு.

**கீழனார்:** தேவர், பிள்ளை, வன்னியர், கவுண்டர் ஆகிய சாதியினர் எப்பொழுதும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராகவே செயல்படுகிறார்கள். மத்திய அரசு, 27% இட ஒதுக்கீடு சட்டம் கொண்டுவந்த போது, அய்யன், அய்யங்காரன் மற்றும் பல உயர்சாதி மாணவர்கள் அதை எதிர்த்து மிகப்பெரிய போராட்டம் நடத்தினார்கள். அப்பொழுது, இந்த (தேவர், பிள்ளை, வன்னியர், கவுண்டர் ஆகிய) சாதியின மாணவர்கள் அவர்களுக்கு எதிராக ஒரு ம..ரும் (மன்னிக்கவும்) பிடுங்க முடியல அல்லது பிடுங்கல. இவனுங்களும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக செயல்படவே விரும்புகிறார்கள் போல! அல்லது அய்யன், அய்யங்காரன் மற்றும் பல உயர் சாதியானை எதிர்க்க முடியாதோ / பயப்படறான்களோ! ஏற்கெனவே, தாழ்த்தப்பட்ட மக்கள் ஒரு செத்தபாம்பு போல நடத்தப்படறான். இவனுங்க அந்த செத்தபாம்பையே அடிக்க குறியா இருக்கானுங்கள. அதுல மகிழ்ச்சியும் அடையுறானுங்க.

27% இட ஒதுக்கீடு சட்டத்தை எதிர்த்த கேடுகெட்டவர்கள் கூட, போராட்டத்தின் போது, தாழ்த்தப்பட்ட மக்களின் தொழிலையே செய்து (செருப்புத் தைத்தல், தெருக் கூட்டுதல், மற்றும் பல) போராடினார்கள். ஏன், ஒ.பி.சி.க்கு என்று தனியே தொழில் இல்ல போல!

என்றைக்கு தேவர், பிள்ளை, வன்னியர், கவுண்டர் ஆகிய சாதியின மக்கள், தாங்களும் பிறரால் (அய்யன், அய்யங்காரன்) தாழ்த்தப்பட்டவனாக நடத்தப்படுகிறோம்னு உணருகிறானோ அன்றைக்குதான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விடுதலை கிடைக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

என் கூற்று என்னவெனில், அம்பேத்கர் பெயரைப் போட உனக்கு எவ்வளவு மதிப்பு குறைச்சலாகத் தெரியுதோ (அல்லது, தேவர் பூஜை கொண்டாடுவது எவ்வளவு கௌரவமாகத் தெரியுதோ), அதே அளவு மதிப்பு மற்றவனுக்கு 'அம்பேத்கர்' மேல இருக்கு. நீ சேரும்போதே, இக்கல்லூரி 'அம்பேத்கர் சட்டக் கல்லூரி' என்று தான இருந்தது. அப்பவே, இந்தக் கல்லூரியின் பெயரில் 'அம் பேத்கர்' இருக்கார், நான் இக்கல்லூரியில் சேரமாட்டேன் என்று வேற எங்கயாவது போக வேண்டியதுதானே? சேர்ந்து என்ன. கல வரம் பண்ணவா இக்கல்லூரிக்கு வந்தாய்?

தமிழ்ச் செல்வன் - மலேசியா: ஏன்டா ஜாதி வெறி பிடிச்சு அலைய றீங்க. போலிஸ் என்ன இந்தியால தூங்குதா? என்ன கொடுமை இது? இன்னமும் ஜாதி இருக்கிறதா? ஒன்றாய் தமிழனாய் இருப்போமடா. ஜாதி தேவை இல்லை நண்பா. சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்து அவர்களுக்கு தக்க தண்டனை அளிக்க வேண்டும். அறிவு கெட்ட, நெஞ்சில் ஈரமில்லா அரக்கர்கள் காவல்துறையினர். அவர் களையும் கைது செய்ய வேண்டும். இனிமேல் இப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்தால் சுற்றி இருப்பவர்கள் கோழைத்தனமாக இல்லாமல் அதனைத் தடுக்க முயற்சிப்போம். வாழ்க தமிழ்! வாழ்க நமது சமு தாயம்!

வெங்கடேஷ்: அம்பேத்கரை தலித்தாகவும், பசும்பொன் முத்துராம லிங்க தேவரை தேவராகவும் பார்க்காமல், நமக்கு வழிகாட்டிய பொதுத் தலைவர்களாக பார்க்க வேண்டும். சுதந்திரப் போராட்ட தலைவர்களாக பார்க்க வேண்டும். அவர்கள் அனைத்து சாதியின ருக்கும் சொந்தமானவர்கள். அவர்கள் உயிருடன் இருந்தால், தங்கள் பெயரைச் சொல்லி சாதி வன்முறையில் ஈடுபடுபவர்களைக் கடுமை யாகச் சாடியிருப்பார்கள். தேவர், தேவர் இனத்துக்காகப் போராட வில்லை, நாட்டுக்காகப் போராடினார். அம்பேத்கார் தலித் மக்க ளுக்காக மட்டும் சட்டம் இயற்றவில்லை. அனைத்து இந்திய மக்க ளுக்காகவும் சட்டம் இயற்றினார். ஆகவே, அவர்களை சாதி வட் டத்துக்குள் அடைக்காதீர்கள். நாம் அனைவரும் சாதி மறந்து, தமிழர், இந்தியர் என்று ஒன்றுபடுவோம். நாம் சாதி மறந்து, தமிழர் என்று ஒன்றுபட்டு, நம் ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுப்போம். இப்போது அதுதான் நமக்கு தேவை.



படிப்பகம்

www.padippakam.com

காந்திய வழியில் அகிம்சை வழியில், சனநாயக நாட்டில் போராடுங்கள். இது இன்னும் இலங்கையாகவில்லை. தலித் மற்றும் அனைத்து தரப்பினருக்கும் பொதுவானவர் காந்தி. சத்திய சோதனை புத்தகம் அனைவரும் படியுங்கள்.

தலித்துகள் , இனி நீங்கள் உங்களை தலித்துகள் என்று சொல்லிக் கொள்ளாதீர்கள். தலித் என்று தனிமைப்பட வேண்டாம். தமிழர்கள் என்று சொல்லிக் கொள்ளுங்கள். நாம் அனைவரும் தமிழர்கள். தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா!

**சிறியார்:** 1) இந்துக் கட்சிகளில் அதிகம் இருப்பவர்கள் தலித்துகள்தான். ஆனால் இவ்வளவு பிரச்சினையான பின்பும் பி.ஜே.பி ஏன் வாயைத் திறக்கவில்லை?

2) தமிழக பி.ஜே.பி மற்றும் பல இந்து அமைப்புகளின் குரல் என்ன?

3) இந்தியாவை ஆட்சி செய்யும் திறனுள்ள பி.ஜே.பி இந்த பிரச்சினையில் என்ன செய்யப் போகிறது?

**ராம்:** கலவரத்தில் ஈடுபட்டவர்கள் எந்த சாதியைச் சேர்ந்தவர்களாக வேண்டுமானாலும் இருக்கட்டும். வேறு சிலரும் கூறியது போல இந்த பிரச்சனையே ஈழம் போன்ற முக்கியமான அரசியல் பிரச்சனைகளிலிருந்து மக்களைத் திசைதிருப்பும் ஒரு மலிவான அரசியல் தந்திரமாக இருக்கலாம். தெரியவில்லை.

ஆனால் இந்த கலவரத்தால் வெறுப்புற்றிருப்பவர்கள் நமது நாட்டு மக்களின் மீது கைவைப்பதற்கு முன்பு தயவுசெய்து யோசியுங்கள். நாம் வெள்ளைக்காரனுக்கு அடிமையாகிப் போனதற்கு காரணம் அவனுடைய பலம் அல்ல, பிரிந்து வாழும் நம் பலவீனமே. அதனால் பிரித்தாளும் சூழ்ச்சியை அவனால் எளிதாகக் கையாள முடிந்தது. அதையே மீண்டும் நடக்க விடலாமா? அது பைத்தியகாரத்தனமானது. வன்முறையை விடுவோம், ஒன்றாய் இணைவோம்.

**செந்தழல் ரவி:** கத்தியைத் தூக்கிக்கொண்டு ஓடும் வெறியன் பாரதி கண்ணனை கைது செய்து கொலைமுயற்சி வழக்கில் சிறையில் அடைக்க வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

**ஒட்டக்கூத்தன்:** சென்ற வாரம் சென்னை சட்டக் கல்லூரியில் நடந்த அந்த வன்முறைச் சம்பவம் பார்த்தவர் நெஞ்சங்களை கலங்கடித்து இருக்கும். என்னை பொறுத்த வரை அது உணர்ச்சிப் போராட்டம். காலம் காலமாய் அடிமைப்படுத்தப்பட்டு இருந்த ஒரு இனம் அடி வாங்கிக் கொண்டு இருந்த ஒரு இனம் உணர்ச்சி கொண்டு ஒரு படி முன்னேறி இருக்கிறது. அந்த அடிதடிக்கான காரணம். ஒரு சாதிய வன்கொடுமைதான்.

தேவர் ஜெயந்தி கொண்டாட அச்சடிக்கப்பட்ட நோட்டீசில் அம் பேத்கர் சட்டக் கல்லூரி என்பதற்கு பதிலாக, வெறும் சட்டக் கல்லூரி என்றே இருந்திருக்கிறது. அம்பேத்கர் இன மாணவர்கள் இது பற்றி அவர்களிடம் கேட்டதற்கு அந்த ஈன சாதிப் பெயரெல்லாம் போடு வதில்லை என்று சண்டைக்கு பிள்ளையார் சுழி போட்டு இருக்கி றார்கள். எது எப்படியோஅம்பேத்கர் மக்களிடம் இருக்க வேண்டும் என்று சொன்ன சூடும், சொரணையும் இப்போது அவர்களிடத்தில் நான் பார்க்கிறேன்.

•••



படிப்பகம்

www.padippakam.com

## சட்டக் கல்லூரி:
## பத்து பேர் சேர்ந்து ஒருவனை...
## அடேயப்பா, என்ன காட்டுமிராண்டித்தனம் !

முடிந்து விட்டது' என்று நினைத்தோம். 'முடியவிடக் கூடாது' என்பதில் பெரும் முனைப்பு காட்டுகிறது சன் டி.வி. சட்டக் கல்லூரி கலவரத்துக்குப் பின்னணி இசையும் சேர்த்து எப்படியாவது தமிழகத்தைப் பற்ற வைத்து விட வேண்டும் என்ற வெறியுடன் திரும்பத் திரும்ப ஒளிபரப்புகிறது.

ஜெயா டிவியைப் பற்றிச் சொல்லவே தேவையில்லை. மூவேந்தர் முன்னேற்றக் கழகத்தின் ஸ்ரீதர் வாண்டையார், சேது ராமன் எல்லோரும் இந்த 'மனித உரிமை மீறலுக்கு' எதிராகக் குமுறுகிறார்கள். கொந்தளிக்கிறார்கள்.

அடித்தவர்கள் என்ன சாதி, அடிபட்டவர்கள் என்ன சாதி என்பதை டி.விக்கள் சொல்வதில்லை. அது பத்திரிகை தருமமில்லை என்பதனால் மட்டுமல்ல, அது தேவைப்படவில்லை. மனித உரிமைக்காக வாண்டையார் குரல் கொடுப்பதைப் பார்த்த பிறகு கூட, பாதிக்கப்பட்ட மனிதர்கள் எந்த 'இனத்தை'ச் சேர்ந்தவர்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு மாங்காய் மடையர்களா என்ன தமிழர்கள்?

பிதுங்கி வழியும் சென்னை மாநகரின் மின்சார ரயிலில், சுற்றியிருப்பவர்களில் யார் என்ன சாதி என்று தெரிந்துகொள்ள முடியாத



படிப்பகம்

www.padippakam.com

அந்தச் சூழலில், ஐகோர்ட் விவகாரத்தை இப்படி அலசுகிறார்கள் பயணிகள்.

''பாக்கவே குலை நடுங்குது சார். அந்தப் பையனோட அம்மா அழுவுறதப் பாக்க முடியலன்னு என் வொய்ப் டிவியையே ஆஃப் பண்ணிட்டா.''

''இவாள்லாம் ஜட்ஜா வந்தா நாடு உருப்பட்ட மாதிரிதான்.''

''செத்த நாயக்கூட இப்படி அடிக்க மனசு வராது சார். எந்த ஜாதியா இருந்தா என்ன சார்? அதுக்காக இப்படியா? இப்போ நீங்க என்ன ஜாதின்னு எனக்குத் தெரியுமா, நான் என்ன ஜாதின்னு உங்களுக்குத் தெரியுமா?''

''டிரான்ஸ்போர்ட்டுக்கு ஜாதி தலைவர் பேர வச்சாங்க - கலவரம். மாவட்டத்துக்கு ஜாதி தலைவர் பேர வச்சாங்க - அதுக்கும் கலவரம். அதையெல்லாம் எடுத்தாச்சுல்ல, அதே மாதிரி காலேஜுக்கும் எடுத்துர வேண்டியதுதானே.''

சாதியின் பெயரைச் சொல்லாமலேயே, சாதிச் சார்பை நிலைநாட்டிக் கொள்ளும் இந்த உரையாடலைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ஒரு செல் உயிரினங்களும், தாவரங்களும் தமக்குள் பரிமாறிக் கொள்ளும் சங்கேத மொழியை ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள் விஞ்ஞானிகள். ஆனால், காதலைப் போலவே கண்ஜாடையையும் மவுனத்தையும் கூட ஒரு மொழியாக மாற்றித் தன் இனத்தை அடையாளம் காணும் வித்தையைக் கண்டுபிடித்திருக்கிறது சாதி. புத்தன் முதல் பெரியார் வரை எத்தனை பேர் வந்தால் என்ன, பாஷாணத்தில் புழுத்த புழுவல்லவோ சாதி!

ஒளிபரப்பப்பட்டு வரும் இந்த வன்முறை, தாக்குகின்ற மாணவர்களுக்கும், வேடிக்கை பார்த்து நின்ற போலீசுக்கும் எதிராக வலுவான 'பொதுக்கருத்தை' உருவாக்கியிருக்கிறது. பொதுவாக எல்லா வன்முறையையும் எதிர்ப்பது போலவும், சாதியை வெறுப்பது போலவும், சட்டத்தின் ஆட்சிக்காகக் குரல் கொடுப்பதைப் போலவும் கட்டமைக்கப்பட்டுள்ள இந்தப் பொதுக்கருத்தின் ஒவ்வொரு கல்லையும் இணைக்கும் சாந்து 'ஆதிக்கசாதி சிந்தனை'.



படிப்பகம்

www.padippakam.com

அம்பேத்கரின் வார்த்தைகளில் சொல்வதென்றால் 'இந்து மனோ பாவம்'.

''தலித்துகள் தாக்குகிறார்கள், நம்மாளு அடிபடுகிறான், போலீசு வேடிக்கை பார்க்கிறது'' - இந்த மெசேஜ் கடைசித் 'தமிழனின்' மண்டை வரை இறக்கப்பட்டிருக்கிறது. எனினும், நாம் அஞ்சியது போல இதுவரை தமிழகம் பற்றி எரியவில்லை என்பது கொஞ்சம் ஆறுதலாகத்தான் இருக்கிறது. ஆயினும் இதை நினைத்து மனப்பூர் வமாக மகிழ்ச்சி கொள்ள முடியவில்லை. இந்த அமைதிக்குப் பல காரணங்கள் இருக்கலாம்.

கணிதத்தில் கூட 'சமன் செய்யும் பிழை' (compensating error) என்று ஒன்று உண்டு. வரவுக்கணக்கில் 900 ரூபாய் கூட்டல் பிழையால் அதிகமாகி, செலவுக் கணக்கில் 100 ரூபாயை 1000 என்று தவறாக எழுதியிருந்தாலும் கடைசியில் கணக்கு டாலி (tally)ஆகி விடும். அதுபோல இந்த அமைதியைத் தோற்றுவித்த காரணிகள் பலவாக இருக்கலாம். இதை வைத்தே தமிழகம் சாதிவெறியற்ற சமத்துவப் பூங்காவாகி விட்டது என்று அமைதி கொள்வதற்கு இட மில்லை.

எம்முடைய முந்தைய பதிவுக்கு பின்னூட்டமிட்ட சில பதிவர் களின் கருத்துக்கள் கீழ்க்கண்டவாறு இருக்கின்றன:

''வன்முறை எந்த வடிவத்தில் யாரிடமிருந்து வந்தாலும் கண் டிக்க வேண்டும். வினவு நடுநிலை தவறி தலித் தரப்பை ஆதரிக் கிறது. இதன் மூலம் வன்முறையை மேலும் தூண்டி விடுகிறது.''

''தேவர் சாதியினரின் நியாயத்தைப் பேச யாருமில்லை. இதுவரை சாதி பார்க்காத நான், இனி தேவர் சாதிக்காக நிற்கப் போகிறேன்.''

''பார்ப்பனியம் என்ற சொல்லை எதற்கு நுழைக்கிறீர்கள். பிரா மணர்களுக்கும் இந்த வன்முறைக்கும் என்ன சம்மந்தம்?''

''நான் தனிப்பட்ட முறையில் சாதி பார்ப்பதில்லை. எனக்கு பல தலித் நண்பர்கள் இருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட சாதியைச் சேர்ந்த ஒரு சிலரின் தவறுக்காக அந்தச் சாதியையே குற்றம் சொல்வதை என்னால் ஏற்க முடியாது.''



படிப்பகம்

இந்தப் பதிவர்கள் ஒவ்வொருவரின் கருத்துக்கும் தனித்தனியே பதில் எழுதுவது கடினம். அதைக்காட்டிலும் இத்தகைய பின்னூட் டங்களை ஆளுகின்ற மனோபாவத்திற்கு பதிலளிப்பது பொருத் தமாக இருக்கும் என்று கருதுகிறோம்.

சட்டக்கல்லூரி வன்முறை என்பது ஒரு ஒளிபரப்பப்பட்ட வன்முறை. நியாயங்களும், அறிவும், காட்சிப் படிமங்களால் தோற் கடிக்கப்படும் காலம் இது. ஒரு சாதிவெறியனின் அனல் கக்கும் பேச்சு ஏற்படுத்தக் கூடிய மனப்பதிவைக் காட்டிலும் அழுத்தமான மனப்பதிவை இந்தக் காட்சிப் படிமங்கள் ஏற்படுத்தியுள்ளன.

''தலித்துகள் தாக்குகிறார்கள், நம்மாளு அடிபடுகிறான், போலீசு வேடிக்கை பார்க்கிறது'' என்ற ''இந்த ஸ்டோரியின் ஒன்லைனில்'' நம்மாளு என்ற சொல் தேவர் சாதியை மட்டும் குறிப்பதல்ல. அது ஆதிக்கசாதியினர் அனைவரையும் தழுவி நிற்பது. இன்று அடங்கி யிருப்பது போலத் தோன்றினாலும் நாளை ஏதாவது ஒரு சந்தர்ப் பத்தில் (நிச்சயமாக வர இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில்) லேசாகத் தண்ணீர் தெளித்து விட்டால் கூட, குப்பென்று சிலிர்த்து எழக்கூடியது. எனவே, இதனுடைய வேரைக் கெல்லி எடுத்துப் பார்ப்பது அவசியம்.

ஒளிபரப்பப்பட்டு வரும் இந்த வன்முறைக் காட்சி மிகவும் கொடூரமாக இருக்கிறது என்பதிலோ, பிள்ளை அடிபடுவதைப் பார்த்துப் பதறும் அந்தத் தாயின் கண்ணீர் நெஞ்சை உருக்குகிறது என் பதிலோ ஐயமில்லை. அடிபட்ட மகனுக்காகத் துடிக்கும் அந்தத் தாயோ, அல்லது தந்தையோ சாதிவெறியர்களாக இருக்கக் கூடும் என்று நாம் ஊகிக்கவும் இல்லை.

எனினும், இந்த வன்முறை அரிதானது. அதாவது தலித்துகள் ஆதிக்க சாதியினரைத் திருப்பித் தாக்கும் இந்த வன்முறை மிகவும் அரிதானது. தலித் மக்கள் மீது ஆதிக்க சாதியினர் செலுத்தி வரும் வன்முறை அரிதானதல்ல. அது மிகவும் பொதுவானது. ஆதிக்கசாதி மனோபாவத்தைப் பொருத்தவரை அது 'இயல்பானது'.

தலித் மக்கள் மீது திணிக்கப்படும் அடிமைத் தொழில்கள், தனிக் குவளை, தனிச்சுடுகாடு, தனிக்குடியிருப்பு, போன்ற 'வழக்கங்கள்' இன்றளவும் எல்லா கிராமங்களிலும் நீக்கமற நின்று நிலவுவதை யாரும் இல்லை என்று சொல்ல முடியாது.

www.padippakam.com

இந்த வழக்கங்கள் அல்லது மரபுகள் கடந்துபோன காலத்தின் எச்சங்கள் என்றும், இன்று காலம் ரொம்பவும் மாறிப்போச்சு என்றும் நினைத்துக் கொண்டிருப்பவர்கள், கல்லூரி மாணவர் விடுதிகள்கூட ஏன் தனித்தனியாக இருக்கின்றன என்பதைக் கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

மாணவர் விடுதிகளும், மாணவியர் விடுதிகளும் ஏன் தனித்தனியாக இருக்கின்றன என்று யாரையாவது கேட்டுப் பாருங்கள். இப்படிப்பட்ட 'கேனத்தனமான' கேள்வி அவர்களுக்கு ஆச்சரியமூட்டும். ''பஞ்சையும் நெருப்பையும் யாராவது பக்கத்தில் வைப்பார்களா? ஆதாமுக்கும் ஏவாளுக்கும் அன்று முதல் இன்று வரை தனி விடுதிதானே'' என்று பதிலளிப்பார்கள்.

ஆணாதிக்கத்தின் அபாயத்திலிருந்து பெண்களைப் பாதுகாக்க வேறு வழியில்லாத காரணத்தினால்தான் பெண்களைத் தனியாகப் பாதுகாக்க வேண்டியிருக்கிறது என்ற சாதாரணமான உண்மைகூட ஆண் மனதுக்கு உரைப்பதில்லை.

அது போலவே, ''எஸ்.சி - பி.சி ஹாஸ்டல்கள் தனித்தனியே அமைக்கப் பட்டிருப்பதும்'' சாதி ஆதிக்கத்தின் விளைவுதான் என்பது ஆதிக்க சாதியினருக்கு உரைப்பதில்லை. இது நூற்றாண்டு காலமாக நின்று நிலவும் வழக்கமோ மரபோ அல்ல. ஆதிக்கசாதியினரின் மன உணர்வைப் புரிந்துகொண்டு அரசாங்கம் செய்திருக்கும் ஏற்பாடு. சட்டக் கல்லூரி விடுதி ஒன்றாக இருந்ததும் பிரச்சினை 'வெடிப்பதற்கு' ஒரு காரணம்.

வெடிக்கும்போது மட்டும்தான் இத்தகையதொரு சாதிப் பிரச்சினை சமூகத்தில் நிலவுவதே தங்களுக்குத் தெரியவருவது போல நடிப்பதற்கு ஆதிக்கசாதியினரின் மூளை நன்றாகப் பயிற்றுவிக்கப் பட்டிருக்கிறது.

உலகப் புகழ் பெற்ற இசைஞானி இளையராஜாவின் ஊரும், தமிழ் சினிமாவின் பாடல் பெற்ற தலமுமான பண்ணைப்புரத்தில், மாஸ்ட்ரோ ராஜாவின் மாமன் மச்சான்களுக்கு டீக்கடையில் தனிக் குவளைதான். எமது அமைப்பைச் சேர்ந்த தோழர்கள் அதை எதிர்த்துப் போராடிய பிறகுதான் 'அப்படியா?' என்று புருவம்



படிப்பகம்

www.padippakam.com

உயர்த்தியது தமிழ்நாடு. இன்னமும் இந்தச் சேதி பலருக்குத் தெரியாமல் இருக்கக் கூடும்.

ஒருவேளை தெரிந்தாலும், ''ஒரு தலித்தின் இசை என்பதற்காகப் புறக்கணிக்காமல், அதனைக் கொண்டாடிய தமிழர்தம் தகைமை குறித்த பெருமிதத்தை ஒப்பிடுகையில் தனி கிளாஸ் பிரச்சினை ஒரு சில்லறை விவகாரமே'' என்று கூட ஆதிக்க மனோபாவம் அமைதி கொள்ளக் கூடும்.

பண்ணைப்புரம் மட்டுமா? கண்டதேவி, சேலம் மாரியம்மன் கோயில், பாப்பாபட்டி, கீரிப்பட்டி, மேலவளவு, திண்ணியம்.. இன்னும் எத்தனை எடுத்துக்காட்டுகள் வேண்டும்? எண்ணிக்கையில் அதிகமாக இருப்பதனாலேயே இவை சகஜமாகி விடுகின்றனவோ?

திண்ணியம் கிராமத்தில் கொடுத்த பணத்தைத் திருப்பிக்கேட்ட குற்றத்துக்காக, தலித்துக்கு சூடு வைத்து, வாயில் மலம் திணிக்கப் பட்ட வன்முறை சட்டக் கல்லூரி வன்முறையைக் காட்டிலும் மென்மையானதா? அந்தக் குற்றவாளிகளை நீதிமன்றம் தீண்டாமைக் குற்றத்துக்காக தண்டிக்கவில்லை என்பதைப் பதிவர்கள் அறிவார்களா?

தேவர் சாதியினர் சூழ்ந்து நின்று கொண்டு வார்த்தை வார்த்தையாகச் சொல்லிக் கொடுக்க, ''யாரும் என்னைக் கட்டாயப்படுத்தவில்லை. நானாகத்தான் பஞ்சாயத்து தலைவர் பதவியை ராஜினாமா செய்கிறேன்'' என்று பாப்பாபட்டி தலித் பஞ்சாயத்து தலைவர் டி.வி. காமெராவின் முன் சொல்லவைக்கப் பட்டாரே, அந்த வன்முறையைக் கண்டு கோடிக்கணக்கான தலித் மக்களின் சுயமரியாதை உணர்வு புழுவாய்த் துடித்திருக்குமே, அதை யாராலாவது உணர முடிகிறதா?

அனைத்திந்தியப் புகழ் பெற்ற 'கயர்லாஞ்சி படுகொலை'யில் போட்மாங்கே என்ற தலித்தின் நிலத்தைப் பறித்துக் கொண்டு, அதற்கெதிராக போலீசில் அவர் புகார் கொடுத்த குற்றத்துக்காக, அவரது மனைவியையும் கல்லூரியில் படிக்கும் மகளையும் கற்பழித்துக் கொலை செய்து, மகன்கள் இருவரையும் கொலைசெய்த ஆதிக்க சாதிக் குற்றவாளிகளில் ஒருவர் கூட தீண்டாமைக் குற்றத்துக்காகத் தண்டிக்கப்படவில்லை என்பதை அறிவீர்களா? மேல் முறையீட்டில்



படிப்பகம்

www.padippakam.com

விடுதலையாவதற்கு தோதான ஓட்டைகளை வைத்துத்தான் அவர் களில் சிலருக்குத் தூக்கு தண்டனை அளிக்கப்பட்டிருக்கிறது என்பது உங்களுக்கு தெரியுமா?

மேலவளவு படுகொலையை விசாரித்த செசன்ஸ் நீதிபதி தேவர் சாதியைச் சேர்ந்தவர் என்பதும், கொலைகாரர்களின் சாதிவெறியை விட நீதிமன்றத்தின் சாதிவெறி கொடியதாக இருந்தது என்பதும் உங் களுக்கு தெரியுமா? ''உண்மையான கொலைகாரர்கள் பலர் தண்டிக் கப்படவில்லை'' என்று சென்னை உயர்நீதி மன்றம் தனது தீர்ப் பிலேயே குறிப்பிட்டிருந்தும், தமிழகத்தின் கழக அரசுகள் அதனை இதுவரை கண்டுகொள்ளவில்லை என்பதை அறிவீர்களா?

எத்தனை கொலைகள், எத்தனை வல்லுறவுகள்.. அவற்றை யெல்லாம் பட்டியலிட்டால் இந்தப் பதிவு மீட்டர் கணக்கில் நீளும்.

ஒளிபரப்பப் பட்ட ஒரு வன்முறை - ஒளிபரப்பப்படாத ஆயிரம் வன்முறைகள்!

மேலவளவும், திண்ணியமும் 'லைவ்' ஆக ஒளிபரப்பப்படாத காரணத்தினால்தான் தமிழகம் குமுறிக் கொந்தளிக்கவில்லையோ? இந்தக் காட்சிகள் எல்லாம் 'லைவ்' ஆகக் காமெராவில் கிடைக்காத துர்ப்பாக்கியத்தினால்தான் சன் டி.வி.யும், ஜெயா டி.வி.யும் அவற்றை ஒளிபரப்பவில்லையோ? சட்டக் கல்லூரியில் அடிபட்ட தமிழர்களுக்காகவும், ஈழத்தில் அடிபடும் தமிழர்களுக்காகவும் பதறித் துடிக்கும் வைகோவின் வரையப்பட்ட மீசை, மேற்கூறிய தமி ழர்களுக்காக என்றுமே இப்படித் துடித்ததில்லையே, ஏன்? கருணா நிதியை ஒழித்துக் கட்ட அன்றாடம் கிடைக்கின்ற இத்தகைய பொன்னான வாய்ப்புகளை இவர்களெல்லாம் தெரிந்தே கைநழுவ விடுவது ஏன்?

''ஏனென்றால் இவை ஒளிபரப்பப் படவில்லை'' என்று சொல்லி சமாதானமடைந்து கொள்வோமா? மேன்மை தங்கிய ஆதிக்கசாதி மனோபாவத்தின் கருணை உணர்ச்சியை உசுப்பிவிடும் வகையில் அவர்களுடைய மனச்சாட்சியின் சந்நிதியில் இவை சமர்ப் பிக்கப்படவில்லை என்று நியாயம் கற்பித்துக் கொள்வோமா?

அத்தகைய 'நியாயம்' ஷகீலா படத்தை விடவும் அம்மணமா கவும், ஆபாசமாகவும் இருப்பதை உங்களால் உணர முடிய வில்லையா?



படிப்பகம்

www.padippakam.com

இவையெல்லாம் ஒளிபரப்பப் படவில்லை என்பது வேறு கதை. ஒருவேளை ஒளிபரப்பப் பட்டாலும் நாம் பார்க்க விரும்பும் காட்சிகளை மட்டுமே பார்ப்பதற்கு கண்கள் பயிற்றுவிக்கப் பட்டிருக்கின்றன. கேட்க விரும்பும் செய்திகளைக் கேட்பதற்கு மட்டுமே செவிகள் பக்குவப்படுத்தப் பட்டிருக்கின்றன. உணர்ச்சிவயப்பட விரும்பும் சம்பவங்களுக்கு மட்டுமே உணர்ச்சிவயப்படுமாறு இதயம் தடிமனாக்கப் பட்டிருக்கிறது.

ஏனென்றால் இது பல நூற்றாண்டுகள்ாய் சவாரி செய்து சவாரி செய்து காய்த்துப் போன புட்டம். ''பல நூற்றாண்டுகளாய் சுமந்து சுமந்து குதிரையின் முதுகும் காய்த்துப் போயிருக்க வேண்டுமல்லவா? அதுதானே இயற்கையின் நியதி?'' என்று ஆதிக்கசாதியினரின் புட்டம் சிந்திக்கிறது.

தங்களது புட்டத்தின் இந்த சிந்தனையை அனுதாபத்துடன் பரிசீலிக்குமாறு தலித் மக்களுக்கும் சாதி ஒழிப்பாளர்களுக்கும் ஆதிக்கசாதி மனோபாவம் வேண்டுகோள் விடுக்கிறது.

அம்பேத்கரிடம் காந்தி விடுத்த வேண்டுகோளும் இதுதான். ''ஆழ்ந்த இறை நம்பிக்கை உள்ள ஒரு தலித்தை சங்கராச்சாரி ஆக்கி, அவர் காலில் பார்ப்பனர்கள் விழுந்து வணங்கத் தயாரா? தீண்டாமையைக் கடைப்பிடிப்பவன் காங்கிரசில் உறுப்பினராக இருக்க முடியாது என்று விதி செய்யத் தயாரா?'' என்ற கேள்விகளை அம்பேத்கர் எழுப்பியபோது காந்தி அளித்த பதிலின் சாரம் என்ன?

''தலித் மக்களுக்கு சாதி இந்துக்கள் இழைத்த கொடுமைக்கு பரிகாரம் தேடிக்கொள்ள அவர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள்''- இதுதான் காந்தியின் பதில்.

எப்போது பரிகாரம் தேடுவார்கள்? அதற்கு இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் தேவைப்படும்? அவர்களுக்கு விருப்பப்பட்ட போது, அவர்களுக்கு விருப்பப்பட்ட முறையில் பரிகாரம் தேடுவார்கள். அதுவரை 'குதிரை' காத்திருக்க வேண்டும். சுமக்கவும் வேண்டும்.

காந்தியின் பதிலில் இருந்த 'நேர்மை' கூட தமிழகத்தின் ஆதிக்க சாதியினரிடம் இல்லை. ராஜினாமா செய்வதையே முதல் நிபந்தனையாகக் கொண்டு பாப்பாபட்டி தேவர் சாதியினரால் 'தேர்ந்தெடுக்கப்



படிப்பகம்

www.padippakam.com

பட்ட' தலித் பஞ்சாயத்து தலைவர், டி.வி. காமெராவின் முன் தனது ராஜினாமாவைச் சமர்ப்பிக்கிறார்.

அடுத்த கணமே, ''நாங்களெல்லாம் அண்ணன் தம்பி போல வித்தியாசமில்லாமல் ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறோம். வெளி ஆட்கள்தான் எங்களிடம் பிரிவினையை உருவாக்குகிறார்கள்'' என்று தேவர் சாதியினர் பேட்டி கொடுக்கிறார்கள்.

இப்படியொரு பச்சைப் பொய்யைச் சொல்வதற்காக அவர்கள் கடுகளவும் கூச்சப்படவில்லை. ஏனென்றால் ''இதுதான் இயற்கை நியதி, இதுதான் மரபு'' என்று அவர்கள் நம்புகிறார்கள். இந்த மரபு இந்து மதத்தால் புனிதப்படுத்தப்பட்ட மரபு. ''பார்ப்பனர்களை ஏன் இழுக்கிறீர்கள்?'' என்று சில பதிவர்கள் கொதிக்கிறார்களே, அந்தப் பார்ப்பனர்களால், இன்றளவும் அவர்கள் போற்றி வரும் பார்ப்பனியத்தால், சுருதிகள், ஸ்மிருதிகள், புராணங்களால் நியாயப்படுத்தப்படும் மரபு. சங்கராச்சாரிகளால் நிலைநாட்டப்பட்டு வரும் மரபு. அரியானாவில் மாட்டைக் கொன்றதாக 5 தலித்துகளைக் கண்டதுண்டமாக வெட்டிப் போட்டு, 'அதுதான் எங்கள் தருமம்' என்று பாரதிய ஜனதா எம்.பி வேதாந்தியால் பிரகடனப்படுத்தப்பட்ட மரபு. இதன் காரணமாகத்தான் ''இந்து மதம் என்பது அறவுணர்ச்சியே இல்லாத மதம்'' என்றார் அம்பேத்கர்.

தேவர் ஜெயந்தி பற்றிய எமது பதிவுக்குப் பின்னூட்டம் போட்ட ஒரு பதிவர், ''என்னைப் பொறுத்தவரை நான் சாதி பார்ப்பதில்லை. யாரோ ஒரு சிலர் செய்யும் குற்றத்துக்காக ஒரு சாதியையே பழி தூற்றுவது என்ன நியாயம்?'' என்ற கேள்வியை எழுப்பியிருந்தார். அந்தப் பதிவரின் நேர்மையை நாம் சந்தேகிக்கவில்லை.

ஆனால், ''என்னைப் பொருத்தவரை நான் திருடன் இல்லை, பொறுக்கி இல்லை'' என்று கூறி ஒதுங்கிக் கொள்ளும்படியான தனி நபரின் ஒழுக்கம் குறித்த விவகாரமல்ல சாதி.

அது மாத்திரமல்ல, ''நான் திருடன் இல்லை என்றால், திருடர்களை உதைப்பதற்கு நான் ஏன் முன்வருவதில்லை? என் மாமனோ மச்சானோ சொந்தக்காரனோ அந்தக் குற்றத்தை இழைக்கும்போது அதை எதிர்க்க விடாமல் என்னை மவுனமாக இருக்கச் செய்வது எது?'' என்ற கேள்விக்கும் அந்தப் பதிவரைப் போன்றோர் பதில் தேட வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

இந்த மவுனத்துக்கு ஆயிரம் விளக்கங்கள் சொல்லி நியாயப்ப டுத்தலாம். ஆனால் மவுனத்தின் விளைவு சம்மதம்தான். வாங்கிய சம்பளத்துக்கு உரிய கடமையை ஆற்றாமல், ''அந்த அநீதியான வன் முறையை''ப் பார்த்துக் கொண்டு நின்ற குற்றத்துக்காக சட்டக்கல் லூரியின் வாயிலில் நின்ற போலீசாரை தமிழகமே சபிக்கிறது. தற் காலிகப் பணிநீக்கம் செய்திருக்கிறது அரசாங்கம்.

போலீசாரின் மவுனம், சட்டப்படி கடமைதவறிய குற்றமாகி விட்டது. சொந்தக்காரனும் சாதிக்காரனும் இழைக்கும் அநீதிகளைப் பார்த்துக் கொண்டு நிற்கும் 'நல்லவர்களின் மவுனத்திற்கு' யார் தண்டனை வழங்குவது? அவர்களை எதிலிருந்து சஸ்பெண்டு செய்வது?

''என்னை தேவர் என்றோ, படையாச்சி என்றோ, பிராமணன் என்றோ நான் கருதிக்கொள்வது இல்லை'' என்பது உண்மை யானால், தேவர் சாதியையும் பார்ப்பன சாதியையும் இடித்துரைக் கும்போது, அந்தச் சாதியினரின் வரலாற்றுக் குற்றங்களையும், நிகழ் காலக் குற்றங்களையும் சாடும்போது, எனக்கு ஏன் தசையாட வேண்டும்? சாதி அடையாளம் இழிவானது என்று புரிந்து அதனைத் துறந்தவனுக்கு அந்த அடையாளத்தின் பால் ஏன் அனுதாபம் பிறக்க வேண்டும்?

நல்லெண்ணம் கொண்டோராகவும், சாதி உணர்வு இல்லாதவர் களாகவும் தங்களைக் கருதிக் கொள்பவர்கள் இதனைப் பரிசீலித்துப் பார்க்க வேண்டும். ''எம்பேரு கோபாலகிருஷ்ணன்'' என்று நீங்கள் சொல்லி, ஊர்க்கார பயக ஒத்துக் கொள்ளாமல் ''சப்பாணி'' என்று சொன்னால் கோபப்படுவதற்கு, இது ஒரு தனிப்பட்ட மனிதனின் பெயர் சம்மந்தப்பட்ட விவகாரம் இல்லையே. அவனுடைய சமூக நடத்தை தொடர்பான பிரச்சினையாயிற்றே!

''சட்டக் கல்லூரி பிரச்சினை வெடிப்பதற்கான பொறி, தேவர் ஜெயந்தி போஸ்டர்தான்'' என்கிறார்கள். தேவர் நல்லவர், வல்லவர் என்றெல்லாம் பல பின்னூட்டங்கள் வந்தன. இப்போது அதற்குள் நாம் போகவில்லை.

இன்று தேவர் குருபூஜை எதற்காக நடத்தப்படுகிறது? அவர் நேதாஜியுடன் இணைந்து சுதந்திரப் போரில் ஈடுபட்டார் என்பதற்



படிப்பகம்

www.padippakam.com

காகவா, அல்லது சில பதிவர்கள் கூறுவது போல அவர் தீண்டா மைக்கு எதிராகக் குரல் கொடுத்தார் என்பதற்காகவா? இன்று காங் கிரசு, பாஜக, திமுக, அதிமுக முதல் கம்யூனிஸ்டு கட்சிகள் வரை குரு பூஜைக்குப் போய் சாமி கும்பிடுகிறார்களே, அங்கே உலக வர்த்தகக் கழகத்துக்கு எதிராக உறுதிமொழி எடுத்துக் கொள்கிறார்களா, அல்லது தீண்டாமை ஒழிப்பு உறுதி ஏற்கிறார்களா?

இன்னும் புரியும்படி சொல்வதென்றால், காந்தி நினைவு நாளுக்கு பனியா குருபூஜை என்றோ, கட்டபொம்மன் பிறந்த நாளுக்கு நாயக்கர் குருபூஜை என்றோ, மருதுவின் நினைவுநாளுக்கு சேர்வை குருபூஜை என்றோ, வ.உ.சி பிறந்த நாளுக்கு பிள்ளைவாள் குருபூஜை என்றோ காமராசர் பிறந்த நாளுக்கு நாடார் குருபூஜை என்றோ பெயரிடப் படாதது ஏன்? அந்தந்த சாதிக்காரர்களுக்கு அப் படியொரு சாதி அபிமானம் இருக்கத்தான் செய்கிறது. என்றாலும் தேவருக்கு மட்டும்தான் 'குருபூஜை'.

அங்கே மட்டும்தான் மொட்டை போட்டு சாமி கும்பிடுவது போன்ற வழிபாட்டு முறைகள். பாப்பாபட்டி, கீரிப்பட்டி முதல் மேலவளவு வரை தேவர் சாதிவெறியர்களால் ரணமாக்கப்பட்டி ருக்கும் தலித் இளைஞர்களின் மன உணர்வுகள் ''இந்த சாதி வழி பாட்டை சகித்துக் கொள்ள வேண்டும். இதற்கு போஸ்டரும் பானரும் வைத்தால் முகம் சுளிக்கக் கூடாது'' என்பது சாதி வெறியர் களின் எதிர்பார்ப்பு.

சட்டக் கல்லூரி தலித் மாணவர்கள் இதையும் சகித்துக் கொண் டிருக்கிறார்கள். மேலவளவில் தலித் ஊராட்சித் தலைவரை வெட்டி யெறிந்ததைப் போலவே, சட்டக்கல்லூரியின் முன்னால் இருந்த 'அம்பேத்கர்' பெயரையும் வெட்டியிருக்கிறார்கள் சாதிவெறியர்கள்.

தாங்கள் அடிமை நிலையிலிருந்து விடுபடவும், கல்வி கற்கவும் ஆதாரமாக இருந்த தலைவரின் பெயரை வெட்டியெறிந்ததையும் தலித் மாணவர்கள் மவுனமாகச் சகித்துக் கொண்டிருக்க வேண்டும் என்பது சாதிவெறியர்களின் எதிர்பார்ப்பு.

சாதித் தலைவரான தேவரை தேசியத்தலைவராகவும், தேசியத் தலைவரான அம்பேத்கரை சாதித்தலைவராகவும் ஒரே நேரத்தில் இடமாற்றம் செய்யும் இந்த வன்முறையை எதிர்த்து நியாயமாக



படிப்பகம்

www.padippakam.com

தாத்தாவின் குவளையில் இன்னும் டீ ஊற்றப்படவில்லை. என்னுடைய டீயையும் இன்னும் நான் குடிக்கவில்லை.

அவர்கள் பத்து பேர் - நானும் தாத்தாவும் மட்டும். கோபம், பயம்.. கண்ணீர் முட்டியது.

''எனக்கும் டீ வேண்டாங்க'' என்று சொல்லி விட்டு வேகமாக அந்த இடத்தை விட்டு காலனிக்கே போய்விட்டேன். மாலை கிளம்பி விட்டேன். நடந்தது என்ன என்பது எனக்கும் தாத்தாவுக்கும் மட்டும்தான் தெரியும். புறப்படுவதற்கு முன் அவருடைய கையை ஒரு முறை அழுந்தப் பற்றியதைத் தவிர வேறு எதையும் நான் அவருக்குச் சொல்லவில்லை. சொல்ல முடியவுமில்லை.

இது முன்னொரு நாள் நான் நேரில் அனுபவித்த வன்முறை. தாத்தாவுக்கு அது அனுபவித்துப் பழகிய வன்முறை. குஜராத் முஸ்லிம் மக்கள் அனுபவிக்கும் வன்முறை. ஒவ்வொருநாளும் ஒவ்வொரு கணமும் இந்த நாட்டின் தலித் மக்கள் அனுபவித்து வரும் வன்முறை.

பார்ப்பனர் முதல் வேளாளர், முதலியார், செட்டியார், தேவர், வன்னியர், கவுண்டர் போன்றோரடங்கிய ''பெரும்பான்மை இந்துக்கள்'' பல்லாயிரம் ஆண்டுகளாக தலித் மக்கள் மீது மிகவும் இயல்பாகச் செலுத்தி வரும் வன்முறை.

ஆண்டுகள் கடந்து விட்டன. இந்தச் சம்பவத்தை டீக்கடைக்காரர் மறுநாளே மறந்திருப்பார். தாத்தாவும் கூட மறந்திருக்கக் கூடும். ஆனால் இந்த வன்முறையின் தழும்பை என்னுடைய நினைவுகள் தீண்டும் ஒவ்வொரு முறையும், குத்துக்காலிட்டபடி கையில் குவளையுடன் அமர்ந்திருக்கும் தாத்தாவின் முகம் சுரீரென்று நெஞ்சைக் குத்துகிறது.

பேச வந்த விசயத்திலிருந்து நான் வெகுதூரம் விலகிப் போய் விட்டேனோ? நாம் சட்டக் கல்லூரி மாணவர் வன்முறையைப் பற்றியல்லவா பேசிக்கொண்டிருந்தோம். பத்து பேர் சேர்ந்து ஒருவனை அடிக்கும் வன்முறை - அடேயப்பா, அது எவ்வளவு காட்டுமிராண்டித் தனமானது!

•••



படிப்பகம்

www.padippakam.com

## வாசகர் விவாதம்

**தமிழ் ஓவியா:** ஒளிபரப்பப்பட்ட ஒரு வன்முறை - ஒளிபரப்பப்படாத ஆயிரம் வன்முறைகள்!

இந்த ஒரு வாக்கியத்தில் அத்தனையும் அடங்கி விட்டது.

**பொறம்போக்கு:** நான் இன்றுதான் கவனித்து விட்டு வருகிறேன். சென்னை அரசு மருத்துவமனையில் அடிப்பட்டு கிடக்கும் (அ)சிங் கங்களுக்கு ஆறுதல் சொல்ல முட்டாள் முன்னேற்ற கழகத்தினர் மஞ்சள் கொடிகளைத் தலையில் கட்டியவாறு கூச்சலிட்டபடி மருத் துவமனையிலிருந்து போகிறார்கள்.

அரசு மருத்துவமனை பொதுமக்களுக்கானது. நோயாளிகளை தொந்தரவு செய்வது எத்தனை குரூரம் என்பது கூட அறியாத முட் டாள்கள் கத்தியபடி போவதை, சிக்னலை மீறி 10 இரு சக்கர வாக னங்களில் போவதைக் கண்டும் காணாமல் இருக்கிறார்கள் காவல் துறையினர். இது ஒரு ஆரம்பம்தான். இவர்கள் திருந்தவே மாட் டார்கள். மீண்டும் குற்றப் பரம்பரைச் சட்டம் தேவை இவர்களை ஒடுக்க. வாங்கினது பத்தாது இவனுங்களுக்கு.

**சந்தன முல்லை:** நல்ல வியூ வினவு! யாராவது இதைச் சொல்ல மாட்டார்களா என்றெண்ணிக் கொண்டிருந்தேன்! முதலில் என்ன தான் பிரச்சினை என்று அறிந்துகொள்ள முயற்சித்தபோது தட்ஸ் தமிழில் விடுதியில் என்ன குழப்பம் என்று போட்டிருந்தார்கள்.

அந்த மாணவர்களின் பிரச்சினைகளை, இல்லை அவர்கள் எதிர் கொள்ளும் சிக்கல்களை என்றாவது இதற்குமுன் அறிந்திருக் கிறோமா, அறிந்திருந்தாலும் அதைத் தடுக்க முயற்சி செய்திருக்



படிப்பகம்

www.padippakam.com

கிறோமா? சாதிப் பிரச்சினை நீறு பூத்த நெருப்பாக மட்டுமே இருந்திருக்கிறது. ஆனால் மாணவர்கள் இந்த அளவிற்கு வெறிகொள்ள வேண்டுமானால், அதன் பின்புலம் எவ்வளவு மோசமானதாயிருக்க வேண்டும்? தன்மானம் சீண்டப்பட்டால் போதும் நாம் அனைவரும், எளிதில் உணர்ச்சிவசப்பட! ஏதோ ஒரு பதிவின் பின்னூட்டத்தில் படித்தேன், ''நமக்குள் தூங்கிக்கிட்டிருக்கும் மிருகம் அங்கே விழித்துக் கொண்டிருக்கிறது'' என்று. எவ்வளவு உண்மை!

இந்த ஒரு நிகழ்வுக்கே, அந்த மாணவர்களின் எதிர்காலத்தை சஸ்பெண்ட் செய்து ஜெயிலில் உள்ளே தள்ளி அவர்கள் வாழ்வைப் பாழாக்க வேண்டும் என்று தீர்ப்புக் கொடுக்கிறோம். ஆனால், அவர்களின் தினசரி வாழ்வில் எவ்வளவு சீண்டல்கள், பிரச்சினைகள் இருந்திருந்தால் இந்தளவுக்கு வந்திருப்பார்கள் என்று ஏன் சிந்திக்க மறுக்கிறோம்!

மருத்துவர் ருத்ரன்: இன்னமும் சித்திரைச்செல்வனைப் பற்றி யாரும் பேசுவதில்லை..... பத்துபேர் மட்டுமே இணைந்து திருப்பித் தாக்கியது துரதிர்ஷ்டமே.

அதிஷா: இப்பிரச்சினை குறித்த சரியான புரிதல் உங்கள் பதிவின் மூலமாக ஒரு சிலருக்காவது மண்டையில் ஏறினால் நல்லது.

பாலாஜி: மனம் வலிக்கிறது

முருகேசன்: அடப்பாவிகளா இதை எழுதுனவங்க, இதை படிச்சுட்டு மட்டும் போறவங்க, இதுக்கு பதில் எழுதுறவங்க எல்லோரும் படிச்சவங்க. (அரசாங்கம் கணக்கு சொல்ற மாதிரி கஷ்டப்பட்டு எழுத, படிக்க தெரிஞ்சவங்க இல்லை) குறைந்தபட்சம் இளங்கலை பட்டம் அல்லது தொழில்நுட்ப பட்டயப் படிப்பும் படித்தவர்கள்.

ஆனால், வந்து போனவர்கள் எல்லோரும் ஜாதி இருக்கின்றது என்றோ, இல்லை நான் ஜாதி பார்க்கிறேன் என்றோ வெக்கமில்லாமல் எழுதுகிறார்கள். மீதிப்பேர் ஜாதி போக வேண்டும் என்றே எழுதுகிறார்கள்.

ஒருவர் கூட தான் எப்படி ஜாதியைப் பார்க்காமல் இருக்கிறார் என்றும், அதை மற்றவர்கள் எப்படிப் பின்தொடரலாம் என்றும் ஒருவர் கூடச் சொல்லவே இல்லையே.



படிப்பகம்

www.padippakam.com

நம் முந்தைய தலைமுறையினர்தான் கிணற்றுத் தவளையாக தங்களது வாழ்கையை ஓட்டி விட்டனர். படித்த நாமும் இப் போதைய நிலையை மட்டும் பேசிக் கொண்டிருந்தால் எப்படி? அதைப் போக்குவதற்கான யோசனைகளைப் பகிர்ந்து கொள்ளலாமே. அதை விடுத்து ஜாதியைப் பற்றிப் பேசி மற்றும் அடுத்த ஜாதியைக் குறை சொல்லி, மேலும் அதைப் படித்தவர்களி டமும் வளர்த்து அடுத்த தலைமுறைக்கும் எடுத்துச் செல்ல வேண்டாமே.

முடிந்தால் ஜாதி ஒழிக்க யோசனையை மட்டும் சொல்லவும். எரிகிற தீயில் நல்ல சுத்தமான எண்ணெயை ஊற்ற வேண்டாம்.

**அகரன்:** பொதுவாகச் செய்திகளில் கேள்விப்படுவதை விட உங்களது பதிவுகள்தான் உண்மை நிலையை எடுத்துக் கூறுகின்றன. என்னைப் பொறுத்தவரை வினவு ஒரு நம்பகமான தமிழ் செய்திப் பத்திரிக்கை. இந்தியா ஒரு பக்கம் சந்திராயனை அனுப்பி அபி விருத்தி அடைந்த நாடு போலக் காட்டிக் கொள்கின்றது. ஆனால் இன்னமும் காட்டுமிராண்டி கால சாதியை அழிக்க முடியவில்லை.

**இந்தியத்தமிழன்:** உண்மையிலேயே சிறப்பாக உள்ளது. இதைப் படிக்கும்போது உங்களைத் தொற்றிக் கொண்ட பதற்றம் என்னையும் தொற்றிக் கொண்டது.

**நொந்தகுமார்:** மதுரையில் ஒருமுறை பத்திரிக்கை அலுவலகத்தில் அடிவாங்கியதற்கும், மந்திரி பதவி போனதற்கும், தனது சுமங்கலி டி.வி.யின் ராஜ்யம் பறிபோனதற்காகவும் கருணாநிதி அரசைப் பழி வாங்குவதாய் நினைத்து, சன் டி.வி. இவ்வளவும் பண்ணுகிறது.

தினந்தோறும் அவமானங்களையும், கிண்டல்களையும், அடி களையும் வாங்கிக் கொண்டிருக்கும் தாழ்த்தப்பட்டவர்கள் எவ்வளவு காயப்பட்டிருப்பார்கள்? சமகால, அவசர, அவசியமான கட்டுரை. தொடர்ந்து வினையாற்றுங்கள்!

**குப்பன் யாஹூ:** பதிவர்: 'நன்றாக எழுதி உள்ளார். அநேகமாக நம்மாளாத்தான் இருக்கக் கூடும்.'

சக பதிவர்: 'ஆமா நான் அப்பவே நினச்சேன். அவர் நம் மாளாத்தான் இருப்பார்னு. சூப்பரா எழுதறாரு பாருங்க.'



படிப்பகம்

www.padippakam.com

இதுதான் எதார்த்தம்.

**கோட்சில்லா:** 'இன்னமும் சித்திரைச்செல்வனைப் பற்றி யாரும் பேசுவதில்லை..... பத்துபேர் மட்டுமே இணைந்து திருப்பித் தாக்கியது துரதிர்ஷ்டமே.'

ருத்ரன், நீங்கள் ஒரு சேடிஸ்ட். வன்முறைக்கு பதில் வன்முறையா தீர்வு?

''மீண்டும் குற்றப் பரம்பரைச் சட்டம் தேவை இவர்களை ஒடுக்க''

பிரச்சினையை விட மோசமானதோர் தீர்வு.

**கீழனார்:** உங்களது இந்தப்பதிவு கட்டாயமாக அச்சிடப்பட்டு, ஊடகங்கள் மற்றும் அனைத்துப்பிரிவு மக்களிடமும் விநியோகிக்கப்பட வேண்டும். குறைந்தபட்சம் சில நடுநிலையாளர்களாவ்து அதன் மூலம் தலித் மக்கள் எதிர்கொள்ளும் துயரங்களை உணர முடியும். உயர்சாதி என அழைக்கப்படுபவர்கள் தாங்கள் தலித்துகளுக்கிழைத்த மனிதத்தன்மையற்ற, அநீதிகளைப் புரிந்து கொள்ளவும் முடியும்.

1995-ல் அரசு கலைக்கல்லூரி ஒன்றில் பி.எஸ்.ஸி படித்துக் கொண்டிருந்தேன். இதே போன்ற சம்பவம் அன்றும் நடந்தது. நான் முருகேசன் என்ற மூன்றாமாண்டு கணிதம் படித்துக் கொண்டிருந்த மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவனால் தாக்கப்பட்டேன். அவ்வன்முறையின்போது மிகப் பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் கூட்டமொன்றால் விடுதியில் எனது உடன்பயின்ற இரு மாணவர்களின் மண்டை உடைக்கப்பட்டது. அவர்களில் ஒருவர் கிட்டத்தட்ட பைத்தியமாகவே மாறி விட்டார்.

காவல் நிலையத்திலிருந்தோ, வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்தோ யாரும் விடுதிக்கு வரவோ, எங்களிடம் விசாரிக்கவோ இல்லை. தாக்கியவர்கள் மீது வழக்கு எதுவும் பதிவு செய்யப்படவுமில்லை. செய்தியிலும் வரவில்லை. அநியாயமாக மறைக்கப்பட்டது.

வன்முறைதான் இந்த சாதி அமைப்பை அழித்தொழிக்கும் தீர்வு எனில், இதுபோன்ற நூறாயிரம் சம்பவங்கள் நிகழ வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

**வினவு:** சேடிஸமா? அப்படியென்றால் புனிதமாக்கப்பட்ட சேடிஸங்களின் நிறுவனமான இந்துயிசம், பிராமனிசம்? கோட்சில்லாக்களின் கடவுள் வழங்கிய கீதோபதேசமும் என்ன வகை நோய்? மையப் பிரச்சினையிலிருந்து திசை திருப்ப என்ன ஒரு தந்திரம்? ஆத்திரமூட்டுவது. பலியானவனின் எதிர்வினைக்காகக் காத்திருப்பது. பிறகு அதையே ஆதாரம் காட்டி அவனைத் தீவிரவாதி என்பது. பொடா சட்டம் ரத்து செய்யப்பட்டு விட்டதாக நினைத்தேன். மனோபாவமே பொடாவாக இருக்கும்போது அதை எப்படி ரத்து செய்ய முடியும்?

**கோட்ஸில்லா:** சாதிய அடிப்படையிலான வன்முறையை நான் நியாயப்படுத்தவில்லை.

''இன்னமும் சித்திரைச் செல்வனைப் பற்றி யாரும் பேசுவதில்லை. பத்துபேர் மட்டுமே இணைந்து திருப்பித் தாக்கியது துரதிர்ஷ்டமே.'' போன்ற வாக்கியங்கள் எரிகின்ற தீயில் எண்ணெயை ஊற்றியது போல என்றுதான் சொல்கின்றேன். தாங்களோ தலித் மாணவர்கள் திருப்பித் தாக்கவும், கொலைவெறித் தாக்குதல்களை நிகழ்த்தவும் தேவையான உரிமைக்காக வாதாடி வருகிறீர்கள். விளைவாக இருதரப்பிலும் வன்முறையே அதிகரிக்கும். அதுதான் சிறந்த தீர்வா?

''வன்முறைதான் இந்த சாதி அமைப்பை அழித்தொழிக்கும் தீர்வு எனில், இதுபோன்ற நூறாயிரம் சம்பவங்கள் நிகழ வேண்டும்.''

கண்ணிற்கு கண் எனத் தீர்ப்பளித்தால் உலகில் பாதிப்பேர் குருடர்களாகத்தான் மிஞ்சுவர். இதை யார் சொன்னது என்றும் உங்களுக்கே தெரியும்.

**அப்துல் குத்தூஸ்:** நன்றி அய்யா. சிந்திக்க வேண்டிய ஆழமான கருத்துக்கள்.

**தேவன்:** சே, நீங்கள்ளாம் மனிதர்கள்தானா? பழசெல்லாம் பேசி செஞ்ச தப்ப மறைக்காதீங்கடா. வினவு சொல்றதுக்கெல்லாம் ஜிங்ஜாங் அடிக்குறதுக்கே ஒரு குரூப் இருக்குது இங்க. இன்னும் எத்தனை நாளைக்குதான் ''தலித் கொடுமை தலித் கொடுமை''னு



படிப்பகம்

www.padippakam.com

ஊர ஏமாத்துவீங்க? வெக்கமா இல்ல, இந்தப் பொழப்பு பொழைக் கிறதுக்கு?

இன்னைக்கு கதையப் பேசுங்கடா. எங்கடா நீங்க இல்ல, பேங்க்ல இல்லயா? கோர்ட்ல இல்லயா? அரசியல்ல இல்லயா? தொழிலாளர் சங்கத்துல இல்லயா? எந்த கவர்ன்மெண்ட் ஆபீஸ்லடா நீங்க இல்ல? எல்லா இடத்துலயும் நீங்கதானடா முக்கியமான போஸ்ட்ல இருக்கீங்க, மனசத் தொட்டு சொல்லுங்க. இதோ இந்தப் பதிவுகள்ல கூட உங்க கைதானடா ஓங்கி இருக்கு.

சும்மா 'தென் மாவட்டம் தென் மாவட்டம்'னு ஊர ஏமாத்தா தீங்கடா. இந்தப் பதிவப் படிச்சவங்களுக்கும் அதுக்கு ஜால்ரா அடிச்ச நாய்ங்களுக்கும் தெரியும், யார் ஜாதி வெறியில இருக்காங்கன்னு.

'வாங்கினது பத்தாது இவனுங்களுக்கு'. இதப் படிச்சா சாதாரணமா இருக்குற எனக்கே கோபம் வருது. மத்தவங்களுக்கு? இன்னும் எத்தன நாளைக்குத்தான் தீண்டாமை தீண்டாமைன்னு ஓசிச் சோறு சாப்பிடுவீங்க? என்னைக்குதான் சுயமாப் படிச்சு, சுயமா உழைச்சு முன்னுக்கு வரப் போறீங்க?

இன்னும் நிறைய கேப்பேன், என்னதான் நான் கேள்வி கேட்டாலும் நீங்க பழசதான் பேச போறீங்க. அரசாங்க சலுகைகளும் உங்களுக்கு சாதகமான சட்டங்களையும் வச்சு இப்படி ரவுடித்தனம் பண்ணலாம்முன்னு நினைக்காதீங்க. குடுத்த சலுகைகள ஒழுங்கா உபயோகம் செஞ்சு இன்னும் எப்படி லைப்ல முன்னேறுவதுன்னு யோசிங்கடா. எப்படி நம்ம சந்ததிகள நல்லபடியா உருவாக்குகிறதுன்னு யோசிங்கடா.

'வாங்கினது பத்தாது இவனுங்களுக்கு.' நான் கூறிய வார்த்தைகள் அனைத்தும் மேலே இருக்கும் வாக்கியத்தை மனதிற்குள் நினைப்பவர்களுக்கு மட்டும்!

சுந்தரவடிவேல்: சரியாக எழுதப்பட்டிருக்கும் பதிவு!

பெண்டுகாலன்: வினவு, நீங்க 2000 வார்த்தையில சொன்ன மேட்டர, தேவன் நாலு பாராவில சொல்லிட்டாரு.



படிப்பகம்

www.padippakam.com

'இன்னைக்கு கதையப் பேசுங்கடா. எங்கடா நீங்க இல்ல, பேங்க்ல இல்லயா? கோர்ட்ல இல்லயா? அரசியல்ல இல்லயா? தொழிலாளர் சங்கத்துல இல்லயா? எந்த கவர்ன்மெண்ட் ஆபீஸ்லடா நீங்க இல்ல? எல்லா இடத்துலயும் நீங்கதானடா முக்கியமான போஸ்ட்ல இருக்கீங்க, மனசத் தொட்டு சொல்லுங்க. இதோ இந்தப் பதிவுகள்ல கூட உங்க கைதானடா ஓங்கி இருக்கு.

இந்த வயிற்றெரிச்சலில் இருப்பது சாதிவெறி.

'இதப் படிச்சா சாதாரணமா இருக்குற எனக்கே கோபம் வருது மத்தவங்களுக்கு?'

இந்த மிரட்டலில் இருப்பது சாதிவெறி.

'இன்னும் எத்தன நாளைக்குத்தான் தீண்டாமை தீண்டாமைன்னு ஓசிச் சோறு சாப்படுவீங்க? என்னைக்குதான் சுயமா படிச்சு, சுயமா உழைச்சு முன்னுக்கு வரப் போறீங்க?'

இந்த ஏளனத்தில் இருப்பது சாதிவெறி.

'அரசாங்க சலுகைகளும் உங்களுக்கு சாதகமான சட்டங்களையும் வச்சு இப்படி ரவுடித்தனம் பண்ணலாமுன்னு நினைக்காதீங்க.'

இந்தப் புலம்பலில் இருப்பது சாதிவெறி.

'குடுத்த சலுகைகள ஒழுங்கா உபயோகம் செஞ்சு இன்னும் எப்படி லைப்ல முன்னேறுவதுன்னு யோசிங்கடா. எப்படி நம்ம சந்ததிகள நல்லபடியா உருவாக்குகிறதுன்னு யோசிங்கடா.'

இந்த அனுசரனையில் இருப்பது தேவர்மகன்!

**பகத்:** மயிலே மயிலே இறகு போடு என்று கேட்டால் இறகை நமக்கு கொடுத்து விட்டு செல்லும் மயில்கள் இருக்கிறதா என்ன? இருக்கிறது என்கிறார்கள் ஒரு சில மறுமொழி நண்பர்கள்.

சாதியை ஒழிக்க வேண்டும் என்று கூறும் நண்பர்கள், இதை வன்முறையில்லாமல், சாதியின் பெயரைச் சொல்லாமல் செய்யச் சொல்கின்றனர். லஞ்சத்தை ஒழிக்க வேண்டும். ஆனால் இதை லஞ்சம் வாங்குவோரைத் தண்டிக்காமல் செய்ய வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

இங்கு வன்முறைக்கு எதிராகக் குரல் கொடுக்கும் நண்பர்கள், இன்றும் நடந்து கொண்டிருக்கும் தலித் அடிமைத்தனத்திற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? வன்முறையை ஆதரிப்போர் யார் என்று வினவு இவ்வளவு தெளிவாகக் கூறியும் இன்னும் புரியாமல் இருக்கும் உயிரினங்களுக்கு என்ன சொல்லிப் புரிய வைப்பது?

''நான் திருடன் இல்லை என்றால், திருடர்களை உதைப்பதற்கு நான் ஏன் முன்வருவதில்லை? என் மாமனோ மச்சானோ சொந்தக் காரனோ அந்தக் குற்றத்தை இழைக்கும்போது அதை எதிர்க்க விடாமல் என்னை மவுனமாக இருக்கச் செய்வது எது?''

இங்கு உள்ள யாராவது வரலாற்றைப் புரட்டிப் பார்த்து சொல் லட்டும். ஒரு அடிமைப்பட்ட சமூகம் அதற்க்கு எதிராகப் போரா டாமல் எவ்வாறு தனது அடிமைத்தனத்தை விடுவித்தது என்று. ''காந்தி, வெள்ளைக்காரனை மேல்சாதியாக வைத்து, உங்களுக்கு எதிராக ஆயுத போராட்டம் நடத்த மாட்டோம். நீங்கள் எங்களை என்ன செய்தாலும், நாங்கள் உண்ணாவிரதம் இருந்து எங்கள் எதிர்ப்பைக் காட்டுவோம்.'' என்ன கொடுமை இது.

ஆங்கிலேயன் சென்று விட்டான். ஆனால் அவனால் சுடப் பட்ட, சித்திரவதை செய்யப்பட்ட பல லட்சம் மக்களும் மாண்டு விட்டனர். ஆனால் அதற்கு காரணமான எல்லா வெள்ளையனும் எதோ பணியில் இருந்து ஓய்வுபெற்று செல்வது போல் நமது நாட்டை விட்டு சென்றான். இதே காந்தி தலித் மக்களை வேற்று மையில் இருந்து விடுவிக்கிறேன் என்று சொல்லி அவர்களுக்கு ''அ ரிசனன்'' என்று பெயர் வைத்தார். என்ன நடந்தது. என்ன மாற்றம் அவர்களின் வாழ்வில் நடந்தது. இன்றும் அதே தனிக்குவளைதான், அதே அடிமைத்தனம்தான்.

ஒரு மாணவனை அடித்ததைப் பற்றி மனிதநேயத்தை முன் னிருத்தி விவாதிக்கும் அன்பர்களே இந்த வன்முறையைத் தோற்று விக்கும் காரணி என்ன என்பதைப் பற்றிச் சொல்லட்டும். இதை ஒழிப்பது என்பதற்காக, தலித் தனக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை மன்னித்து விட்டுவிட வேண்டுமா? அவனுக்கு மட்டும் தான் இந்த மனிதநேய உபதேசமா? இந்த மாணவனுக்காகக் குரல் கொடுக்கும் அன்பர்கள் மேலே வினவு குறிப்பிட்ட இன்றும்



படிப்பகம்

www.padippakam.com

நடந்து கொண்டு இருக்கும் சாதியக் கொடுமைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்கத் தயாரா?

வினவுவை போன்று இந்த அன்பர்கள் அதே தேநீர்க்கடையில் நின்று இருந்தால் அவர்களின் செயல் என்னவாக இருந்து இருக்கும்? நமக்கு ஏன் வம்பு என்று ஒதுங்கி விடுவீர்களா? அந்த ஊரின் ஒற்றுமையைக் குலைக்காமல், சாதிப் பிரச்சினை பெரிதாகாமல் இருக்க ''நல்ல எண்ணத்துடன்'' இந்த தனிக்குவளை முறை என்பது நமது பாரம்பரியம் என்று கூறி அதை அந்த முதியவரின் சந்ததிக்கே கற்றுக் கொடுப்பீர்களா?

(அந்த முதியவர் தனிக்குவளை என்பது அடிமைத்தனம் இல்லை என்று நினைத்து கொண்டு இருக்கும் வரையில் அங்கு சாதி அடிமைத்தனம் இல்லை. எல்லோரும் நிம்மதியாக , சகோதரத்துவத்துடன் வாழ்ந்து கொண்டு இருப்பர். ஆனால் என்று அவர் தனிக்குவளைக்கு எதிராகக் குரல் கொடுக்கிறாரோ அன்று நம்மைப் போன்ற பலரும் அதுவரை அமைதியாய் இருந்த ஊரில் சாதிப் பிரிவினையைத் தூண்டி விடுவதாக சாடுவோம்). அல்லது இதை அரசியல் ரீதியாக மக்களைத் திரட்டி போராடி மற்ற முயல்வீர்களா?

சங்கமித்ரா: மிக மிக அருமையான பதிவு.

நர்மதா: அருமையான பதிவு, பொதுவாக நான் எதற்கும் பதில் எழுதுவதில்லை. ஆனால் உங்கள் எழுத்தைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

''இப்பிரச்சினை குறித்த சரியான புரிதல் உங்கள் பதிவின் மூலமாக ஒரு சிலருக்காவது மண்டையில் ஏறினால் நல்லது''. இதை வழிமொழிகிறேன்.

நடந்தது என்ன என்பது எனக்கும் தாத்தாவுக்கும் மட்டும்தான் தெரியும். புறப்படுவதற்கு முன் அவருடைய கையை ஒரு முறை அழுந்தப் பற்றியதைத் தவிர வேறு எதையும் நான் அவருக்குச் சொல்லவில்லை. சொல்ல முடியவுமில்லை. இதயத்தைப் பாதித்த வரிகள். இதுபோல நிறைய எழுத வாழ்த்துக்கள்!

மனசாட்சி: நல்ல பதிவு.



படிப்பகம்

www.padippakam.com

முரளி: வினவு, குற்றம் செய்த மோடி மன்னிப்பு கேட்க வேண்டும் என்ற பதிவும் இதே பதிவில்தான் வந்தது. அப்போழுது கேள்வி கேட்ட ரவி ஸ்ரீநிவாஸ் போல் இருக்கு உங்களது இந்தப் பதிவு. ''அவங்க, இவங்க, நீங்க'' என்று திசை திருப்பும் செயலிது. தெருநாயக் கூட இவ்வளவு மோசமா அடிச்சு நான் பார்த்ததில்லை. ஆனால் நீங்கள் கண்ட சாதியக் கொடுமை வலியை நான் அனுபவிக் கவில்லை என்பதும் உண்மை.

எனினும் மனிதாபிமான அடிப்படையில் அவர்கள் அத்துமீறி னார்கள் என்று ஏன் எழுத மறுக்கின்றீர்கள்? ஆதிக்க சாதி ஆதிக்க சாதி என்று மூச்சுக்கு முன்னூறு முறை முறையிடும் பொழுது, இந்தக் காட்டுமிராண்டிச் செயலையும் கண்டிக்க வேண்டுமா, வேண்டாமா? சகமனிதக் கோட்பாடுகள் எங்கே? தலித்துகள் ஆட்டோ, சாமான், உருட்டுக் கட்டைகளுடன் பார்ப்பனீயம் பழ கினால் அது சரியா? தலித்துகளை அடிப்பதாகப் படம் பிடித்தி ருந்தால் இன்று இந்த பதிவில் இரத்த மையால் எழுத மாட்டீர்களா என்ன? இதைத் தானேயா கேட்கிறாங்க? உங்களுக்கு ஒரு நியாயம் அடுத்துவனுக்கு ஒரு நியாயமா?

மருத்துவர் ருத்திரன் அவர்களே, செத்த பாம்ப அடிக்கற மாதிரி அடிக்கறாங்க அந்த காட்டுமிராண்டிப் பசங்க. இன்னும் பல பேர் சேர்ந்து அடிக்கலையா என்று கேள்வி கேட்பது உங்களது தடுமாறிய மனநிலையைக் காட்டுகின்றது.

அக்கிரகாரத்தில் கழுதை: முரளிக் கண்ணா, பதிவை ஒழுங்காப் படிச்சயா இல்லையா? இந்த வன்முறை ஒளிபரப்பப்பட்டது. ஒளி பரப்பப்படாத, இதைவிடக் குரூரமான வன்முறைகளுக்கு உன் பதில் என்ன? இன்றைக்கு ஊடகங்களில் பேசப்படும் திண்ணியம், மேலவளவு, பாப்பாபட்டி, கீரிப்பட்டி போன்ற வன்முறைகள் போன்றவற்றின் மேலதிகத் தகவல்களைத் தேடிப் படித்திருக் கிறாயா?

அதன் படத்துணுக்குகள் உன் பார்வைக்கு வந்திருக்கிறதா? ஒருவன் வாயில் மலம் திணிக்கப்படுகிற காட்சியை உனக்குக் காட் டினால், உனக்கு ரத்தம் கொதிக்குமா, கொதிக்காதா? 'நீ எதைப் பார்க்கவேண்டும் என்று ஊடகங்கள் முடிவு செய்கிறதோ அது



படிப்பகம்

www.padippakam.com

மட்டும்தான் உன் பார்வைக்கு கொண்டு வரப்படுவதன் பின் உள்ள சதித்திட்டத்தை புரிந்துகொள்ள முடியாத மூடனா நீ?

இந்த வன்முறைக்கு முன்னால், ஒரு தலித் மாணவனின் காது அறுக்கப்பட்டு, அவன் அரசாங்க ஆஸ்பத்திரியில் இருக்கிறான். அதைப் பற்றிய விவரம் தெரியுமா? அந்தக் காட்சியைப் படமாகப் பார்த்து, பின் இந்த வன்முறையை நீ பார்த்தால், அப்போதும் 'காதை அறுத்தா என்ன, அதுக்காக இப்படிப் போட்டு அடிக்கறதா' என்று மிடில் க்ளாஸ் போலப் பேசுவாயா?

நீ சாதி, இன மதம் பாராதவனாக இருக்கலாம். ஆனால், உன்னைப் போன்றவர்களின் அலட்சியம்தான், என் பார்வைக்குத் தென்படுகிறவற்றில் உள்ள அநியாயங்களை மட்டும் மூடு, நேரம் இருந்தால் கண்டிப்பேன் என்று சொல்கிற தெனாவட்டுத்தனம் தான், எரிகிற தழலில் ஊற்றப்படும் எண்ணெய்.

**டி. அருள் எழிலன்:** யாராவது இதை எழுத மாட்டார்களா? என்றிருந்தேன். நேற்று நானே எழுதினேன். இன்று போடலாம் என்றிருந்தேன். நீங்கள் நேற்றே எழுதி முகத்திலறைந்து விட்டீர்கள். நன்றி தோழர், மிகவும் நேர்த்தியாகவும் உண்மையாகவும் எழுதியிருக்கிறீர்கள். ஊடகங்கள், அரசதிகாரம், ஆதிக்கசாதி அடியாட்கள் இவர்கள் கொஞ்சம் படித்தாலும் இது வெற்றிதான். நன்றி.

**யாரையும் வெறுக்காதே:** சாதி ஒடுக்குமுறை என்பது யதார்த்தம். அது அவ்வளவு சீக்கிரம் மறைந்து போகாது. தேவர்களும் தலித்துகளும் இன்னும் பல நூற்றாண்டுகள் இந்த நிலத்தில் வாழ வேண்டும். அதனால் பழையதை நினைத்து ஒருவரை ஒருவர் வெறுப்பதில் அர்த்தமில்லை. நாம் ஆங்கிலேயரை வென்றாலும் அவர்களை வெறுத்ததில்லை. வெறுப்பதற்கும் காந்தி நம்மை ஒரு போதும் அனுமதித்ததில்லை. அதன் விளைவை நாம் எல்லோரும் பார்க்கிறோம். இந்தியரும், ஆங்கிலேயரும் இன்று பல வியாபாரங்களைக் கூட்டாகச் செய்கின்றனர்.

அதுபோலவே தலித்துகளும் தேவர்களை விரும்ப வேண்டும். அதைக்கண்டு ஒடுக்குபவர்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும். அப்படியே கடுமையாகவும் உழைத்து அரசியல் மற்றும்



படிப்பகம்

www.padippakam.com

பொருளாதாரத் தளங்களில் மேல்நிலையை அடைந்து அவர்களுடைய பங்கினைக் கையகப்படுத்த வேண்டும்.

வன்முறை ஒருபோதும் பலனளிக்காது. மாறாக துன்பங்களின் சுழற்சியையே உருவாக்கும். அறிவுஜீவிகளுக்கு இதுதான் தேவை. துன்பம் இருந்தால்தான் அவர்கள் நம் சமூக அமைப்பைப் பழித்து புரட்சிக்கு அறைகூவல் விட முடியும். உங்களை போன்ற மார்க்சிஸ்டுகளும் பெரியாரிஸ்டுகளும் இந்த எளிமையான உண்மையைப் புரிந்து கொள்ள முடியாதது ஆச்சரியமல்ல.

தலித் மற்றும் தலித் ஆதரவாளர்களுக்கு நான் சொல்வதெல்லாம் ஒன்றுதான். இந்தக் கட்டுரையின் ஆசிரியரின் பேச்சைக் கேட்காதீர்கள். உங்கள் வேலைகளில் கவனம் செலுத்துங்கள். சில ஆண்டுகளில் முன்னேற்றம் தெரியும். அம்பேத்கரிலிருந்து மாயாவதி வரை தலித்துகளில் பல முன்னுதாரணமானவர்கள் இருக்கின்றனர். அவர்களைப் பின்பற்றுங்கள்!

**மருந்துவர் ருத்ரன்:** ப.முரளி எனது எண்ணங்களை நான் எனது வலைப்பூவில் வெளிப்படுத்தியிருக்கிறேன்.

திட்டமிட்ட அயோக்கியத்தனத்தைவிட உணர்ச்சிவயப்பட்ட வன்முறை எவ்வளவோ பரவாயில்லை எனக் கருதுகிறேன். யாரும் யாரையும் அடித்துத் துவைப்பதை நான் ஆதரிக்கவில்லை. ஆனால் எதிர்வினை என்று ஒன்று இருந்ததற்காக நான் மகிழ்கிறேன். ஏனென்றால் இனியும் பழைய அடிமைத்தனத்தைச் சுமக்க முடியாது என்பதை இது தெளிவாக உணர்த்தியது. இனி ஆத்திரத்தைத் தூண்டுபவர்கள் எச்சரிக்கையாக இருப்பர்.

**கலகம்:** ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு மணித்துளியிலும் சாதி பார்க்காமல் யார்தான் இங்கு இல்லை. கலகத்தில் லூசு கோட்சில்லாவும், குமரன்மார்களும் தன் அறிவாளித் தனத்தை காட்டிக் கொண்டு தானிருக்கின்றார்கள்.

அவர்களுக்கு எமது வலைப்பூவில் கீழ்க்கண்டவாறு பதில் சொன்னோம்.

''குமரன் அவர்களே, சென்னை சட்டக்கல்லூரி மாணவர் பிரச்சனையில் உண்மையை கண்டறிந்து அங்கே தேவர் சாதிவெறியர்



படிப்பகம்

www.padippakam.com

களின் கொட்டடத்தினால் தான் பிரச்சனை வந்தது என்று சொன் னாலே தேவர் சாதிவெறியர்களுக்கு கோபம் வருகின்றது. சாதிவெறி, ஆதிக்க சாதியினரிடமோ ஒடுக்கப்பட்டவரிடமோ எங்கே இருந்தாலும் தவறு என்கிறோம். பொதுவாய் சாதி வெறி மக் களைப் பிரிக்கும். ஒடுக்கப்பட்டவரிடமிருக்கும் சாதி வெறியும் பார்ப்பனியத்துக்கு சேவை செய்யும்.

பிரச்சினையை இவ்வாறு ஜனநாயக முறையில் முன் வைத் தாலும் குமரன்மார்களுக்கு (தேவர்மார்களுக்கு) நெஞ்சு வலிக்கிறது. எனில் அது தான் உண்மையான சாதியின் வெளிப்பாடு. அவரைப் போன்றோர் மனதில் மூடிவைத்து விட்டு வெளியே ஜனநாயகவாதி வேசம் போடுபவர்களின் உண்மை முகம்.

மேலவளவு படுகொலையின் போது வ்ருத்தமும் கோபமும் கொண்ட சமாதான தேவனாம் அவர். உங்களால் வருத்தமும் கோபமும் தவிர என்ன செய்ய முடிந்தது? தாழ்த்தப்பட்ட நண்பர்க ளுடன் ஒரே தட்டில் சோறு சாப்பிட்டது, ஒரே அறையில் தங்கியது எல்லாம் வேண்டாம். சாதி எதிர்ப்பு என்ற கண்ணோட்டத்தில் ஒரு முறையாவது நின்றிருக்கின்றீர்களா?

**இராவணன்:** இன்னும் எத்தன நாளைக்குத்தான தீண்டாமை தீண்டா மைன்னு ஓசி சோறு சாப்பிடுவீங்க? என்னைக்குதான் சுயமா படிச்சு, சுயமா உழைச்சு முன்னுக்கு வரப்போறீங்க?

சுயமா எந்த பார்ப்பான் உழைச்சான்? ஊர்ல உள்ள கோவில் நிலத்தை எல்லாம் வளைச்சு வளைச்சு பார்ப்பானுங்களுக்கு கொடுத் தார்கள் தமிழ் மன்னர்கள். அவன் கொடுத்த ஓசி நிலத்துல உக்காந்து திங்கிற வெண்ணெய்..,முதுகு ஒடிய ஆண்டை நிலத்துல கூலிக்கி மாறடிக்கிற தலித்தை பாத்து ஓசிச் சோறுங்குது! காஞ்சிபுரத்துல மாட்டோட மூத்திரத்த கோமியம்ணு அள்ளி அள்ளி குடிக்கி றாம்பாரு. அந்த பொதிமாடுகிட்ட போய்க் கேளு உண்மையான ஓசிச் சோறு அதுதான்.

**செந்தழல் ரவி:** அற்புதமான பார்வை வினவு. வரிகளைக் கோர்த்த விதமும், எடுத்துக் கொண்ட கருத்தை அட்சரம் பிசகாமல் நெத்திய டியாய் சொன்ன முறையும். இதுதான் தேவை.



படிப்பகம்

www.padippakam.com

**உண்மை விரும்பி:** மக்கள் மறந்தாலும் நீங்கள் மறக்க விரும்ப வில்லை. உங்களின் பதிவு ஒருதலைப்பட்சமானது.

நடந்த சம்பவம் தவறானது. இரு தரப்பலும். ஒரு கை ஓங்கி உள்ளது. மாணவர் சமுதாயம் இப்படி நடந்து கொள்வது மிகவும் தவறு. அடித்தவன் / அடிப்பட்டவன் எவன் எந்த ஜாதியாக இருந் தாலும்.

தலித்தாக இருந்தாலும், தேவராக இருந்தாலும் வறுமையில் வாழ்வோர் தான் இன்றைய சூழ்நிலையில் அடித்து கொள்வது. அதை தூண்டுவது அந்த அந்த ஜாதியில் உள்ள வசதியானவர்கள் தான்.

மாணவர்களே உங்களின் வறுமையை வெல்ல முயலுங்கள். பல்லுக்கு பல் கண்ணுக்கு கண் என்று இறங்குவது தீர்வல்ல. டாக்டர் அம்பேத்கர் என்றும் தன்னை தலித் என்று சொல்லி முன்னே றியதாக தகவல் இல்லை. அன்றைய சூழ்நிலையிலும் அவரால் சாதிக்க முடிந்தது என்றால் அவரது திறமைதான்.

அவர் பெயர் சொல்லி ஓட்டு வங்கி நடத்தும் அரசியல் வாதிகளே ஏன் இன்று ஒரு அம்பேத்கரை உருவாக்க இயல வில்லை?

இந்த குறிப்பிட்ட சம்பவத்தில் அரசையும் போலிசையும் தான் குறை சொல்ல வேண்டும். அந்த இடத்தில் பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவர் ஆம்ஸ்ட்ராங் எதற்கு வந்தார்? அவர் ''நான் வரவில்லை, என்னை சமாதானத்திற்கு ஒரு போலீஸ் அதிகாரி அழைத்தார், என் நண்பர் எனது காரை எடுத்து சென்றார்'' என்று சொல்லி உள்ளார். அவரை அழைத்த அந்த அதிகாரி யார்? அந்த காரில் யார் இருந்தது?

இந்த செயல்களைத்தான் நாம் கண்டிக்க வேண்டும். அதை விடுத்து அடித்தவனுக்கு வக்காலத்து செய்வதும், அடிபட்டவனை பார்த்து 'ஐயோ பாவம்' என்பதும் முட்டாள்தனம்.

அடித்தவன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தால் - இன்று அடக்கி வாசிக்கும் திருமாவளவன்களும் / கிருஷ்ணசாமி களும் / செல்வப் பெருந்தகைகளும் தலையில் கொடியுடன் மருத்து வமனையில் கோஷம் எழுப்பி இருப்பார்கள். இது தானே உண்மை.



படிப்பகம்

www.padippakam.com

ரமேஷ்: *அற்புதமான கட்டுரை!*

கிராமத்தான்: *என்னதான் இருந்தாலும் எனச் சொல்லும் ஆதிக்க சாதி வெறியர்களை கிழித்து நார் நாராகத் தொங்கவிட்டதற்கு நன்றி.*

பென்: *இவர்கள் மாணவர்களாக இருந்தால் என்ன? பள்ளிக்கு போகும் முன்னரே சாதி மத அடையாளம் வந்து விடுகிறதே? இது புரியாமல் சில கிணற்றுத் தவளைகள் சொன்னதையே திருப்பி திருப்பி சொல்கின்றனர்.*

*கல்லூரி படிப்பு முடிந்த பின்பு இவர்கள் அடித்துக்கொண்டால் பரவாயில்லையா? எல்லோரும் சாதியிலேயே வளருகின்றனர். கோயில் திருவிழா கல்யாணம் போன்ற தருணங்களில் அவர்களின் சாதி உணர்வு வெளியே தலைகாட்டுகிறது*

*போலீஸ் தலையிட்டு லத்தியால் அடித்திருந்தாலும் வன்முறைதான் என்பது யாருக்கும் புரிவதில்லை. வன்முறையென்றாலே உடல் காயங்கள் மட்டுமல்ல என்பதை வினவு அருமையாக விளக்கியிருக்கிறது. வன்முறையை ஒழிக்க இந்துமதத்தில் உள்ள சாதியை ஒழிக்க வேண்டும்.*

*தலித்துகள் அடையாளம் பெறுவதை பொறுக்க முடியாத முற்பட்ட சாதியினரின் செரிக்கமுடியாமையே இது போன்ற வன்முறைகளுக்கு காரணம். ஊடகம் மற்றும் பல வழிகளில் இதை சிதைக்க அவர்கள் முற்படுவர். ஒடுக்குமுறையின் நீண்ட வரலாற்றை மாற்றக்கூடிய தன்மை இந்த நிகழ்ச்சிக்கு இருக்கலாம். இவ்வேளையில் சிந்தனையை தூண்டும் இதுபோன்ற பதிவை வெளியிட்ட வினவுக்கு நன்றி. இதில் வந்த பல பின்னூட்டங்கள் குறிப்பாக மருத்துவர் ருத்ரன், அக்கிரகாரத்தில் கழுதை போன்றவையும் சிறப்பாக இருந்தன.*

*பின்குறிப்பு: பாரதி கண்ணன் மற்றும் ஆறுமுகம் மீது வழக்கு ஏதும் தொடரப்பட்டுள்ளதா?*

ராஜன் (பிறப்பால் பார்ப்பனர்): *பொதுவாக சட்டக் கல்லூரி மாணவர்கள் ஏதாவது தேவைக்காக போராடுவார்கள். ஆனால் இந்த முறை ஏதோ பிரச்சினையாக இருக்கிறதே என தொலைகாட்சியில் பார்த்தபோது நினைத்தேன், வினவு உண்மையை ஆழமாக வெளிக்*



படிப்பகம்

www.padippakam.com

கொண்டு வந்துள்ளது. நீங்கள் குறிப்பட்டபடி சில வன்முறைகளை மட்டுமே ஒளிபரப்பும் இந்த ஊடக கழுதைகள் ஒடுக்கப்பட்ட மக்களின் மீது நிகழ்த்தப்படும் துன்பத்தையும் கொடுமையையும் ஏன் ஒளிபரப்புவதில்லை?

ஒடுக்கப்பட்ட சாதியினரான மாயாவதியும் கருணாநிதியும் ஆட்சிப்பொறுப்பில் இருக்கும் இந்த நாட்டில்தான் ஒடுக்கப்பட்ட மக்கள் மீதான வன்முறை நிகழ்த்தப்படுகிறது. இதற்கெல்லாம் ஒரே தீர்வு ஆயுதப் புரட்சி மூலம் நடக்கும் பாட்டாளி வர்க்க சர்வதிகாரம்தான்

அருள் எழிலன்: ''1. அடிபட்ட மாணவர்கள் அப்பாவிகளா? 2. சம்பவ இடத்திற்கு மீடியாக்கள் எப்படி வந்தன? 3. 'பத்து பேர் சேர்ந்து காட்டுமிராண்டித்தனமாக ஒருவனைத் தாக்கும்' அளவுக்கு அவன் செய்த குற்றமென்ன?

1. அடிபட்ட மாணவர்களில் பிரதானமானவன் பாரதி கண்ணன் என்னும் மாணவன் கல்லூரியில் தொடர்ச்சியாக வன்முறைச் செயல்களை நிகழ்த்தியும் வன்முறைச் செயல்களைத் தூண்டியும் வந்திருக்கிறான். இவன் மீது பாரீஸ் காவல் நிலையத்தில் ஆறு எப்.ஐ.ஆர்கள் பதியப்பட்டுள்ளன. மூன்று வாரங்களுக்கு முன்பு 'சென்னை பூக்கடை காவல்நிலையம் அருகே அரிவாளோடு திரிந்த மாணவன் கைது' என்னும் பெட்டிச்செய்திகள் நாளிதழ்களில் வெளியாயின. அந்த இளைஞன் பாரதிகண்ணன்தான். தேவர் ஜெயந்திக்குப் போஸ்டர் அடித்தது தொடர்பாக எழுந்த பிரச்சினையில் பாலநாதன், ஜெகதீஸ் என்னும் இரண்டு தலித் மாணவர்களைக் கொடூரமாகத் தாக்கியது, தலித் பெண்களைத் தொடர்ச்சியாகச் சீண்டுவது, தலித் மாணவர்கள் மீது வன்முறையை ஏவி விடுவது ஆகிய செயல்களைத் தொடர்ச்சியாகப் பாரதிகண்ணன் கும்பல் நிகழ்த்தியுள்ளது.

2. சட்டக்கல்லூரியில் மோதல் நிகழப்போகிறது என்பது தேவரின மாணவர்களுக்கு முன்பே தெரியும். தேவரினத்தைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் மூலமாக மீடியாவில் சில பத்திரிகை நிருபர்களுக்குச் செய்தி அனுப்பியே அவர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர். ஆனால் இதற்கு முன் தேவரின மாணவர்கள் தலித் மாணவர்கள் மீது நிகழ்த்திய எந்த வன்முறையும் மீடியாக்களில் பதியப்படவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

மிகவும் தாமதமாக உண்மைகள் வெளிவந்து கொண்டிருக்கிறது. தாக்கியவர்களை போலீஸ் எப்படி கைது செய்கிறதோ அது போல தாக்குதலுக்கு காரணமானவர்களையும் போலீஸ் கைது செய்ய வேண்டும். பிரதானமாக தலித் மாணவர்களை தேர்வெழுத விடாமல் தடுத்தவர்கள். அரசு வழங்கும் சலுகைகளை இழிவாக பேசியவர்கள் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் பாரபட்சமற்ற முறையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பார்ப்பன பொதுப் புத்திக்கு பலியாகியுள்ள பார்ப்பனரல்லாத ஆதிக்க சாதிகள் தங்களின் உண்மையான எதிரிகளை இனம் காண வேண்டும்.

**போராட்டம்:** அழுத்தமான, ஆழமான வரிகள். நடைமுறையும், அரசியலும் இணையும் பொழுதில் மட்டுமே எழும்புவதான தெளிவான பார்வை. நீரோடை போன்ற நடை.

இந்து மதத்திற்காக போராட யாருமே இல்லாததால் போராடிக் கொண்டிருந்த, போராடிக் கொண்டிருக்கும் அரவிந்தன் நீலகண்டன், ஜடாயு, இவர்களுக்கெல்லாம் தலைமகன், தலைக்கனம் பிடித்த மகன் - ஜெயமோகன் போன்ற தூய இந்துத் தொண்டுள்ளங்கள் தங்கள் திருவாயைத் திறந்து இங்கே விவாதிக்கலாமே!

**ஆர். செல்வக்குமார்:** உங்கள் பதிவில் உண்மை இருக்கிறது. ''இரு மாணவர் கோஷ்டிகளுக்கான சண்டையாக'' ஒரு சினிமா போல பார்த்துக்கொண்டிருக்கும் தமிழ் (இரசிகர்களுக்கு) பார்வையாளர்களுக்கு இந்த உண்மை கசக்கும். இப்போது ஏன் இதைச் சொல்கிறாய் என்று உங்களை பலர் கேட்கக் கூடும். இப்போதும் சொல்லக் கூடாதென்றால் வேறெப்போது என்று நான் திருப்பிக் கேட்கிறேன். நான் டிவியில் ஒளிபரப்பப்பட்ட வன்முறையையும் ஆதரிக்கவில்லை. ஒளிபரப்பப்படாத வன்முறையையும் ஆதரிக்கவில்லை. உங்கள் குரல் தொடர்ந்து ஒலிக்கட்டும்.

**யோசிங்க:** 'ஜாதி பார்க்கிறதில்ல. நான் நல்லவரு, வல்லவரு' என்று பேசுறவனுக எல்லாம் ஜாதி மாறி கல்யாணம் பண்ணியிருந்தாலேயொழிய நீயும் ஜாதி வெறியன்தான்! ஏன், சாதிகள் இல்லையடி பாப்பா கண்ணம்மா என்று பாடியவனும் சாதிவெறியன்!

**யாரையும் வெறுக்காதே:** ''இதற்கெல்லாம் ஒரே தீர்வு ஆயுதப் புரட்சி மூலம் நடக்கும் பாட்டாளி வர்க்க சர்வதிகாரம்தான்.''



படிப்பகம்

www.padippakam.com

சர்வரோக நிவாரணியான ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரப் புரட்சி வந்தால் எல்லாம் சரி ஆகிவிடும்'' என்னும் பேத்தல் இன்னமும் வரவில்லையே என்று பார்த்தேன், ஆஹா வந்துவிட்டது.

நாட்டுல எது நடந்தாலும் 1. பாப்பான் தான் காரணம் 2. புரட்சிதான் தீர்வு. ஒரே காரணம் ஒரே தீர்வு. இதை தாண்டி யோசிக்கத் தெரியாது? மாவோ சொன்னதயே மாத்தி மாத்தி மீள்வாந்தி எடுத்தா எப்படி. சொந்தமா யோசிங்கடா.

குழந்தை: முடிவு, சாதி ஒழியாது. எல்லோரோட சர்டிபிகேட்ல இருந்து நீக்கும் வரை .

அமெரிக்காவில் ஜாதி - நம்பமுடிகிறதா? நான் அமெரிக்காவிற்கு வந்த புதிது. சில வருடங்களுக்கு முன்னால். நான் ஒரு சாப்ட்வேர் கம்பெனிக்காக வந்தேன். வந்த புதிதில் அமெரிக்காவும் தெரியாது ஒரு புண்ணாக்கும் தெரியாது. இந்த சிறிய உண்மை நாடகத்தில் நானும் என்னோடு ப்ராஜெக்ட் வொர்க் செய்தவனும்.

நான் - பாதிக்கப்பட்டவன். அவன் - சாதி வெறியன். வீட்டில் நான் அவன் எதிரில் நிற்கிறேன்.

சாதி வெறியன்: சார். (போனில் கம்பெனி தலயுடன் உரையாடல்).

தல: ....

சாதி வெறியன்: சார் இவன ஏன் அனுப்பினீங்க? நம்மாளு (இதனுடைய மீனிங் புரியல . அவன் என் சாதியை கேட்கும் வரை) இருக்கான் இல்ல (மெல்ல இழுத்து பேசினான்) அவன விட்டுட்டு.

நான் அவமானப்பட்டு பக்கத்து ரூமிற்கு போய்விட்டேன் .

மறுநாள் சாதி வெறியன்: நீ எஸ்.சி.யா? (எஸ்.சி.யா இருந்தால் என்னடா புண்ணாக்கு)

நான்: எனக்கு என்ன சொல்லுவதென்று தெரியவில்லை ஒரு நிமிடம்.



படிப்பகம்

www.padippakam.com

நான் என் சாதியை தெரிவித்தேன் (வடமாவட்ட ஆதிக்க சாதி என்று). ஒரு கணம் என்னை பார்த்தான். உன்ன பார்த்தால் மரம் வெட்டி மாதிரி தெரியல.

(புண்ணாக்கு சாதி தலைல இருக்கா?).

பிறகு விசாரித்து பார்த்ததில் சாதி வெறியன். தல மற்றும் பலர் அந்த தென் மாவட்ட நாடார் ஊரு என்று.

அந்த சாதிவெறியன். அமெரிக்காவில் எம்.எஸ். படித்தவன் (காசு கொடுத்துதான். இவனுக்கு என்ன அறிவா இருக்கு).

நம்ப முடிகிறதா? (எஸ்.சி.யா இருந்தால் என்ன, அல்லது யாராவது இருந்தால் என்னடா புண்ணாக்கு . இதுக்கு மேல என்னால திட்ட முடியவில்லை. படித்துவிட்டதால்).

முடிவு: சாதி ஒழியாது. என்னோட சர்டிபிகேட்ல இருந்து நீக்கும் வரை.

**சதீஷ்:** உங்களது கருத்துகள், ஒவ்வொருவரும் அறிந்துக் கொள்ள வேண்டிய உண்மைகள்.

படித்தவர்களாகிய பெரும்பாலோர் (அவர் தலித்தாக இருந்தாலும்) நடுநிலைமைகொண்டு பேசி, உண்மை நிலையினை, அதன் வீரியத்தினை மழுக்கி விடுகின்றார்.

**ரவீந்திரன் சின்னசாமி:** ''என்னுடைய கேவலமான நிலைமையை எண்ணி கைகால்கள் நடுங்கின. சண்டை போடுவதா? இப்போது சண்டை போட்டு விட்டு ராத்திரி பஸ் ஏறி நான் போய் விடுவேன். தாத்தாவின் கதி என்ன? பிறகு காலனி மக்களின் கதி என்ன.''

இது எல்லாவற்றுக்கும் பொருந்தும். நானும் வேறு சாதி பகுதிக்கு சென்றேன், உடன் வந்த நண்பன் என்னை தரை பார்த்து தலை கவிழ்ந்து நடக்கச்சொன்னான். இந்த சமூக அமைப்பால் எல்லா சாதியினரும் இதுபோன்ற துன்பத்தை அனுபவிக்கின்றனர். வரதட்சினை ஒழிய வேண்டும். சாதி சங்கங்கள் பிடியிலிருந்து கல்வி நிறுவனங்களை காப்பாற்ற வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

அறிவகம்: திரு. வினவு, ஒரு பத்திரிக்கையாளன் என்ற முறையில் இந்த சம்பவம் குறித்து எனது கருத்தை இங்கு சொல்கிறேன்.

கேரளாவில் மதம்பிடித்த யானை ஒன்று பாகனை அரைமணி நேரத்துக்கும் மேலாக தூக்கி பந்தாடி கொன்ற கொடூர காட்சிகளை ஒராண்டுக்கு முன்பு நீங்கள் தொலைகாட்சிகளில் பார்த்திருக்க கூடும். இந்த சம்பவத்தை வியர்க்க வியர்க்க ஓடி ஓடி அதே நேரத்தில் பதட் டத்துடன் பயத்துடன் உயிரைப் பணையம் வைத்து ஒளிப்பதிவு செய்த செய்தியாளர்களை நீங்கள் எந்த விதத்தில் குற்றம் சொல்லக் கூடும்? அதே போல திரும்ப திரும்ப ஒளிபரப்பிய தொலைகாட் சிகளை நீங்கள் எந்த விதத்தில் குற்றம் சொல்ல முடியும்?

ஒருவேளை சட்டக் கல்லூரி சம்பவம் செய்தியாளர்களால் படம் பிடிக்கப்படவில்லை என்றால் நிச்சயமாக இந்த அளவுக்கு பரப லமாகி இருக்காது. ஆனால் மாணவர்கள் மோதல் என்றால் என்ன என்பதை தமிழக மக்கள் கண்கூடாக இப்போது தான் பார்த்து பதற நேர்ந்தது. அடுத்து நீங்கள் சொன்னது போல தலித்துகளுக்கு எதிரான கொடூரங்களை பல பத்திரிக்கையாளர்கள் ஒளிப்பதிவு ஆதாரத்துடன் வெளியுலகுக்கு தெரியப்படுத்தி நீதிக்கு வித்திட்டிருக்கிறார்கள். ஒளி பரப்பப்படாத ஆயிரம் வன்முறைகளை குறிப்பிட்டுள்ளீர்கள். அந்த ஆயிரம் வன்முறைகளும் ஒளிபரப்பயிருந்தால் நிச்சயமாக இன்று சாதியகொடுமைகள் ஒழிக்கப்பட்டிருக்கும். இரக்க குணம் உள்ள மனித சமுதாயத்திடம் நிச்சயம் சாதி தோற்றுப்போயிருக்கும்.

சாதியை மறக்க சாதிசான்றிதழை ஒழியுங்கள். தயவு செய்து சாதிய அடிப்படையிலான சலுகைகள் இட ஒதுக்கீடுகள் இவற்றை ஒழியுங்கள். சாதியை பயன்படுத்துவது தேசதுரோகம் என அறிவி யுங்கள். சாதியை விட கொடுமையானது போதை. ஒரு மனிதனை மற்றொரு மனிதன் ஆத்திரத்தில் தாக்குவது இயல்பு. ஆனால் தொடர்ந்து வெறி கொண்டு தாக்குவது நிச்சயம் மனிதத் தன்மையே அல்ல.

இன்றைய மாணவர்களிடம் அதிகரித்துவரும் பான்பராக், ஹகான்சு புகையிலை, மது, சிகரெட் இதெல்லாம் மனிதனுக்குள் இருக்கும் மிருகத்தை தூண்டி விடுகின்றன. நிச்சயம் சுய நினைவோடு சுய உணர்வோடு இப்படி கொடூர தாக்குதல் எந்த மனி



படிப்பகம்

www.padippakam.com

தனும் செய்ய மாட்டான். இங்கு நான் பார்த்த சட்டக்கல்லூரி தாக்குதலை மட்டும் குறிப்படவில்லை. நீங்கள் குறிப்பிடும் இது போன்ற ஒளிபரப்பப்படாத தாக்குதல்களையும் தான். மனிதநேயம் வளர்க்க முயற்சி எடுங்கள். மனிநேயம் சாவது சாதிய கொடுமைகளை விடக் கொடூரமானது.

மாப்பி: சட்டக் கல்லூரியில் நடந்த வன்முறையின் பின்னணி திட்டமிட்டு மறைக்கப்படுகிறது, தொலைக்காட்சிகளிருந்து மறைந்தாலும், வீடியோவாக கணினி நிறுவன மின்னஞ்சல்களில் ஆங்கில முன்னுரையோடு உலவிள சாதி ஆதிக்கத்திற்கு தார்மீக ஆதரவைப் பெறவும், தலித்துக்களுக்கு எதிராக ஒரு பொதுகருத்தை உருவாக்கும் சூழ்ச்சி நடைபெறுகின்றது. அதை முறியடிக்க மருத்துவர் ருத்ரனின் ஆங்கிலக் கட்டுரையை அனைவருக்கும் சுற்றுக்கு விடுங்கள். பொய்மையின் பேரிரைச்சலை தாண்டி உண்மையின் அதிர்வுகளை உணரச் செய்வோம்.

**தேவன்:** பாரதி கண்ணன் கையில் வைத்திருந்த வெறும் கத்தியை வைத்து அவர்தான் இவ்வளவு பெரிய தாக்குதலுக்கு பொறுப்பு என்பதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? அவர் தேர்வு எழுதி விட்டு வெளியே வரும் போதுதான் இது நடந்தது என்பதும். வெளியே இருக்கும் கும்பல் அவரை தாக்க தயாராக இருப்பது தெரிந்துதான் காவலர்கள் கல்லூரிக்கு வெளியே குவிக்கப்பட்டு முதல்வர் அனுமதிக்காக காத்து இருந்தார்கள் என்பதும். அவர் கையில் வைத்து இருந்த கத்தி அங்கே தாக்குதல் நடத்திய கும்பல் நழுவ விட்டது என்பதும் உண்மை!

அந்த கத்தியை தற்காப்பிற்காகவும், பிறகு சக மாணவன் அடி வாங்குவதை பொறுக்க முடியாமலும் அங்கு இருந்தவர்களை மிரட்டியதும் தொலைக்காட்சியில் கண்ட அனைவருக்கும் புரிந்து இருக்கும். தன்னைப் பற்றிக் கவலைப்படாமல் சக மாணவனைக் காப்பாற்ற பாரதி கண்ணன் நடந்து கொண்டதை பார்க்கும் பொழுது அவரை ஒரு மாவீரனாக நினைக்கத் தோன்றுகிறது. இந்த செய்திகளுக்கான சாட்சிகளும் ஆதாரங்களும் என்னிடம் இல்லை.ஆனால் இவை அனைத்தும் நான் செய்தியில் கண்டவையும், கேட்டவையும்.( நீங்கள் கூறியதற்கும் எந்த ஆதாரமும் இல்லையென்பதை நினைவு கூர்கின்றேன் ).



படிப்பகம்

www.padippakam.com

மேலே கூறியவற்றை உங்களால் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ள முடியாது என்பது எனக்கு தெரியும்.இதை விடுங்கள். அரசாங்கம் தலித் இன மக்களுக்கு எவ்வளவு சலுகைகள் கொடுத்தும் அவர்கள் சரியான வழியில் உபயோகம் செய்வதில்லை. இதை வைத்து சிலர் பெரிய அரசியல் நடத்துகிறார்கள், அதை சிலர் புரட்சிகர அரசியல் என்று பீற்றிக் கொள்கிறார்கள். வேடிக்கையாக இருக்கின்றது.

பி.சி.ஆர் சட்டம் என்ற பெயரில் தினம் தினம் எத்தனை பொய் வழக்குகளை காவல்துறை பதிவு செய்கிறார்கள் என்பது அருகிலி ருந்து கண்கூடாக பார்க்கிறேன், எனக்கு தெரியும். பொய் வழக்கு என்று தெரிந்து அந்த வழக்கை போட மறுத்த காவலர்கள் மேல் இந்த பி.சி.ஆர் சட்டம் பாய்கின்றது. அதைப் பற்றியெல்லாம் ஏன் நீங்கள் எழுத மறுக்கீறீர்கள்? சட்டக் கல்லூரி கலவரத்தை தடுக்க காவல் துறைக்கு துணிவில்லாமல் போனதுக்கு இந்த பி.சி.ஆர் சட் டமும் ஒரு காரணம்.

இதுதான் நடுநிலையா? இதுதான் உங்கள் புரட்சிகர அரசியலா? பாரதி கண்ணனுக்கு நடந்த கதை தலித் இன மாணவனுக்கு நடந்து இருந்தால் இந்நேரம் தமிழ்நாடு பற்றி எரிந்திருக்கும். இப்போது யார் ஒடுக்கப்பட்டவர்கள் என்பது கேள்விக்குறியதாக இருக்கின்றது! (மனதிற்குள் நீங்கள் ஆணவமாக சிரிப்பது புரிகின்றது). காலம் மாறி விட்டது, இன்னும் எத்தனை காலம்தான் இப்படி பொய் பிரச்சா ரங்கள் செய்து அதில் குளிர்காயப் போகின்றீர்கள்?

போராடுங்கள்! ஆனால் கண்மூடித்தனமாக போராடாதீர்கள்! அதை தீவிரவாதம் என்பார்கள். மனித நேயத்தை காக்க முடியாவிட் டாலும், உங்கள் தலைமுறையை தீவிரவாதிகளாக உருவாக்கா தீர்கள். தலித் இனத்தவருக்கான உங்கள் பதிவை சட்ட கல்லூரி பதிவோடு சேர்க்காமல் இருந்திருந்தால் உங்களை இன்னும் பெரு மையாக கருதியிருப்பேன்.

**ஆர்.வி:** அமெரிக்காவில் வாழும் நான் ஐயர் சாதியில் பிறந்தவன் என்பதை பதிவு செய்கிறேன். கருணையற்ற முறையில் அடிக்கப் படும் ஒரு மனிதனைப் பற்றி எப்படித்தான் வெளிப்படுத்த வேண் டுமென எதிர்பார்க்கிறீர்கள்? இதை மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டுமென எதிர்பார்க்கீறீர்களா? மனித குலத்தைச்



படிப்பகம்

www.padippakam.com

சேர்ந்த நாமெல்லாம் இந்த முட்டாள்தனத்தை நிறுத்த வேண்டுமென கத்துவதுதான் எதிர்பார்க்கப்பட வேண்டிய விசயம். கூடவே அடிக்கடி மேற்கோள்காட்டப்படும் திண்ணியம் சம்பவம் உண்மையில் தலித்தல்லாத மனிதர்களுக்கு ஆவலைத் தூண்டுவதாகவே பயன்படுகிறது.

நடந்ததை எதிர்ப்பின்றி ஏற்றுக் கொள்ளும் நம்மைப் போன்ற சாதாரணமான மனிதர்கள் அன்றாட பிரச்சினைகளை கவனிப்பதில்தான் பிணைக்கப்பட்டிருக்கிறோம். சமூகத்தை தூக்கிவிடுவதற்கு நாம் ஒன்றும் காந்தியல்ல. தலித்தல்லாத சாதாரண மனிதனைவிட உயர்வாக நீங்கள் என்ன விதத்தில் சிந்திக்கிறீர்கள்? நாமெல்லாம் உடனே திண்ணியம் சென்று எதிர்ப்பை காண்பித்து தடுத்து நிறுத்த வேண்டுமென்பது போல உங்கள் மற்றும் மற்றவர்களின் பதிவுகள் விரும்புகின்றன. ஒரு சாதாரண மனிதன் அவன் தலித்தாக இருந்தாலும் சரி தலித்தல்லாதவனாக இருந்தாலும் சரி தேநீர்க்கடையில் நீங்கள் நடந்து கொண்டதைப் போலத்தான் இருக்க முடியும்; முரண்பாடு இருக்கும் இடத்தைவிட்டு வெளியேறுவதுதான் நடக்கும்.

பிறகென்ன நீங்களும் கூட திண்ணியத்திற்கு போயிருக்க மாட்டீர்கள், சென்றீர்களா என்ன? தேவர் சாதி மாணவன் மீது நடந்த தாக்குதல் நியாயப் படுத்தப் படலாம், அந்த மாணவன் தலித் மாணவர்களை அவமதிக்க முயற்சித்தாலும் இல்லாவிட்டாலும். ஆனால் அந்த நியாயம் அந்த மாணவன் என்ன செய்தான் என்பதை வைத்தே செய்யப்படவேண்டும். எடுத்துக்காட்டாக தற்காப்பிற்காக அவனை அடித்திருந்தால் சரி. ஆனால் அந்த மாணவன் கருணையற்ற முறையில் அடிக்கப்பட்டதற்கு காரணம் கிராமங்களில் தலித் மாணவன் அனுபவித்த இரட்டை டம்ளர் முறைதான் என்றால் அது சட்டப்பூர்வமாகவும் சரியென்று வாதிட முடியாது, ஒழுக்கப்பூர்வமாகவும் அது குற்றம்தான்.

**நான் கடவுள்:** தேவர் மகன் படத்திற்கு இளையராஜாவை இசை அமைக்க எந்த சமத்துவம் அனுமதித்தது என்று புரியவில்லை. ஒரு தலித் இசை அமைத்த பாடல்கள் இவர்களுக்கு தீட்டாக தெரியவில்லையா? போய் புள்ள குட்டிகள படிக்க சொல்லுங்க. படிக்கிற எடத்துல ஜாதி வெறிய தூண்ட வேண்டாம் என்று சொல்லுங்கள்.



படிப்பகம்

www.padippakam.com

**ராஜீவ்:** பிறகு விசாரித்து பார்த்ததில் சாதி வெறியன். தல மற்றும் பலர் அந்த தென் மாவட்ட நாடார் ஊரு என்று. இதில் துன்பம் என்ன வென்றால் நாடார் சமூகம் (முன்பு சாணார்) ஒருகாலத்தில் கடுமையாக ஒடுக்கப்பட்ட சமூகமே. கன்னியாகுமரி மாவட்டத்தில் பெண்கள் மாராப்பு கூட போட முடியாத நிலை இருந்தது. ஒரு கொடூர சம்பவத்தில் மாராப்பு போட்டு மார்பை மறைத்ததற்காக ஒரு பெண்ணின் மார்பகமே வெட்டி எறியப்பட்டது.

விருது நகரில் அவர்களின் பொருளாதார மேம்பாட்டை எதிர்த்து கள்ளர் சமூகத்தால் கடுமையான வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. (இந்த கள்ளர் சமூகமோ ஒரு காலத்தில் மறவர்களால் கடுமையாக ஒடுக்கப்பட்டதே) நாடார்கள் பதில் வன்முறையில் இறங்கிய பின்ன்றே கள்ளர்கள் பின்வாங்கினர்.

கசப்பான உண்மை என்னவெனில் இவர்களெல்லாரும் இன்று இவர்களை ஒடுக்கியவர்களின் கைக்கூலிகளாக மாறி தனக்கு கீழுள்ள சாதியை ஒடுக்குவதுதான். இதிலிருந்து நான் புரிந்து கொள்வது என்னவென்றால் ஒடுக்கப்பட்டவர்களின் எதிர் வன்முறையே அவர்களின் குரல்களே கேட்கச்செய்யும் வழிமுறையாகும். இல்லையெனில் யாரும் அதற்கு செவிசாய்ப்பதில்லை. பார்ப்பனியம் எளியவரை ஒடுக்கும் கோழைகளை உருவாக்குமே தவிர வீரர்களையல்ல. இந்த கோழைகளை எதிர்த்து ஒடுக்கப்பட்டவர்கள் கிளர்ந்தெழும்போதுதான் வாலை சுருட்டிக்கொள்வர். அருமையான கட்டுரைக்கு வாழ்த்துக்கள் வினவு.

**ஹரி ஹர கிருஷ்ணன்:** வினவு. நான் ஒரு பிராமணன். தாங்கள் சொன்ன சில விஷயங்கள் என்னை கண் கலங்க செய்தன. தாத்தா ஒருவருடன் தாங்கள் டீ கடையில் டீ குடித்தது பற்றிய அந்த செய்தி மிகவும் வருந்தத்தக்கது.

இன்னும் நம் நாட்டில் இந்த மாதிரி கொடுமைகள் இருப்பதை நினைத்தால் வேதனையாக இருக்கிறது. இதை தடுக்க நாம் எதாவது செய்தாக வேண்டும். குறைந்தது அடுத்த தலைமுறையாவது இந்த கொடுமைகளை எதிர்க்க / சமமாக நடத்த ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

கிராமங்களில் தலித்துகளுக்கு நடக்கும் இந்த கொடுமையை அவர்களுக்காகவே கட்சி நடத்துபவர்கள் இந்த மாதிரி நடத்தும் டீ கடைகளின் விபரத்தை நேரடியாக முதல்வருக்கு எடுத்து சொல்லி தடைகளை எடுக்க குரல் கொடுக்கலாமே! குறைந்தது கடையின் உரிமையை ரத்து செய்யச் சொல்லலாமே!

தாங்கள் கூறியதில் ஒன்று மட்டும் என்னால் ஏற்று கொள்ள முடியவில்லை. அதாவது சட்ட கல்லூரியில் நடந்த வன்முறையில் யார் யாரை தாக்கி இருந்தாலும் அது வன்முறையே. பாரதி கண்ணன் கையில் கத்தி இருந்தது உண்மை. ஆனால் தாங்கள் சொன்னதை போல் தேவரினத்தவர்தான் தாக்குதல் நடத்த திட்டம் தீட்டி இருந்தர்களானால் இப்படி இருவர் மட்டும் வந்து இவர்களிடம் அடி படும் அளவுக்கு அவர்கள் முட்டாள்கள் அல்ல. இந்த சட்ட கல்லூரி சம்பவத்தைப் பொறுத்தவரை தேவரினத்தவர் மீது வன்முறை கட்ட விழ்த்து விடப்பட்டிருக்கிறது இதை தாங்கள் ஏற்றுக்கொள்ள தான் வேண்டும்.

ஒளிபரப்பப்படாத ஆயிரம் வன்முறைகளை பற்றி சொல்லியிருந்தீர்கள். அதை வெளி உலகுக்கு வெட்டவெளிச்சமாக்க வேண்டிய கடமை பாதிக்கப்பட்டவர்களுக்கு இருக்கிறது. நாம் அதை ஏன் செய்வதில்லை? அதை ஓட்டு அரசியலுக்குத்தான் சிலர் பயன்படுத்துகிறார்களே தவிர கொடுமையை எதிர்த்து எந்த செயலும் அவர்கள் செய்வதில்லை.

**சரவணன்:** அடப்படுபாவிகளா, நீங்களெல்லாம் மனிதர்கள்தானா? அது சரி. மிருகத்தனமாக அடித்த காட்டுமிராண்டிகளுக்கு சப்போர்ட் பண்ணி பேசுபவர்கள் எப்படி மனிதர்களாக இருக்க முடியும். அம்பேத்கர் தாழ்த்தப்பட்டவர் கிடையாது. அவர் உயர்ந்தவர். அவர் பெயரை சொல்லி இப்படி அடிதடி பண்ணிக் கொண்டு திரிபவனும் அதற்கு கண்ணை மூடிக்கொண்டு நியாயம் கற்பிப்பவனும் உண்மையிலேயே தாழ்த்தப்பட்டவன்தான். கேவலமானவன்தான். இப்போது ''வினவு''பவனும், அதற்கு வக்காலத்து வாங்குபவனும் அவன் கூறும் ''தாழ்த்தப்பட்ட மாணவர்கள்'' ''மேல்(!)'' வர்க்கத்தால் தாக்கப்பட்டபோதே இந்த blog-ல் எழுதி கிழித்திருக்கலாமே! இதுவே அவன் வீட்டு பிள்ளையை அடித்திருந்தால் அலறி துடித்திருப்பானா இல்லை அடித்தவன் என்ன ஜாதி என்று ஆராய்ந்து



படிப்பகம்

www.padippakam.com

அவன் பக்கத்து நியாயத்தை கண்டுபிடித்துக் கொண்டிருப்பானா? என்ன ஜாதியோ. என்ன எழவோ.!

**சீனு:** அடிப்பதும் தவறு! திருப்பி அடிப்பதும் தவறு! ஆனால், இப்போ நீங்க திருப்பி அடிப்பது தவறு இல்லை என்பது போல் எழுதியிருக்கிறீர்கள். அவ்வளவு தான்.

**நல்லதம்பி:** திரு. 'வினவு, நீங்கள் நன்றாக புனைவு செய்கிறீர்கள்! நீங்கள் இராமாயணம் கூட படைக்கலாம், நம்புவதற்கு ஆள் இருந்தால். தவறான தகவல்களைப் பரப்ப வேண்டாம். ஒருவேளை நீங்கள் நல்லவராக கூட இருக்கலாம். வன்முறை செய்த மாணவர்களுக்கு வக்காலத்து வாங்காதீர்கள். நூறு பேரு வக்காலத்து வாங்கினால் கோயபல்ஸ் மாதிரி, எல்லோரும் நம்பிவிடுவார்கள் என்பது உங்கள் கணிப்பா? போங்கையா நீங்களும் உங்கள் நியாயமும். மெனக்கெட்டு பக்கம் பக்கமாக வேறு எழுதித் தள்ளுகிறீர்கள். உங்களிடம் உள்ள சாதிவெறியும், தாழ்வு மனப்பான்மையும் அகன்றால் தான் சாதியம் ஒழியும். தீண்டாமை ஒழியும்.

**இனியவன்:** அம்பேத்கார் உங்களை இப்படி அடித்துக் கொள்ளுங்கள் என்று சொன்னாரா? என் பேரை சட்ட கல்லூரிக்கு வையுங்கள் என்று சொன்னாரா? முத்துராமலிங்கத் தேவர் தன் பெயரை விமான நிலையத்துக்கு சூட்டச் சொன்னாரா? ஏண்டா இப்படி அலையுறீங்க.

உங்களுக்கெல்லாம் இட ஒதுக்கீடு கொடுத்து அரசு படிக்கச் சொல்கிறது. அதை விட்டு விட்டு ஏன்டா அடிச்சிகிறீங்க. உறுப்புடுங்கடா! நீங்களெல்லாம் இப்படி எழுதுவதால் தான் சாதிவெறி ஏற்படுகிறது. சண்டை மூள்கிறது.

**மாரியப்பன்:** ''தேவர் மகன் படத்திற்கு இளையராஜாவை இசை அமைக்க எந்த சமத்துவம் அனுமதித்து என்று புரியவில்லை. ஒரு தலித் இசை அமைத்த பாடல்கள் இவர்களுக்கு தீட்டாக தெரியவில்லையா?''

தோடா... இவரு சொல்ல வந்துட்டாரு. தப்பு தப்ப எழுதாதைய்யா! இளையராஜாவே ஒன்னும் சொல்லலை. இவரு சொல்ல வந்துட்டாரு. இளையராஜாவையும் வைரமுத்துவையும்



படிப்பகம்

www.padippakam.com

சென்னைக்கு அழைத்து வந்தது யாருன்னு தெரியுமா உனக்கு. அதெல்லாம் வசதியா மறந்திடுங்கய்யா! உங்க வெறியை மட்டும் காட்டுங்க!

**முனியாண்டி:** ஆகா கோட்சில்லா! நீ படமுன்னுதான் நினைச்சேன். நல்ல படத்தையே உருவாக்குவே போலிருக்கே! உன்னை நம்ப பணம் போட்டா வீண் போகாதப்பா! நல்ல கதையைத் தயார் பண்ணு.

**வடிவேலு:** இதை எழுதிய வினவு ஒரு தலித்தாக இருக்க முடியாது. ஒரு தேவராகவோ அல்லது வேறு சாதியைச் சேர்ந்தவராகவோதான் இருக்க முடியும். அவனுக தான் இப்படி எழுதி பேர் வாங்க அலையுராங்க. முற்போக்குவாதிகளாம். போங்கய்யா நீங்களும் உங்க வாதமும்!

**ராஜாராம்:** ''இன்று தேவர் குருபூஜை எதற்காக நடத்தப்படுகிறது? அவர் நேதாஜியுடன் இணைந்து சுதந்திரப் போரில் ஈடுபட்டார் என்பதற்காகவா, அல்லது சில பதிவர்கள் கூறுவது போல அவர் தீண்டாமைக்கு எதிராகக் குரல் கொடுத்தார் என்பதற்காகவா?''

அன்புள்ள வினவு,

எல்லா கட்சிக்காரனும் ஓடுறானே அது எதுக்கு ஓய்? ஓட்டுப் பொறுக்கத்தானே? தேர்தல் நேரமாக இருந்தால் நம்ம திருமாவும் அங்கதான் இருப்பாரு தெரிஞ்சிக்கோ கண்ணு! இதிலிருந்து தெரியுதா, தலித்து, தேவர், வன்னியர் இவா கிட்ட தான் நம்ம அரசியல்வாதிங்க பிழைப்பு நடத்துறாங்கன்னு. அவர்கள் இன்றி தமிழக அரசியலே இல்லை என்பதுதான் உண்மை!

**இராமானுஜம்:** தேவர் பிறந்த அன்றே இறந்ததால் தான் அவருக்கு குருபூஜை சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். தனது சொத்து முழுவதையும் பொதுமக்களுக்கு எழுதி வைத்தவரை தவறாக நீங்கள் சித்தரிக்க முயல்வது ஏன்? இந்திய சுதந்திரப் போராட்டத்தில் நேதாஜிக்கு பக்கபலமாக இருந்து பாடுபட்டவரை ஏன் சாதியத்துக்குள் அடக்குகிறீர்கள்? தீண்டாமையை.எதிர்த்து, தேவர் இன மக்கள் சிலரை எதிர்த்து எழுதுங்கள், முத்துராமலிங்கத் தேவரைத் தவறாக சித்தரிக்க முயலவேண்டாம். அது வரலாற்றுப் பிழையாகிவிடும். அவரை



படிப்பகம்

தவறாக எழுதும் பதிவுகள் எல்லாம் சாதி துவேஷத்தைக் கட்ட விழ்த்து விடக்கூடியாதகவே இருக்கிறது. வேண்டாம் நிறுத்துங்கள்!

**வினவு:** நல்லதம்பி, இனியவன், மாரியப்பன், முனியாண்டி, வடிவேலு, ராஜாராம், இராமானுஜம் என்ற பெயர்களில் ஒருவரே பின்னூட்டம் போட்டிருக்கிறார். சாதி வெறிக்கு ஆதரவாக பலர் இருப்பதாக காட்டிக்கொள்வதற்காக இவ்வளவு பிரயத்தனம் செய் திருப்பவர் அதை ஒரே பெயரில் வெளிப்படையாகச் செய்யலாமே. ஏனிந்த தசாவதார வேலை? தானாடாவிட்டாலும் தன் சதையாடும் என்பதை உங்கள் பதட்டத்திலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் நீங்கள் தூக்கிப்படிக்கும் சாதிவெறிக்கு எதிர்காலமில்லை, அது எப்படியும் புதைகுழிக்குத்தான் போக வேண்டுமென்பதை இந்தப் பல குரல் மன்னர் இப்போதைக்குப் புரிந்து கொள்ளப் போவ தில்லை.

**தேவர் மகன்:** டேய் நல்லத்தம்பி! தலித்துன்னா ஒனக்கு கிள்ளுக் கீரையா? வந்துட்டானுவ. ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுகிற கதையா. தேவர் சாதி பயபுள்ளையை இன்னும் நொங்காம விட்டது தப்பு.

**நல்லதம்பி:** திரு. வினவு, உங்களுடைய கருத்துக்கள் சில ஏற்றுக் கொள்ளும் படியாக இருந்த போதிலும், அவை சாதிவெறியை வேறு சாதியினருக்கு ஏற்படுத்தும். நீங்கள் முற்போக்காக எழுத நினைத்தால் கைம்பெண்கள் மறுமணம், கள்ளச்சாராயம், டாஸ்மாக் ஒழிப்பு இதைச் செய்தால் நாட்டுக்கு நன்மை பயக்கும். இப்படி சாதி வெறியை தூண்டுவது போல் கட்டுரை எழுதினீர்கள் என்றால், வீணாக இருதரப்பையும் மூட்டி விட்டது போல் ஆகிவிடும். உங்கள் பதிவின் பின்னூட்டங்கள் அதையே பிரதிபலிக்கின்றன. நீங்கள் மட்டுறுத்தல் செய்யாதது வீணான பின் விளைவுகளை ஏற்படுத்தும். நன்றி!

**கலகம்:** அறிவகம் அவர்களுக்கு, ஒரு பத்திரிக்கையாளன் கடமையா தென, அவர்கள் பாடபுத்தகத்தில்வரையறுக்கப்பட்டுள்ளது. நடுநிலைமை தவறாது இருத்தல் நன்று.

உங்களின் நடு நிலைமையின் தரம் அப்படி. எல்லா இடத்திலும் நியாயத்தராசு தேடி அலைந்து கொண்டிருக்கின்றீர்கள். உண்மையை

www.padippakam.com

சொல்லுங்கள். வினவு எழுதிதான் மக்களுக்கு அடிவாங்கியவன் சாதி தெரியுமா? அடிவாங்கிய மறுநாளே தமிழகம் முழுவதும் தேவர் சாதி சங்கங்கள் கடையடைப்பு போராட்டம் நடத்தினவே அதைகூட வினவு போன்றோர் வெளியிட்டனரா? இல்லை மாட்சிமை தாங்கிய பத்திரிக்கைகளா? 'திண்ணியத்தில் மலம் தின்ன வைக்கப்பட்டதாக கூறப்பட்ட நபர்' என்று எழுதிய பத்திரிக்கை நிருபரின் நியாயத்தராசு எப்படி சரி சமமாய் நிற்கின்றது? முத்துராமலிங்கம் என்ற சாதி வெறியனை பற்றி நீங்கள் என்ன குறிப்பிட்டீர்கள்?

அவரின் சாதிவெறியை எங்காவது மறைமுகமாகவாவது வெளி காட்டினீர்களா?

சன் டி.வி. செய்தது என்ன தெரியுமா? தமிழகம் முழுவதும் தலித்துக்கெதிராக அவர்கள் சாதிவெறியர்கள் என்ற பொய் தோற்றத்தை தான் உருவாக்கியது. உண்மையை புரிந்து கொள்ளுங்கள்.

**ராஜேஷ்:** உங்கள் மேல் சைபர் போலீசில் புகார் கொடுத்துள்ளோம்.

**சாவி:** முத்துராமலிங்கம் என்பவனை சாதி வெறியன் என்று சொல்லும். உன் பெயர் கழகமா? கலகமா? நீ தானய்யா கலகம். நீ திருந்தினால் மற்றவர்கள் திருந்துவார்கள். வாழ்க உன் வேதம்.

**வேலுச்சாமி தேவர்:** நண்பர்களே, இந்த சமூக அமைப்பை ஒரு நிகழ்ச்சியால் மாற்றிவிட முடியாது. வன்முறையினால் தீர்வும் கிடைக்காது. படங்களை பார்த்தேன். இதயம் வலித்தது. ஒருவர் சமூக அங்கீகாரத்திற்காக மற்றவரை தாக்கினால் அது அடிவாங்கியவருக்கு பாதுகாப்பை அளிக்குமேயன்றி சமத்துவத்தை வளர்க்காது. அங்கீகாரம், மரியாதை போன்றவற்றை அடித்து பிடுங்க முடியாது, அது தானாய் கிடைக்க வேண்டும். அப்பொழுதுதான் இரு தரப்பிலும் மகிழ்ச்சியிருக்கும். அது உடனடியாக நடக்கக்கூடியது அல்ல, நீங்கள் சிறிது காலமாவது அதற்காக காத்திருக்க வேண்டும். மாயாவதியை பாருங்கள் உருட்டுக் கட்டையை எடுக்காமல் மரியாதை பெற்றார். எல்லோருக்கும் மகிழ்ச்சி.

உங்களை போலவே எங்களுக்கும் கல்வி இல்லை. இப்போதுதான் அழுக்கில்லாமல் வெள்ளை வேட்டி கட்டுகிறோம். வாழக் கற்றுக்கொண்டோம், தொழில் துவங்குகிறோம். இப்போதுதான்



படிப்பகம்

www.padippakam.com

எங்களுக்கும் சமூக அங்கீகாரம் கிடைக்கிறது. உள்ளதைச் சொன்னால் நம் இருவர் நிலையுமே ஒன்றுதான், தமிழகத்தில் நாடார், நாயக்கர், ஐயர், செட்டியார் இவர்களையெல்லாம் விட கீழாகதான் இருக்கிறோம், யாரும் எங்களை மதிப்பதில்லை, உசிலை நாடார் ஐயர்களை போல் நடந்து கொள்கின்றனர், எங்களுடன் பேசுவது கூட இல்லை, முட்டாள்கள் என கருதுகின்றனர்.

அதனால் நண்பர்களே குரு பூஜை ஏன் என்பதையெல்லாம் மறந்துவிட்டு உங்கள் கடமையை செய்யுங்கள், சமூகத்தை முன்னேற்றுங்கள். கள்ளர் என்று பார்க்காதீர்கள், நாங்களும் வாழ்வை மகிழ்ச்சியாக கழிக்க விரும்புகிறோம். பழங்காலங்களை போல சண்டை வேண்டாம், போதும். இன்றயை காலங்களில் ஒபாமாக்கள் அதிபராகிறார்கள். ஏன் தலித்துகள் நல்ல தலைவர்களாக (சாதித் தலைவர்களல்ல) வந்து சமூகத்தை முன்னேற்றக்கூடாது. உண்மையான சண்டை வறுமைக்கு எதிராக நடத்தப்பட வேண்டும். பணம், வேலை, சொத்து, கல்வி எல்லாவற்றையும் மாற்றிவிடும். தலித் வந்தால் மரியாதையை பெற்றுத்தரும். ஏன் மற்றவர்களை கேட்கிறீர்கள். விடுங்கள். நன்றாக படியுங்கள், நல்ல நிலைக்கு வாருங்கள் அப்புறம் பாருங்கள் சமூக அங்கீகாரமும் மரியாதையும் தானாய் வரும். தயவு செய்து வன்முறை வேண்டாம். நான் நிம்மதியாக வாழ விரும்புகிறேன்.

இந்தியன்: சாதியில்லா உலகை படைப்போம், இந்த சாதி கருமாந்திரம் இல்லாமல் அரசியல் சாக்கடைகளால் இருக்க முடியாது. நாமாவது முயற்சிப்போமே!

●●●



படிப்பகம்

www.padippakam.com

## டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரி சம்பவத்தில் படிப்பினை பெறுவோம்!

### சாதி - மத வெறி அமைப்புகளைப் புறக்கணிப்போம்! மாணவர்களாகிய நாம் ஒரு வர்க்கமாக ஒன்றிணைவோம்!

அன்பார்ந்த மாணவர்களே!

கடந்த 12.11.2008 அன்று, சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரியில் நடந்த சம்பவங்கள் அனைத்தையும், ஒட்டு மொத்த தமிழக மக்களும் அறிந்திருப்பார்கள். மாணவர்களுக் கிடையில் நடந்த இந்த மோதலை மீண்டும், மீண்டும் போட்டுக் காட்டி, பார்ப்பவர்களின் மனதில், மாணவர்கள் என்றாலே ரவுடிகள், விட்டேத்தியானவர்கள் என்ற தவறான மதிப்பீட்டை சன்-டிவியும், ஜெயா-டிவியும் திட்டமிட்டுச் செய்தன.

மாணவர்களிடையே நடந்த இந்த மோதலுக்கு காரணம் என்ன?

பணக்கார வீட்டுப் பிள்ளைகளுக்கு மட்டுமே உயர்கல்வி சாத்தியம் என்ற நிலையை தனியார்மயம்-தாராளமயம் உருவாக்கி வரும் இச்சூழலில், ஏழை வீட்டுப் பிள்ளைகள் நம்பியிருப்பது பி.ஏ., எம்.ஏ., போன்ற படிப்புகளும், ஆசிரியர் பயிற்சி, செவிலியர் பயிற்சி படிப்புகளும் உயர் கல்வி என்ற வகையில் சட்டப்படிப்பும்தான்.

இப்படிப்பைக்கூட பொதுக் கழிப்பிடங்களைப்போல காட்சியளிக்கும் அரசு விடுதிகளில் தங்கித்தான் பெரும்பாலான மாணவர்கள் படிக்க வேண்டும். இந்த வகையில் டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரியில் 60% தலித் மாணவர்கள்



படிப்பகம்

www.padippakam.com

படித்து வருகிறார்கள். இங்கு படிக்கும் தலித் மாணவர்களை, ஆதிக்க சாதி மாணவர்களில் சிலர் கோட்டா கோஷ்டிகள், சத்துணவு கோஷ்டிகள் என்று இழிவுபடுத்துவது, ஸ்காலர்ஷிப் சுற்றறிக்கை வந்தாலே தலித் மாணவர்களை நக்கலாகப் பார்ப்பது போன்ற இழிவான அணுகுமுறைகளை மேற்கொண்டு வந்தனர். இதில் முக்கிய பங்கு வகித்த ஆதிக்க தேவர் சாதி மாணவர்களில் சிலர் விடுதியில் தலித் மாணவர்கள் சாப்பிடுவதற்கு முன்போ அல்லது பின்போதான் உணவு அறைக்கு சாப்பிட வருவார்கள். ஒன்றாக அமர்ந்து சாப்பிடுவதையே அறுவறுப்பாகக் கருதுவார்கள். இதை அறுவறுப்பாகக் கருதும் இவர்கள்தான், நாங்களும்தான் சமூகத்தில் பின்தங்கி உள்ளோம். எங்களுக்கும் இடஒதுக்கீடு தாருங்கள் என்று அரசிடம் பிச்சை எடுக்கிறார்கள்.

இது, இவர்களுக்கு அவமானமாக இல்லையா? அருவறுப்பாகப் படவில்லையா? இந்த அருவருப்பை மறந்துதான் தலித் மாணவர்கள் சாப்பிட வரும்போதும், போகும்போதும் "நம்ம ஆளுங்ககிட்ட கஞ்சி கூழ் வாங்கி குடிச்ச பசங்க இன்றைக்கு நம்மளோட உட்கார்ந்து சாப்பிட வரானுங்க" என்று ஆதிக்க தேவர் சாதி மாணவர்கள் இழிவாகப் பேசி வந்தனர்.

தேர்வு நேரங்களில் படிக்கும்போது, தலித் மாணவர்களின் அறைக் கதவுகளை வேகமாகத் தட்டுவது, கூச்சல் போடுவது போன்ற வக்கிரமான செயல்களை மேற்கொண்டு, அவர்களின் தேர்ச்சிக்கும் உலை வைத்தனர். இதை அன்றைய வார்டனும், சஸ்பெண்ட் செய்யப்பட்ட கல்லூரி முதல்வருமான ஸ்ரீதேவும் அவர்களின் இழிவான செயல்பாடுகளை தடுக்காமல் ஆதரவாகவே இருந்துள்ளார். தலித் மாணவர்கள் புகார் கொடுத்தாலும் அதை ஒரு பொருட்டாகவே கருதுவதில்லை,

இப்படித்தான் கடந்த ஆண்டின் (2007) முதல் செமஸ்டர் தேர்வின்போது, விடுதியின் மொட்டை மாடியில் படித்துக் கொண்டிருந்த முதலாமாண்டு தலித் மாணவனை தங்களுக்கு மரியாதை தரவில்லை என்று வலிந்து ஒரு பொய்யைச் சொல்லி, ஆதிக்க சாதியைச் சேர்ந்த சில சீனியர் மாணவர்கள் தாக்கியுள்ளனர். இதை கேட்கச் சென்ற இரண்டு தலித் மாணவர்களையும் உங்களுக்கெல்லாம் எதுக்குடா படிப்பு என்று இழிவுபடுத்தி



படிப்பகம்

www.padippakam.com

பேசியதோடு அடித்தும் உள்ளனர். இதனால் கோபம் அடைந்த தலித் மாணவர்கள் அனைவரும் திரண்டுச் சென்று எதிர்த்து கேட்டதில், அது தகராறில் முடிந்தது.

ஆதிக்க தேவர் சாதி மாணவர்களின் சாதீய உணர்வுகளைத் தூண்டி தங்களின் பிழைப்புவாத சமூக விரோத செயல்களுக்கு பயன்படுத்தும் நோக்கத்தோடு, தேவர் பேரவை, மூவேந்தர் முன்னேற்றக்கழகம் போன்ற ஆதிக்க தேவர் சாதி சங்கங்கள் **"முக்குலத்தோர் மாணவர் பேரவை"** என்ற அமைப்பைத் தொடங்கின.

இச்சாதி சங்கங்கள் **"இவனுங்களோடெல்லாம் எதுக்குடா நாம தங்கனும்"** என்று கூறி, ஆதிக்க சாதி மணவர்களை உசுப்பிவிட்டு விடுதியை விட்டே வெளியேறும்படி செய்தன.

தலித் மாணவர்களை கேலியும், கிண்டலும் செய்வது, அவர்களை ஆத்திரமூட்டி சண்டைக்கு இழுப்பது, இதன் மூலம் படிக்க விடாமல் செய்வது, இறுதியில் அவர்களின் படிப்பை முடக்கியும் விடுவது என்ற திட்டத்தோடுதான் முக்குலத்தோர் மாணவர் பேரவை மாணவர்கள் ஆதிக்க சாதி சங்கங்களால் பயிற்றுவிக்கப்பட்டனர்.

இச்சூழலில் கடந்த 4 மாதங்களுக்கு முன்பு ஆதிக்க சாதி மாணவர் ஒருவர் தலித் மாணவர்களைப் பார்த்து **"ஊர்ல செருப்புப் போட வக்கில்லாதவனுங்க இங்க ஷூ போட்டுக் கொண்டு திரியுரானுங்கடா"** என்று இழிவாகப் பேசினார். இதனால் கோபமடைந்த தலித் மாணவர்கள் சிலர், அந்த மாணவனை அடித்து கல்லூரி முதல்வரிடம் அழைத்துச் சென்று, புகாரும் செய்தனர். ஆனால், கல்லூரி முதல்வரோ எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இச்சம்பவத்திற்கு பழிவாங்கும் நோக்கத்தோடு, முக்குலத்தோர் மாணவர் பேரவையைச் சேர்ந்த பாரதி கண்ணனும், ஆறுமுகமும் சேர்ந்து கொண்டு இதற்கு காரணமான தலித் மாணவன் சித்திரைச் செல்வனை அடித்து, அவருடைய மூக்கு கண்ணாடியையும் உடைத்தனர்.

இதையொட்டி தலித் மாணவர்களுக்கும், பாரதி கண்ணன் தலைமையிலான ஆதிக்க சாதி மாணவர்களுக்கும் மோதல்



படிப்பகம்

www.padippakam.com

ஏற்பட்டது. எப்பொழுதும் கத்தியோடு வலம் வரும் பாரதி கண்ணன், தலித் மாணவர்களை குத்துவதற்காக கொண்டு வந்த கத்தியை கல்லூரிக்குள் வைத்துக் கொண்டு திரிந்ததை பார்த்த கல்லூரி முதல்வர் ஸ்ரீ தேவ் பாரதி கண்ணனிடமிருந்து கத்தியை மட்டும் வாங்கி வைத்துக்கொண்டு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அனுப்பிவிட்டார்.

தலித் மாணவர்கள் மீது இவ்வளவு தீண்டாமை கொடுமைகளையும் அரங்கேற்றி வந்த இவர்கள்தான் 2008, அக்டோபர் 30ந்தேதி தேவர் ஜெயந்தி விழாவிற்கு, சுவரொட்டிகளை ஒட்டினர், அதில் திட்டமிட்டே டாக்டர் அம்பேத்கர் பெயரை குறிப்பிடாமல் ஆதிக்க சாதி வெறியோடு அச்சடித்து சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர்.

இதை 2ம் ஆண்டு படிக்கும் தலித் மாணவர் ஒருவர் தனது நண்பனான ஆதிக்க சாதி மாணவரிடம் தேவர் ஜெயந்தி விழா சுவரொட்டியில் டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரி மாணவர்கள் என்று குறிப்பிடாமல் வெறும் சட்டக்கல்லூரி மாணவர்கள் என்று அச்சடித்துள்ளீர்களே ஏன் என்று கேட்டுள்ளார். அவரும் எனக்கு தெரியாது, கேட்டு சொல்கிறேன் என்று கூறிவிட்டுச் சென்றதோடு, பாரதி கண்ணனிடம் இந்த தகவலை தெரிவித்துள்ளார். இதையடுத்து பாரதி கண்ணனும், சில ஆதிக்க சாதி மாணவர்களும் சேர்ந்து, டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி மாணவர்கள் என்று குறிப்பிடாமல் வெறும் சட்டக் கல்லூரி மாணவர்கள் என்று சுவரொட்டியில் குறிப்பிட்டுள்ளீர்களே என்று கேள்வியை எழுப்பிய தலித் மாணவரிடம் டாக்டர் அம்பேத்கர் பெயரை குறிப்பிட முடியாது என்று ஆதிக்க சாதி திமிரோடு பேசியதோடு மட்டுமில்லாமல், கேலியும், கிண்டலும் செய்து, அடித்தும் உள்ளனர், இது தலித் மாணவர்ளை மேலும் ஆத்திரப்படுத்தியது.

வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சியது போல, தலித் மாணவர்கள் தேர்வு எழுதுவதை தடுக்கும் நோக்கத்தோடு முக்குலத்தோர் மாணவர் பேரவையைச் சேர்ந்த 40க்கும் மேற்பட்ட மாணவர்கள் கத்தி, கம்பு, அரிவாள், இரும்புக் கம்பிகள் போன்ற பயங்கர ஆயுதங்களுடன் கல்லூரி வளாகத்திற்குள் சுற்றி வந்ததால்



படிப்பகம்

www.padippakam.com

அஞ்சிய தலித் மாணவர்கள் பெரும்பான்மையோர் தேர்வு எழுதவில்லை. இதையும் மீறி ஒரு சில சீனியர் தலித் மாணவர்கள் மட்டுமே சென்று தேர்வு எழுதினர்.

இப்படி ஆயுதங்களுடன் ஆதிக்க சாதி மாணவர்கள் கல்லூரிக்குள் சுற்றி வருவது போலீசுக்கும், கல்லூரி நிர்வாகத்திற்கும் தெரியும். ஆனால் நடவடிக்கை எதையும் எடுக்கவில்லை. பெரும்பான்மை தலித் மாணவர்கள் 3 (மூன்று) தேர்வுகளை எழுத முடியாத சூழலில்தான், கடந்த 12.11.2008 அன்று காலை, ஆனது ஆகட்டும் போய் பார்க்கலாம் என்று முடிவெடுத்து 2ம் ஆண்டு மாணவர்கள் தேர்வு எழுதச் சென்றனர். தேர்வு எழுத வந்த தலித் மாணவர்களை தாக்குவதற்காக பயங்கர ஆயுதங்களுடன் காத்திருந்த பாரதி கண்ணன் தலைமையிலான ஆதிக்க சாதி மாணவர்கள் தடுத்துள்ளனர். தேர்வு எழுத விடாமல் விரட்டியும் அடித்துள்ளனர்.

இதில் கோபமடைந்த தலித் மாணவர்கள், தற்காப்புக்கு கம்புகளுடன் தேர்வு எழுத கல்லூரிக்குள் நுழைந்தனர். கல்லூரிக்குள் கிடந்த கற்களையும் பாதுகாப்பிற்காக எடுத்துக் கொண்டனர். அந்த நேரத்தில் கல்லூரிக்கு வெளியில் சென்றிருந்த ஆதிக்க சாதி மாணவர்கள், தலித் மாணவர்கள் கல்லூரிக்குள் வந்துள்ளனர் என்பதை தெரிந்து கொண்டனர்.

உடனே உயர்நீதி மன்ற வளாகத்திற்குள் நுழைந்து நீதி மன்ற தடுப்புச் சுவரைத் தாண்டிக் குதித்து கல்லூரிக்குள் கத்தியுடன் பாரதி கண்ணனும், ஆறுமுகமும் கொலை வெறியோடு வந்தனர். இதை நேரில் பார்த்த இந்திரா காந்தி அணுசக்தி ஆராய்ச்சி மையத்தின் முன்னாள் விஞ்ஞானி திரு.கோபால் அவர்கள் நவ.17-2008 அன்று, வந்த இந்து, குமுதம் ரிப்போர்ட்டர் ஆகிய இதழ்களுக்கு அளித்த பேட்டியில் “பாரதி கண்ணனும், ஆறுமுகமும் மாலை 4.00 மணியளவில் ஹீரோ ஹோண்டா பைக்கில், கோர்ட் வளாகத்தில் வந்து இறங்கினர். இறங்கிய உடனே கத்தியை எடுத்து சுவரில் தீட்டிக் கொண்டே தனக்கு வந்த செல்போன் அழைப்பில் நான் பீல்டுலதான் இருக்கேன். குறைந்தது 4 பேரையாவது போட்டுட்டுதான் வருவேன்” என்று கூறிவிட்டு கொலை வெறியோடு சுவர் ஏறி குதித்து கல்லூரிக்குள் நுழைந்ததை தானும், சில வழக்குரைஞர்களும் பார்த்ததாக தெரிவித்துள்ளார்.



படிப்பகம்

கல்லூரிக்குள் குதித்த வேகத்தில் பாரதி கண்ணனும், ஆறுமுகமும் தலித் மாணவர்களை கொலை வெறியோடு தாக்கினர். சித்திரைச் செல்வன் என்பவரை ஆறுமுகம் கத்தியால் தாக்கியதில் அவருடைய காது அறுந்து மார்பில் கீறலும் விழுந்தது. இதைப் பார்த்த மாணவர் ஒருவர் ஆறுமுகத்தைக் தாக்கி அவனிடமிருந்த கத்தியை பிடிங்கி எறிந்து விட்டார். ஆறுமுகத்தைத் தாக்கிய தலித் மாணவர்களைத் தாக்க, கொலை வெறியோடு கத்தியுடன் ஓடி வந்தான் பாரதி கண்ணன். இதைக் கண்டு பயந்து ஓடிய தலித் மாணவர்கள், பின்பு தற்காப்புக்காக தங்களிடம் இருந்த கம்புகளைக் கொண்டு திருப்பித் தாக்கினர். ஆதிக்க தேவர் சாதி மாணவர்களின் கேலிக்கும் இழிவுக்கும் ஆட்பட்ட தலித் மாணவர்கள் தங்களிடம் நீண்ட நாட்களாகத் தேக்கி வைத்திருந்த உள்ளக் குமுறளை, அடக்கி வைத்த கோபத்தை தாக்குதலாக வெளிப்படுத்தியுள்ளனர். கோபத்தில் திருப்பி தாக்கியதைத்தான், சன் டிவியும், ஜெயா டிவியும் தங்களின் கேடான நோக்கத்திற்கு பயன்படுத்திக் கொண்டன.

மாணவர்களிடம் ஏற்பட்ட இந்த மோதலைக்கூட போலீசாரால் தடுத்திருக்க முடியும். ஆனால் தடுக்கவில்லை. தடுப்பதால் பணம் பிடுங்க வாய்ப்பில்லை. எனவே, மோதிக் கொண்டு சாகட்டும் எதற்கு சிரமப்பட வேண்டும் என்று விட்டு விட்டனர். அதே வேளையில், மாணவர்கள் உரிமைக்காகப் போராடும்போது அனுமதியின்றியே கல்லூரிக்குள் புகுந்து போலீசு தாக்கும். இதற்கு மாநிலக் கல்லூரி மாணவர்கள் போலீசாரால் தாக்கப்பட்டது போன்ற உதாரணங்கள் பல உள்ளன.

இந்த போலீசுதான், இன்று கொலை வெறி தாக்குதலை நடத்திய ஆதிக்க சாதி மாணவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் கை கட்டி வேடிக்கை பார்த்தது. அதே நேரத்தில் கொலை வெறித் தாக்குதலை எதிர்கொண்டு திருப்பித் தாக்கிய தலித் மாணவர்களை மட்டும் தேடித்தேடிப் பிடித்து கைது செய்தது.

சாதிவெறியூட்டி மாணவர்களை மோதவிட்டு ரத்தம் குடிக்கும் ஓட்டுக் கட்சி பிழைப்பு வாதிகளும் சரி, ஆதிக்க சாதி சங்கங்களும் சரி மாணவர்களின் கல்வி உரிமைக்காவும், ஜனநாயக உரிமைக்காகவும் போராடுவதே இல்லை.

www.padippakam.com

குறிப்பாக இன்று டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரி மாணவர்களை சாதி வெறியூட்டி வளர்க்கும் தேவர் பேரவை, மூவேந்தர் முன்னேற்றக் கழகம், முக்குலத்தோர் மாணவர் பேரவை போன்ற சாதி சங்கங்கள், இதே கல்லூரிகளில் அடிப்படை வசதி கோரியும்; பேராசிரியர் பற்றாக்குறையை நிறைவு செய்யக் கோரியும்; தேர்வுக் கட்டண, கல்விக் கட்டண உயர்வை ரத்து செய்யக்கோரியும்; சட்டக் கல்லூரி தனியார் மயமாவதைத் தடுக்கவும், தனியார்மய - தாராளமயத்தால் கல்விப் பறி போவதை எதிர்த்தும் மாணவர்கள் போராடிய போது கையைக் கட்டிக் கொண்டு, வாயைப் பொத்திக் கொண்டு, போராட்டத்தில் கலந்து கொள்ளாமல் வேடிக்கை பார்த்தவர்களே இவர்கள் தான் என்பதை மறந்து விடக் கூடாது. இவர்களுடைய நோக்கமே மாணவர்களின் ஜனநாயக உரிமைக்காக, அடிப்படை உரிமைக்காகப் போராடுவது இல்லை. ஆதிக்க சாதி வெறியூட்டி ஆதாயம் அடைவதே.

தங்கள் கந்து வட்டித் தொழிலுக்கும், சமூக விரோத செயலுக்கும், பதவி சுகத்தை ருசிப்பதற்கும் ஆதிக்கம் செலுத்துவதற்கும் ஓட்டுக் கட்சிகளுடன் கூட்டு வைத்துக் கொண்டு ஓட்டு வங்கிகளாக மாணவர்களைப் பயன்படுத்திக் கொள்ளவுமே, மாணவர்களிடம் சாதிவெறியூட்டி வளர்த்து வருவதையே சாதிச் சங்கங்கள் நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றன.

இந்த சாதிச் சங்கங்கள் கூட்டு வைத்திருக்கும் ஓட்டு கட்சிகள்தான் தனியார்மய - தாராளமய - உலகமயக் கொள்கைகளைக் கொண்டு வந்து ஏழை மாணவர்களை உயர்கல்விப் படிக்க விடாமல் காசு உள்ளவனுக்கே கல்வி என்ற மறுகாலனியாக்க கொள்கையை அரங்கேற்றி வருகின்றனர்.

இப்படி ஏழை மாணவர்களின் இலவசக் கல்விக்கான உரிமைகளைப் பறித்து, இன்றைய - எதிர்கால மாணவர் சமூகத்தைத் தற்குறியாக்கும் இந்த ஓட்டுக் கட்சிகளையும், அதன் கூட்டாளியான சாதி சங்கங்களையும் இவைகளின் செயல்களை ஆசிர்வதிக்கும் அரசையும் அப்புறப்படுத்துவது அவசியமான ஒன்று. இதற்கு சாதி-மதவெறி அமைப்புகளில் இருந்து வெளியேறுவதே இன்றையத் தேவை.



படிப்பகம்

www.padippakam.com

ஏனெனில் இதோடு இப்பிரச்சனை முடியப்போவதில்லை. ஆதிக்க சாதி வெறிச் சங்கங்கள் பழிக்குப்பழி வாங்குவது என்ற பெயரில் சாதி வெறிக்கு கொம்பு சீவி வருகின்றன. இதை முறியடிப்பதும், மேலும் இவைகளுக்கு பலியாகாமல் தடுக்கவும், பகுத்தறிவு உள்ள மாணவர்களாகிய நாம் பிற்போக்குத்தனமான, மனித நேயமற்ற, அசிங்கமான சாதி-மதவெறிக்கு சவக்குழி அமைப்பதும் அவசியம் என்பதை உணருவோம்.

மாணவர்களின் இந்த மோதலை காரணம் காட்டி, அதிகார வர்க்கமும், போலீசும் மாணவர்களின் ஜனநாயக உரிமையையும், போராடும் சுதந்திரத்தையும் பறித்து பள்ளிகளில், கல்லூரிகளில் அடக்குமுறையைக் கொண்டு வருவதற்கான சூழ்நிலையும் உள்ளது. இதற்கு எதிராகவும் விழிப்புடன் இருந்து போராடி முறியடிக்க வேண்டும் என்பதை உணருவோம்.

மாணவர்களாக ஒன்றுபடுவோம்! நமக்கான ஜனநாயக உரிமைகளையும், அடிப்படை உரிமைகளையும் வென்றெடுக்கப் போராடுவோம்!

**புரட்சிகர மாணவர்–இளைஞர் முன்னணி**

**தமிழ்நாடு**



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

## உழைக்கும் மக்களே!

"முக்குலத்தோர் மாணவர் பேரவை" என்ற பெயரில் தலித் மாணவர்களை தொடர்ந்து சாதியை சொல்லி இழிவுபடுத்தியும், தாக்கியும் வந்த ஆதிக்க சாதி வெறியாட்டத்தின் எதிர்விளைவே டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி சம்பவம்!

---

★ ஓட்டுப் பொறுக்க, அதிகாரத்தை சுவைக்க மாணவர்களுக்கு சாதிவெறி நஞ்சு ஊட்டி கொம்பு சீவிவிட்ட மூவேந்தர் முன்னேற்றக் கழகம் போன்ற சாதிவெறி கட்சிகளை முறியடிப்போம்!

★ மாணவர்களை ரவுடிகளாக சித்தரிக்கும் அயோக்கியத்தனத்தை முறியடிப்போம்!

## மாணவர்களே!

★ சாதி-மதவெறி சக்திகளை புறக்கணிப்போம்! மாணவர்களின் ஒற்றுமையை பலப்படுத்துவோம்!

★ டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி மோதலை ஒட்டி மாணவர்களை அடக்கி-ஒடுக்க எத்தனிக்கும் போலீசு, அதிகார வர்க்கத்தின் நோக்கத்தை முறியடிப்போம்!

## தமிழக அரசே!

★ மோதலுக்குப் பின்னே உள்ள ஆதிக்க சாதிவெறி சக்திகள் மீது நடவடிக்கை எடு!

★ தலித் மாணவர்களை மட்டும் குறி வைத்து தாக்குவதை நிறுத்து!

**புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி**

**RSYF** ✆: 97508 19106

ரூ.35

படிப்பகம்